விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 09 சனிக்கிழமை (26.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 311

# 'தமிழரின் தாகம் தமிழீழ தாயகம்'

## உணர்ச்சி பொங்க மாவீரர்கள் நினைவு கூரப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

எம் மாவீரர்களின் மூச்சுக்காற்றினையே நாம் சுவாசிக்கின்றோம் எம் மாவீரர்கள் சிந்திய இரத்தம் எங்கள் கடல்நீரில் கலந்தே இருக்கின்றது.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என நேற்று நடைபெற்ற வட மாகாண சபை முதலாவது அமர்வில் மாவீரர்கள் பெரும் எழுச்சி பொங்க நினைவு கூரப்பட்டனர்.

இவ் அமர்வில் உரையாற்றிய எதிர்க்கட்சி, ஆளும்கட்சி மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட அனைவரும் உயிரிழந்த போராளிகளிற்கும் மக்களிற்கும் தமது அஞ்சலியினை தெரிவித்திருந்தனர்.

மாவீரர்களின் விடுதலை வேட்கைகள் நினைவு கூரப்பட்ட போது அமர்விலும் அமர்விற்கு வெளியிலும் நின்றவர்கள் உணர்ச்சிகள் பொங்கி பரவசமடைந்தனர்.

எம் உயிரோடு கலந்த மாவீரர்களினை நாம் எவ்வாறு மறந்து விட முடியும் என மாகாண சபை உறுப்பினர்கள் சிலரும் வீரம் செறிந்த உரையினை ஆற்றியிருந்தனர்.

இந் நாள் வரலாற்றில் மிகவும் முக்கிய நாள். இவ் உலகில் எக்காலத்திலும் கண்டிராத மாபெரும் அழிவைச் சந்தித்த தமிழினம்,

தன் கண்ணீர்த்துளிகளை வாக்குகளாக மாற்றிப் பெருமைக்குரிய வெற்றியின் குரல்கள் ஒன்றாக பதிபு செய்யப்படுகின்ற முதல் நாள்.

அழிக்கப்பட்ட எமதருமை உளவினர்கள் தாம் புதைக்கப்படவில்லை அன்று விதைக்கப்பட்டோம் இன்று விருட்சமாகின்றோம் என உணர்ந்து கொண்டிருப்பார்கள் எனவும் மாகாண சபை உறுப்பினர்கள் உரையாற்றியிருந்தனர்.

மேலும் விரிவான உரைகள் உள்ளே... (செ-4,6)

# பிரிவினைவாதிகள் தமிழர்கள் அல்ல!

## சிங்களவர்களே உணருங்கள் - முதலமைச்சர்



(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் பிரிவினையை ஏற்கவில்லை என்பதை சிங்கள மக்கள் உணர வேண்டும் என்றும் உள்ளக சுயநிர்ணயம் ஒரு நாட்டைப் பிரிவுபடுத்தாமல் ஒற்றுமைப் பாதையில் கொண்டு செல்லக்கூடும் என்பதை அரசாங்கமும் சிங்கள மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

# வட மாகாண சபையின் முதலாவது அமர்வு நேற்று

(யாழ்ப்பாணம்)


வடக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு நேற்றுக்காலை 9.30 மணியளவில் கைதடியில் உள்ள மாகாண சபைக் கட்டிடத்தில் பேரவைச் செயலாளர் என்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் ஆரம்பமானது.

25 வருடங்களுக்குப் பின்னர் முதன் முறையாக வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் இடம்பெற்று அதனூடாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பங்குபெறும் கூட்டம் என்பதால் சில நடைமுறைகளைக் கூற வேண்டியுள்ளதாக செயலாளர் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் தெரிவு இடம்பெற்றது. இதன் போது அமைச்சர் த.குருகுலராஜா அவைத் தலைவராக ஆளும் கட்சி உறுப்பினர் 19-ம் பக்கம் பார்க்க

# தனியார் பேருந்துடன் மோ. சைக்கிள் மோதல்

## இருவர் பரிதாபப் பலி



(பளை)

தனியார் பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

யாழ். பளை எழுதுமட்டுவாள் பகுதியில் நேற்று அதிகாலை 4 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து இயந்திரக் 19-ம் பக்கம் பார்க்க

# பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்கிறது கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் கொழும்பில் நடக்கவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டை முற்றாக புறக்கணிக்கப் போவதாக தமிழ்த் தேசயக் கூட்டமைப்பு தீர்மானம் வெளியிட்டுள்ளது.

நேற்று பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணிவரை யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் அங்கத்துவ கட்சி உறுப்பினர்கள் மறறும் மாகாண சபை உறுப்பனர்களுக்கிடையிலான கலந்துரையாடல இடம்பெற்றுள்ளது.

மேற்படி கலந்துரையாடலின் முடிவிலேயே பொதுநலவாய மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எவரும் பங்கேற்பதில்லை என்ற முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. இம் முடிவினை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிகின்ற இலங்கை தமிழர 19-ம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண சபையின்

# அவைத் தலைவராக சிவஞானம் தெரிவு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவராக சீ.வீ.கந்தையா சிவஞானம் ஏனைய மாகாண சபை உறுப்பினர்களினால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் மூதலாவது அமர்வு நேற்று கைதடியலுள்ள மாகாண சபைக் கட்டிடத்தில் இடம்பெற 19-ம் பக்கம் பார்க்க

# நவம்பர் 11 இல் 2வது அமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி நடைபெறுமென அவைத் தலைவர் சீ.வீ.கந்தையா சிவஞானம் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் முலாவது அமர்வு நேற்றுக் காலை கைதடியிலுள்ள மாகாண சபையின் கட்டிடத்தில் நடைபெற்றது.

இந்த அமர்வின் இறுதியில் அவைத் தலைவர் மேற்கண்டவாறு அறிவித்தார். (செ-4,6)

# இராணுவம் அல்லாத ஒருவரே ஆளுநர் பதவிக்கு தகுதியானவர்

## முதலமைச்சர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

சிவில் நிர்வாகத்தை உண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவேற்கின்றார் என்றால் வட மாகாண ஆளுநர் பதவிக்கு தகைமையுடைய, இராணுவத்தினர் அல்லாத ஒருவரை நியமிக்க வேண்டும் என வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனது முதலாவது உரையிலேயே வெளிப்படுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு நேற்று கைதடியிலுள்ள மாகாண சபை கட்டிடத்தில் இடம்பெற 19-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கைக்கு எதிரான தூக்கு மேடை நிர்மாணிக்கப்படும் சத்தம் கேட்கிறது

## எச்சரிக்கிறார் தயான் ஜயதிலக்க

நாட்டின் தலைவருக்கும், முப்படையினருக்கும், இறையாண்மைக்கும், சுயாதீனத்திற்கும் எதிராக தூக்கு மேடை நிர்மாணிக்கும் சத்தம் கேட்பதாக ராஜதந்திரியும் ஜெனிவாவுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர பிரதிநிதியுமான தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மீதான சர்வதேசப் பார்வை குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் சர்வதேச அரசியலை எடுத்துக் கொண்டால், அது மிகவும் ஆபத்தான நிலைமையிலேயே இருப்பதாக எனக்கு தெரிகின்றது.

அரசாங்கத்தின் எண்ணத்திற்கு அமைய பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டை நடத்துவதன் மூலமும் அதன் தலைமைத்துவதை ஏற்பதன் மூலமும் பாரியளவான வெற்றி கிடைக்கும் என நம்புகிறேன்.

எனினும் இது அரைகுறையானது என்பது மட்டுமே உண்மை. பொதுநலவாயத்தின் தலைமைத்துவம் இலங்கைக்கு கிடைப்பது நன்மையான விடயம்.

சர்வதேச ஈழவாத அமைப்புகள் இலங்கையை தனிமைப்படுத்த முயற்சித்து வரும் வேளையில், பல நாடுகள் இலங்கைக்கு வந்து இரண்டு வருடங்களுக்கு இலங்கையின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளமை சாதகமான விடயமாகும்.

எனினும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் போது இலங்கைக்கு எதிராக பாரிய விமர்சனங்கள் முன்வைக்கப்பட வாய்ப்புள்ளது.

மாநாடு நெருங்கும் தருவாயில் சர்வதேச ஊடகங்கள் இலங்கைக்கு எதிராக மேலும் ஆழமான விமர்சனங்களை முன்வைக்கக் கூடும். இவை அனைத்தும் மாநாட்டை விட அடுத்த முக்கியமான சம்பவம் ஒன்றுக்கான அழுத்தங்களை ஏற்படுத்தும்.

2014 ஆம்ஆண்டு ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கை சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைகள் மற்றும் எடுக்கப்பட உள்ள தீர்மானம் தொடர்பில் இது அழுத்தங்களை ஏற்படுத்தும்.

போர் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற யோசனை 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முன்வைக்கப்படக் கூடிய சிறந்த சந்தர்ப்பம் உள்ளது. இது எவ்வாறான தோற்றப்பாட்டை ஏற்படுத்தும் என்பதை முற்கூட்டியே கணிக்க முடியாது. சர்வதேச விசாரணை நடத்துதல், இலங்கையின் போர் சம்பந்தமாக விசேட பிரதிநிதியை நியமித்தல் அல்லது ஆணைக்குழு ஒன்றை நியமித்தல் போன்ற யோசனை ஒன்று கட்டாயம் ஜெனிவாவில் முன்வைக்கப்படலாம் என்றார். (செ-11)


## காணியுடன் வீடு விற்பனை

2 பரப்புக்காணியில் மூன்று அறை, குசினி, விறாந்தை, ரொயிலட், கிணறு போன்றவற்றுடன் 12 தென்னை மரங்களும் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : சசிக்குமார் தர்மினி
கலையரசு வீதி, நவாலி தெற்கு,
மானிப்பாய்.
தொ.பே.இல. : 0774174251
(4353)





சுயதொழில் புரிவோருக்கான சம்மேளனம்

## முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம்

25.10.2013 அன்று நடைபெறுவதாக எம்மால் அறிவிக்கப்பட்டிருந்த பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறமாட்டாது என்பதினை தயவன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

குறிப்பு : *பொதுக்கூட்டம் தொடர்பான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.*

- தலைவர் - (4354) - செயலாளர் -



## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 06:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

வளர்ப்பு மீன் விற்பனைக்குண்டு
மாலை நேரம் மட்டும்

இப்போது கோழிப் பாகங்களும் (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்.

(C-5287)

நல்லூர் பாம் சென்ரர். 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.







## ஆறுமுகம் தங்கவேலோன்

அவர்களின் சேவை நலன் பாராட்டு
05.04.1993- 26.10.2013 வரை
நாகர்கோவில் உபதபாற்
கந்தோரில் சேவையாற்றி ஓய்வுபெற்றுச்
செல்லும் ஆறுமுகம் தங்க வேலோன்
அவர்களின்

## சேவை நலன் பாராட்டு

ஒருவர் மனதை ஒருவர் அறிந்து
உள்ளம் மகிழும் சேவை தன்னை
இருபதாண்டு காலம் வரைக்கும்
இனிதாய் நமக்குச் செய்து நின்றாய்

தங்க வேலோன் நாமம் எம்மூர்
எங்கும் தெரியும் எவரும் மெச்ச
பங்கம் இல்லாச் சேவை செய்தாய்
பலரும் உன்னைப் போற்ற வாழ்ந்தாய்

இடம் பெயர்ந்து நாங்கள் எல்லாம்
இன்னல் பட்ட வேளை தன்னில்
எங்கள் இல்லம் தேடி வந்தாய்
உந்தன் சேவை தன்னில் உயர்ந்தாய்

செய்யும் தொழிலே தெய்வம் என்ற
உய்யும் வழியே நீ உணர்ந்தாய்
மெய்யாய்ச் சொன்னோம் தெய்வம் உன்னை
மேன்மை ஆக்கும் நீடு வாழ்வீர்

முக்கிய கடிதமிது முகவரி தெரியவில்லை
தக்கபடி சேர்க்க வேண்டும் என்று பரிதவிப்பாய்
அப்படியான தொரு அன்பான சேவகனை
எப்படி நாம் மறப்போம் என்றுமே நிலைத்திருப்பாய்

- நாகர்கோவில் மக்கள் -

(C-5051)


# ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்

கோண்டாவில் பொது நூலகத்தினால் நடத்தப்படும் "ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்" எனும் கருப்பொருளிலான உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் வாகீஸ்வரி ஞானவைரவர் கலாசார மண்டபத்தில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் எஸ்.லலீசன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை இந்நிகழ்வில் லோ. வியேந்திரன் எழுதிய "கதை கூறும் கதைகள்" எனும் நூல் வெளியீடும் நடைபெறவுள்ளதுடன் நூலுக்கான ஆயவுரையை நல்லூர்ப பிரதேச சபை செயலாளர் மேரி ஜோசப சாந்தசீலன் வழங்கவுள்ளார். (செ-5)

# வழிகாட்டல் வகுப்பு

முகாமைத்துவ உதவியாளர் சேவையில் அதி சிறப்புக்குரிய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யா/நல்லூர் ஸ்தான அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது என வடமாகாண கல்வி அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (செ-5)

# கல்வி நிறுவனத்திற்கு விசமிகள் தீ வைப்பு

(கரணவாய்)

நெல்லியடி விக்னேஸ்வரா வீதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனம் விஷமிகளால தீயிட்டு கொழுத்தப்பட்டுள்ளது.



இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 10.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

குறித்த தனியார் கல்வி நிறுவனத்தில் மூன்று கொட்டகைகள் அமைந்திருந்த நிலையில் ஒரு கொட்டகையே எரியூட்டப்பட்டு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (செ-9-60)

# மரண அறிவித்தல்



## கதிரவேற்பிள்ளை பத்மநாதன்

*(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் இலங்கை புகையிரத இலாகா)*

*துன்னாலை வடக்கு, வல்லியானந்தத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட* ***கதிரவேற்பிள்ளை பத்மநாதன்*** *24.10.2013 அன்று காலமானார்.*

*அன்னார் அண்மையில் காலஞ்சென்ற அமரர் பூரணசந்திரோதயம் பத்மநாதனின் அன்புக் கணவரும் கதிரவேல் (நியூசிலாந்து), றோகினி (உதவிக் கல்விப் பணிப்பாளர் - விஞ்ஞானம், வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி), சாந்தினி (டுபாய்), நந்தினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சோ. கருணேஸ்வரன் (ஓய்வு நிலை அதிபர்), வே. காசிதாசன் (டுபாய்), தா. சிவகுமார், க. சிவரஞ்சினி (நியூசிலாந்து) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.*

*அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.*

தகவல் :
மகள் திருமதி றோகினி கருணேஸ்வரன்
உதவிக் கல்விப் பணிப்பாளர் - விஞ்ஞானம்,
வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி

(C-5287)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இழப்பது எப்படி ?

ஒருவன் ராமகிருஷ்ணரைத் தேடி வந்தான். அவன் ஆயிரம் பொற்காசுகள் வைத்திருந்தான். அதை அவரிடம் கொடுத்து இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மிகவும் பணிவாகக் கேட்டுக்கொண்டான். அவர் பார்த்தார்.

"இது எனக்குத் தேவை இல்லை. ஆனாலும் உன் மனதைப் புண்புடுத்த நான் விரும்பவில்லை. அதனால் நீ கொடுப்பதை வாங்கிக் கொள்கிறேன்" என்றார். வாங்கிக் கொண்டார். அதன் பின்னர் "இதோ பார் இனிமேல் இது எல்லாம் என்னுடையது தானே" என்றார்.

"ஆமாம் அதையெல்லாம் நான் உங்களுக்கே கொடுத்து விட்டேன்" என்றான்.

"சரி... இப்பொழுது நீ எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்" என்றார்.

"என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்" என்றார். "இந்த நாணயங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போய் கங்கை நதியில் எறிந்து விட்டுவா!" என்றார்.

இவனுக்கோ அதிர்ச்சி. என்ன செய்வது. இனிமேல் அது முடியாது என்றும் சொல்ல முடியாது. ஏனெனில், அந்த நாணயங்களையெல்லாம் அவருக்கே கொடுத்து விட்டான். இனிமேல் அதெல்லாம் இவனுடையது அல்ல.

பேசாமல் அவ்வளவையும் அள்ளிக்கொண்டு ஆற்றங் கரைக்குப் போனான். போனவன் திரும்பி வரவேயில்லை. ராமகிருஷ்ணருக்கு சந்தேகம் வந்துவிட்டது. அங்கிருந்த ஒருவரை அவன் எங்கே? அவனுக்கு என்ன நடந்தது? என்று போய் பார்த்துவிட்டு வா என்று அனுப்பினார். அவர் போய்ப் பார்த்துவிட்டு வந்து விபரத்தைக் கூறினார்.

"அவன் கங்கைக்கரையில் உட்கார்ந்து கொண்டு ஒவ்வொரு நாணயமாக ஒன்று இரண்டு என்று எண்ணி வீசிக்கொண்டிருக்கிறான். அவனைச் சுற்றி ஒரு கும்பல் நின்றுகொண்டு அவனைத் தடுத்துக் கொண்டிருக்கிறது" என்றார். இதைக் கேட்டதும் ராமகிருஷ்ணர் அங்கு புறப்பட்டுச் சென்றார்.

"என்ன இப்படி பண்ணிக் கொண்டிருக்கிறாய்? நான் உன்னை அந்த நாணயங்களை கங்கையில் வீசி எறியச் சொன்னேன். நீ ஏன் அதை எண்ணிக் கொண்டிருக்கிறாய்?" என்றார்.

ப்ழக்க்ம்தான் காரணம். நான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாக சேமித்து வைத்தேன். இப்பொழுது என்னிடம் நிறையவே இருக்கிறது. உங்களுக்கு ஆயிரம் நாணயங்களை கொடுக்க வேண்டும் என்பதுதான் எனது ஆசை என்றான். அதற்கு ராமகிருஷ்ணர்,

"ஒரே நேரத்தில் எல்லாவற்றையும் சம்பாதித்திருந்தால் நீ எண்ணுவது பொருத்தமாக இருக்கும். எல்லாவற்றையும் இழக்கும்போது எண்ணிக் கொண்டு இருப்பது என்பது சரியான மூடத்தனம். ஒரே தடவையாக எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விடு" என்றார்.

இங்கு இழப்பது என்பது ஓர் உயர்ந்த நிலை . இதை நம்முடைய யதார்த்த வாழ்க்கையில் சம்பந்தப்படுத்தி பார்த்து குழம்பிக் கொண்டிருக்கக்கூடாது. இழக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு இருக்கும் காசையெல்லாம் ஆற்றிலும் குளத்திலும் எறிந்து கொண்டிருந்தால் பார்ப்பவர்கள் சந்தேகப்படுவார்கள்.

இதில் நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், எதையாவது ஒன்றை இன்னொருவருக்கு கொடுக்க வேண்டும் என்று விரும்பினால் அதை மனப்பூர்வமாக கொடுக்க வேண்டும். கொடுத்துவிட்டு அதையே நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது.

நம்ம ஆள் ஒருவர் ஒரு நூறு ரூபாய் தாளை எடுத்து தனது நண்பர் ஒருவரிடம் கொடுத்து "இது உனக்குத் தான் வைத்துக்கொள்" என்றார். அவர் பார்த்தார்.

"இது இனிமேல் எனக்குத்தானே சொந்தம்?" என்றார்.

"ஆமாம்" என்றார்.

"அப்படியானால் எனக்காக நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும்" என்றார்.

"சொல்லுங்கள் செய்கிறேன்" என்றார்.

"இந்த நூறு ரூபாய் நோட்டை தீ வைத்து கொளுத்திவிடு" என்றார்.

இவர் அதிர்ச்சியுடன் அவரைப் பார்த்தார்.

அதற்கு அவர், "நீ எனக்கு அன்பாக கொடுத்த இது கள்ள நோட்டு என்று எனக்குத் தெரியும். சீக்கிரம் கொளுத்து" என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு ஆக்கத்திறன் போட்டி

(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலைய சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு ஆக்கத்திறன் போட்டியை நடாத்தவுள்ளது.

இப்போட்டிகள் கட்டுரை, சிறுகதை, கவிதை மற்றும் ஓவியப் போட்டிகளாக நடாத்தப்படவுள்ளன. இப்போட்டிகள் தரம் ஒன்பதிலிருந்து உயர்தரம் வரையான பாடசாலை மாணவர்களுக்குரியன, பொது மக்களுக்கு உரியன என இரண்டு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளன.

இதில், மாணவர்களின் கட்டுரைக்கான தலைப்புக்கள் மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டில் கல்வியின் முக்கியத்துவம், மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளும் கடமைகளும், மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டில் உள்ள உபகரணங்களும் அதன் பயன் பாடுகளும்.

பொது மக்களுக்கான கட்டுரைத் தலைப்புக்கள் மாற்றுத் திறனாளிகளின் விருத்தியில் சமூக மயமாக்கல் நிறுவன ங்களின் பங்கும் பணியும், மாற்றுத் திறனாளிகள் தொடர்பாக மாறிவரும் அணுகுமுறைகள், அபிவிருத்தியில் மாற்றுத்திறனாளிகள் என்பனவாகும்.

பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைகள் 750 சொற்களுக்குகுறையாமலும் 1000 சொற்களுக்கு மேற்படாமலும் அமைதல் வேண்டும், பொது மக்களுக்கான கட்டுரைகள் 1500 சொற்களுக்கு குறையாமலும் 2000 சொற்களுக்கு மேற்படாமலும் அமைதல் வேண்டும்.

கவிதைகள் மாற்றுத்திறனாளிகளுடன் தொடர்புபட்ட கருப் பொருட்களை உள்ளீர்த்தவையாக அமைதல் வேண்டும். கவிதை மரபுக் கவிதைகளாகவோ அல்லது புதுக் கவிதைகளாகவோ 40 வரிகளுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும். கவிதையின் உட்பொருளுக்கு அமைவாக தலைப்பு இடப்படுதல் வேண்டும்.

சிறுகதைகள் மாற்றுத்திறனாளிகளுடன் தொடர்புபட்ட கருப் பொருட்களை உள்ளீர்த்தவையாக அமைதல் வேண்டும். பாடசாலை மாணவர்களுக்கான சிறுகதைகள் 500 சொற்களுக்குகுறையாமலும் 700 சொற்களுக்கு மேற்படாமலும் அமைய வேண்டும். பொதுமக்களுக்கான சிறுகதைகள் 1000 சொற்களுக்கு குறையாமலும் 1250 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

கட்டுரைகள், சிறுகதைகள் ஏ4 தாளில் ஒரு பக்கத்தில் அமையக் கூடியவாறு கையெழுத்துக்களாகவோ அல்லது கணனிப் பதிப்பாகவோ அமையவேண்டும்.

மேலும், சித்திர வடிவமைப்பு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியலை சித்திரிக்கும் வகையில் அமைதல் வேண்டும் .

மாணவர்கள், பொது மக்கள்தமது ஆக்கங்களை இல. 90, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ் ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரடி யாகவோ, தபால் மூலமாகவோ எதிர் வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திக திக்கு முன்னர் அனுப்பிவைக்கலாம்.

மேலும் ஒருவர் எத்தனை ஆக்கங்களையும் அனுப்பி வைக்க முடியும். பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள் யாவும் அவர்களது சொந்த ஆக்கங்கள் என அதிபரினாலும் பொதுமக்களது ஆக்கங்கள் யாவும் சமாதான நீதவான் ஒருவராலும்உறுதிப்படுத்தப்படல்வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-7)

# துயிலுமில்ல வளாகத்தில் இராணுவ முகாம் அமைப்பு தடுத்து நிறுத்த கோரிக்கை

(பொற்பதி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள, உடுத்துறை மகாவித்தியாலத்திற்கு வடக்குப் புறமாகவுள்ள பிரதான வீதியிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்திலுள்ள உடுத்துறை மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தினுள் புதிதாக அமைக்கப்பட்டு வரும் இராணுவ முகாமை தடுத்து நிறுத்துமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இம் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள வீதியை மருதங்கேணி சந்திப்பகுதிக்கு செல்கின்றவர்கள், உடுத்துறை, வத்திராயன் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள கிழக்குப்பகுதி மாணவர்கள், கிறிஸ்தவ தேவாலயத்திற்கு செல்பவர்கள் என அநேகமானவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறான பகுதியில் இராணுவ முகாம் அமைப்பது அச்சத்தை ஏற்படுத்துகின்றது என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் குறித்த இராணுவ முகாம் அமைப்பதை தடுத்துநிறுத்த வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர். (அ-9-64)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 140 | 100 - 120 | 130 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 100 |
| தக்காளி | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 50 |
| கோவா | 40 | 60 | 60 |
| கரட் | 40 | 40 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 120 |
| பாகற்காய் | 100 | 90 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 35 | 70 |
| பயற்றங்காய் | 100 | 120 | 120 |
| லீக்ஸ் | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 20 | 20 | 40 |
| கறிமிளகாய் | 80 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 80 | 140 | 80 |
| போஞ்சி | 100 | 110 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 20 |
| தேசிக்காய் | 300 | 350 | 250 |
| தேங்காய் (ஒன்று) | [illegible] | 50 | 40 - 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசி பலன்

26.10.2013
(ஐப்பசி 09, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
சப்தமி பிற்பகல் 2.54 மணிவரை
புனர்பூசம் பிற்பகல் 4.30 மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை
சுபநேரம் 3.02-4.33 மணிவரை

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தாய் வழியில் அனுகூலமுண்டு, கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும், போசன சுகமுண்டு.

**இடபம்** உடல்நலனில் அக்கறை காட்டுவீர்கள், உடன் பிறப்புக்கள் மூலம் உற்சாகமான செய்திகள் வந்து சேரலாம், வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம்.

**மிதுனம்** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், மாதர் நட்புண்டு, எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** பயணத்தால் பலன் கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**சிங்கம்** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சயன சுகக்குறைவான நாள், உறவினர்களைக் காண பயணமொன்றை மேற்கொள்வீர்கள், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கன்னி** யோகமான நாள், இளைய சகோதரத்தின் வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறும், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், விரதங்களில் நம்பிக்கை கூடும்.

**துலாம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும், பிரியமான சிலரின் சந்திப்புகள் இடம்பெறலாம், அந்நியர் சந்திப்புண்டு.

**விருச்சிகம்** திடீர் பயணங்களால் நன்மையுண்டு, சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சுற்றத்தாரின் வருகையுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

**தனுசு** எதையும் சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், சிலர் கௌரவக்குறைவாக நடந்து கொள்ளலாம், மறதியால் சில தொல்லைகளுக்கு உட்பட நேரிடலாம்.

**மகரம்** நினைத்த காரியங்கள் நிறைவேறும் நாள், நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்.

**கும்பம்** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுவாரஸ்யமான நாள், பயணங்களால் பலனுண்டு, குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், போசன சுகமுண்டு.

**மீனம்** ஆசைகள் நிறைவேற ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் கல்வி நலன்கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், தொழில் வளர்ச்சியுண்டு, வருமானம் திருப்திதரும்.

வளவன்

# மாணவர் ஆரோக்கிய மேம்பாடு நூல் வெளியீட்டு விழா இன்று

சுகாதார கல்வியாளர் கா. வைத்தீஸ்வரனின் மாணவர் ஆரோக்கிய மேம்பாடு நூல் வெளியீட்டு விழா இன்று 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு லயன் அ.குகதாசன் தலைமையில் இணுவில் அறிவாலயத்தில் நடைபெறும்.

முதன்மை விருந்தினர்களாக கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு .திருமுருகன், சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தம்பதியினர் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா, கலை இலக்கியப் பேரவை சட்டத்தரணி சோ.தேவராஜா, இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கமலராணி கிருஸ்ணபிள்ளை, இணுவில் மத்திய கல்லூரி அதிபர் நா.சிவனேசன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நா.கமலநாதனின் இறை ஆராதனையுடன் ஆரம்பமாகும் இந் நிகழ்வில் மா.ந.பரமேஸ்வரனின் வரவேற்புரையைத் தொடர்ந்து பிரமுகர்களின் உரை இடம்பெறும். சமாதான நீதவான் பி.கனகசபாபதியின் நூல் வெளியீட்டுரையையடுத்து லயன் செ.சிவலிங்கம் தம்பதியினருக்கு நூலின் முதற்பிரதி வழங்கப்படும். திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் ந.விஜயசுந்தரம் நூல் விமர்சன உரையை ஆற்றுவார். தொடர்ந்து நூலாசிரியர் கா.வைத்தீஸ்வரனின் ஏற்புரை இடம்பெறும்.(ந)




# வடமராட்சி கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்தில் வெற்றிடமாகியுள்ள யா/வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி அதிபர் பதவிக்கான விண்ணப்ப தகைமைகளாக, விண்ணப்பதாரி இலங்கை அதிபர் சேவையில் 2-II இற்கு மேற்பட்ட தரமுடையவர்கள் அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-I இற்கு தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

மேலும் வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும் என்பதோடு விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையை ஆற்றியிருத்தல் வேண்டும்.

எனினும் இலங்கை அதிபர் சேவையிலுள்ள அதிபராக கடமையாற்றாதவர்களும் இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என்பதோடு மேற்குறித்த தகைமையை இவர்கள் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை அதிபர் சேவையை சேர்ந்தவர்களது பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் மாத்திரம் ஆசிரியர் சேவையை சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இதன்படி இப் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு தோற்றுதல் வேண்டும் என்பதோடு தேவையேற்படின் எழுத்துப் பரீட்சைக்கும் தோற்றுதல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

## கலந்துரையாடல்

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக தெல்லிப்பழை வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந் தெரிவித்துள் ளார்.

எனவே பேரவையின் நிர்வாகக்குழு உறுப்பினர்களையும்மற்றும் ஆலோசனைக்குழு உறுப்பினர்களையும் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

## ச.ச நிலையங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு அபிவிருத்தியின் தேவை கருதி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென சபை ஏற்கனவே தீர்மானித்திருந்ததன் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக சபையின் தலைவர் வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

இதன்படி, மேற்படி பிரதேச சபையின் கீழ் 48 சனசமூக நிலையங்களை இயங்கி வருகின்றன.

அவற்றின் அபிவிருத்தித் தேவையின் படி நிதி ஒதுக்கீடு எதிர்வரும் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஒவ்வொரு சனசமூக நிலையத்துக்கும் சுமார் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை தேவைப்படலாம் என சபை தீர்மானித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ-9)

# வடக்கு மக்களின் பொருளாதார நிலையை மதிப்பீடு செய்யுங்கள்

## அரச அதிகாரிகளிடம் மாவை கோரிக்கை

ஜனநாயகத்தை மதிக்கும் அரசு இந்நாட்டில் இருந்திருந்தால் பேரழிவுகளை நாம் சந்தித்திருக்க வேண்டியதில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றுகையில், இறுதி யுத்தத்தின் பின் முட்கம்பிகளுக்குள் இருந்த மூன்றரை இலட்சம் மக்கள் பல அடக்கு முறைகளின் மத்தியிலும் எமக்கு வாக்களித்திருந்தனர்.

இலங்கை இராணுவத்தினர் வெளிநாட்டு இராணுவத்தினர் போல் எமது பிரதேசத்திலிருந்து வெளியேற மறுக்கின்றனர்.

இராணுவத்தினருக்கு ஆதரவாக அவர்களது உறவினர்கள் எம் பிரதேசத்துக்கு வந்து செல்கின்றனர்.

எமது மண்ணை மீட்க நாமே முன்வர வேண்டும். இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் நீங்கள் மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்றால், உங்கள் கருத்துக்களை மதித்து பிரதேச அபிவிருத்திக்கு உதவ முடியும் எனத் தெரிவித்திருந்தமையால் அந்நாடுகள் உதவுமென நம்புகின்றோம்.

அத்தோடு தமிழ் மக்கள் யுத்தத்தினால் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கியுள்ளனர்.

எனவே, வடமாகாண சபைக்குட்பட்ட அரச அதிகாரிகள் இது தொடர்பில் மதிப்பீடுகளை செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (அ-9-19)

## பரிசளிப்பு விழா

கரணவாய் வேதாரணிஸ்வரா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வு வித்தியாலய அதிபர் தனபாலசிங்கம் பாலகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளதுடன் பிரதம விருந்தினராக நெல்லியடி மக்கள் வங்கியின் முகாமையாளர் திருமதி கலைவாணி குணசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக, வித்தியாலயத்தின் பழைய மாணவன் செ. மயூரன், கரணவாய் கிழக்கு கிராம அலுவலர் சி.அசோகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-9-60)




# நாடக விழாவும் பரிசளிப்பும்

(தும்பளை)

கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் வழிகாட்டலில் வடமராட்சி வடக்கு பிரதேச செயல கலாசார பேரவை நடத்தும் இவ்வாண்டுக்கான நாடக விழாவும் பரிசளிப்பு வைபவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 க்கு பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய பர்வதவர்த்தினி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் நா.ஞானக்குமரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி.என் ஸ்ரீதேவி, யாழ் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் பணிப்பாளர் தே.தேவாணந், யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி எஸ்.சுந்த ரேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9-19)



வடமாகாண சபை கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடக்கு மாகாணசபை முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் நாடாவை வெட்டி கட்டடத்தை திறந்து வைப்பதையும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மருத்துவ உதவிப் பணம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ஆர்.கரன், உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய உச்சி மாநாட்டில் அழுத்தம் பிரயோகிக்க முடியாது

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

**பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சிமாநாடு இலங்கையில் நடத்த தீர்மானிக்கப்படவுள்ளமையானது இலங்கையின் தனிப்பட்டதொரு விடயமாகாது. இது பலதரப்பட்ட நாடுகளின் ஒன்றுகூடல். இதில் ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது அழுத்தம் பிரயோகிப்பது சாத்தியமில்லையென வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.**

நியூசிலாந்து மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் இலங்கையின் தனிப்பட்ட விவகாரங்கள் குறித்து அழுத்தம் கொடுப்பதற்காகவே உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவிருப்பதாக இணையத்தளங்களில் வெளியாகியுள்ள செய்திகளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இலங்கை குறித்து தவறான கண்ணோட்டம் கொண்டிருக்கும் நாடுகள் நேரடியாக விஜயம் செய்வதன் மூலம் கள நிலைமைகளை நேரில் ஆராய்ந்து தமது சந்தேகங்களை தீர்த்துக்கொள்ள முடியுமெனவும் அவர் கூறினார். பொதுநலவாய உச்சி மாநாடு இலங்கையில் நடத்தப்படுகிறதே தவிர இது இலங்கைக்கு மட்டும் உரியதொரு நிகழ்வு ஆகாது. கடந்த காலங்களில் நடைபெற்ற பொதுநலவாய மாநாடுகளில் பெற்ற அனுபவங்களைப் பொறுத்தவுரையில் இதில் கலந்து கொள்ளும் உறுப்புரிமை நாடுகள் பொதுநலவாய செயலகத்தின் அனுமதியுடன் அதற்குரிய தருணத்தில் தமது தனிப்பட்ட அபிப்பிராயங்களை முன்வைப்பதுண்டு. இருப்பினும், அவை எழுத்துருவில் சமர்ப்பிக்கப்படுவது இல்லை.

பொதுவாக உச்சி மாநாட்டில் கருத்துகள் முன்வைக்கப்படும் நேரத்தில் ஒவ்வொரு நாடும் அதன் ஏனைய உறுப்புரிமை நாடுகளின் ஆர்வத்தைக் கவரும் வகையிலான பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து தமது அபிப்பிராயங்களை தெரிவிப்பதே வழமையான செயன்முறையாகுமென சுட்டிக்காட்டினார். அதேபோனறு பொதுநலவாய உறுப்புரிமை நாடுகளின் ஒத்துழைப்புடன் இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள உச்சி மாநாடு மிக சிறப்பாக நடைபெறுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் நம்பிக்கை வெளியிட்டார். (அ-2)

## மனனப் போட்டி முடிவுகள்

வலி.கிழக்கு சைவ சமய அருள் நெறி மன்றத்தால் நவராத்திரி விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட சகலகலாவல்லிமாலை மனனப் போட்டிகளில் முடிவுகள் வெளியாகியுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**கீழ்ப்பிரிவு**

ஈ.திசானா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), சி.பனுஜன் (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), ம.ஜினோபன் (யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)

**மேற்பிரிவு**

செல்வி அபிநயா ரவீந்திரன் (யா/புனித றோமன் பொஸ்கோ வித்தியாலயம்), செல்வி ஜெ.ரித்திகா( யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), செல்வி நா.கஜனி (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) (அ-2)

## வீதியை புனரமைக்குக

சாவகச்சேரி கேரதீவு வீதியிலிருந்து நுணாவில் பகுதிக்குச் செல்லும் தேவாலய வீதி சுமார் 30 வருடங்களுக்கு மேலாக புனரமைப்பு செய்யப்படாமல் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதி சுமார் 3 கிலோமீற்றர்தூரமுடையதாக காணப்படுகின்றதுடன் போக் குவரத்தை செய்ய முடியாதளவிற்கு குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

மேற்படி வீதியினால் கைதடி, நாவற்குழி, மறவன் புலோ, தனங்கிளப்பு போன்ற பிரதேச மக்கள் அதிகமாகப் பாவித்து வருகின்றனர். எனவே, பிரதேச மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்த குறித்த வீதியினை சம்பந்தப்பட்டோர் புன ரமைப்புச் செய்யமுன்வரவேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (அ-237)


காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம் நடாத்தும்
கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் - 2013
அழைப்பிதழ்

காலம்: 2013.10.27 ஞாயிற்றுக்கிழமை நேரம்: பி.ப. 2 மணி

இடம்: நல்லூர் துர்க்கா மணி மண்டபம்

தலைவர் : திரு.என்.சோதிநாதன் அவர்கள் (தலைவர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

பிரதம விருந்தினர்கள்
பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் (முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)
திருமதி சரஸ்வதி சிவலிங்கராஜா (ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி)

சிறப்பு விருந்தினர்கள்
காரை. திரு. எஸ்.தயானந்தா அவர்கள் (பிரதேச செயலர், மன்னார் நகரம்)
திருமதி தேவந்தினி பாபு அவர்கள் (பிரதேச செயலர், பிரதேச செயலகம், காரைநகர்)

கௌரவ விருந்தினர்
வைத்திய கலாநிதி திரு.எஸ்.கண்ணதாசன் அவர்கள் (சிரேஸ்ட விரிவுரையாளர், மருத்துவபீடம், யாழ்ப்பாணம்)
நுண்கலைமாணி, திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன் (ஆசிரியை, யா/விக்டோரியா கல்லூரி, சுழிபுரம்)
திரு.திருமதி எஸ்.சிவஞானம் உமாதேவி தம்பதியினர் (கௌரவ உறுப்பினர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

நிகழ்ச்சி நிரல்
⇨ மங்கல விளக்கேற்றல் ⇨ இறைவணக்கம் கலாமன்ற இசைத்துறை மாணவிகள்
⇨ வரவேற்புரை திரு.இ.திருப்புகலூர் சிங்கம் (செயலாளர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)
⇨ ஆசியுரை : நல்லை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
⇨ தலைமையுரை கலாமன்ற அறநெறிதுறை வழங்கும் பேச்சு
⇨ கலாமன்ற இசைத்துறை வழங்கும் இசைக்கச்சேரி
வயலின் : கலாவித்தகர் திரு.ப.சியாம்கிருஸ்ணா, மிருதங்கம்: லயஞானசுரபி திரு. மா.சிதம்பரநாதன், கலாமன்ற மாணவன் செல்வன் ஞா.திரிபுராங்கன், கெஞ்சிரா: கலா வித்தகர் திரு.தி.சண்முகசுந்தரம், முகர்சிங்: கலாவித்தகர் திரு.க.நந்தகுமார்
⇨ சிறப்பு விருந்தினர் உரை:
⇨ கலாமன்ற யோகாசனத்துறை வழங்கும் அரங்க ஆற்றுகை
⇨ கலாமன்ற மிருதங்கத்துறை வழங்கும் மிருதங்க இசை
⇨ சிறப்பு விருந்தினர் உரை
⇨ கலாமன்ற நடனத்துறை வழங்கும் நாட்டியாஞ்சலி
நட்டுவாங்கம் :நுண்கலைமாணி செல்வி சியாமளா சின்னராசா, பாட்டு: நுண்கலைமாணி ஸ்ரீமதி பங்கயச் செல்வி முகுந்தன், நுண்கலைமாணி காரை லீலாவதி இராசரத்தினம், மிருதங்கம்: கலாவித்தகர் திரு.க.நந்தகுமார், வயலின்: கலாவித்தகர் திரு.ப.சியாம்கிருஸ்ணா
⇨ கலாமன்ற நாடகத்துறை ஆசிரியர்கள் வழங்கும் 'சாட்சி'நாடகம்
⇨ பிரதம விருந்தினர் உரை ⇨ பரிசில் வழங்கல்
⇨ சிறப்பு பட்டிமண்டபம்
⇨ நன்றியுரை: திரு.ச.இராசநாயகம் (உபதலைவர், கிழவன்காடு, கலாமன்றம் காரைநகர்)

சிறப்பு பட்டி மண்டபம்
தமிழ் திரையுலகம் தமிழ் பண்பாட்டைப் பேணுகிறது! பேணவில்லை!
நடுவர்: பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் (முன்னாள் தமிழ்த்துறை தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)

| பேணுகிறது! | பேணவில்லை! |
|---|---|
| தமிழருவி காரை.த.சிவகுமாரன் (தலைவர், வவுனியா மாவட்ட தமிழ்ச் சங்கம்) | பேராசிரியர் தி.வேல்நம்பி (பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம், யாழ்.பல்கலைக்கழகம்) |
| திரு.கு.பாலசண்முகன் (ஆசிரியர், சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்) | திரு.எஸ்.லலீசன் (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை) |
| திரு.பரா.ரமேஸ் (காணி மாவட்ட பதிவகம், யாழ்ப்பாணம்) | திரு.இ.சர்வேஸ்வரா (உதவிப் பதிவாளர், மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) |

குறிப்பு: குறித்த நேரத்தில் நிகழ்வினை ஆரம்பிப்பதற்கு அனைவரது ஒத்துழைப்பினை எதிர்பார்க்கின்றோம். நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்றத்திலிருந்து பி.ப.1 மணிக்கு 782 இலக்க வழிப்பாதையூடாக இடம்பெறும்.கலாமன்றத்தினால் வெளியீடு செய்யப்பட்ட 'சிதம்பர தரிசனம்' இறுவட்டு பிரதி ஒன்று 300/- இற்கு நிகழ்வு நடைபெறும் மண்டபத்தில் விற்பனையாகவுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர் (C/5285)
நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள்.



INNOVAGE INTERNATIONAL
VACANCY

எமது Optimo Group Companyக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள துடிப்பும், ஆர்வமும், தன்னம்பிக்கையும் கொண்ட இளைஞர் யுவதிகள் தேவைப்படுகின்றனர்.
➡ மேற்பார்வையாளர் (Supervisor)
➡ முகாமைத்துவ பயிற்சியாளர் (Management Trainee)
➡ களஞ்சிய மேற்பார்வையாளர் (Store Supervisor)
➡ சந்தைப்படுத்துனர்கள் (Distributors)
ஆகியோர் தேவைப்படுகின்றனர்.
➡ வயதெல்லை 18-35
➡ தங்குமிடம் & உணவு இலவசம்.
➡ இலவசமாக சிங்கள & ஆங்கில வகுப்புக்கள் நடைபெறும்.
(4334)
தொடர்புகளுக்கு: 0776219536, 0771906728



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1975 இந்து (V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 16<br>தகைமை/தொழில்: A/L (UK not PR)<br>தொ.இ: B 2401 | பிறப்பு: 1978 இந்து (V)<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 75 செவ் 7ல்<br>உயரம்: 164 cm<br>தகைமை/தொழில்: BA (ஆசிரியை)<br>தொ.இ:G 2402 |
| பிறப்பு: 1978 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 19 செவ்: 12ல்<br>உயரம்: 5'7''<br>தகைமை/தொழில்:-A/L Sweden (PR)<br>தொ.இ: B 2404 | பிறப்பு: 1983 இந்து (KO)<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 16.5 சூரி, செவ் 3ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: B.Com (வங்கி காசாளர்)<br>தொ.இ: G 2403 |
| பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: 36.25 சூரி, செவ் 3ல்<br>உயரம்: 5'4''<br>தகைம்மை/தொழில்: A/L Civil Eng. Q.S. To. (அரச)<br>தொ.இ: B 2405 | பிறப்பு: 1987 இந்து (V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: 52 சூரி, செவ் 8இல்<br>உயரம்: 154 cm<br>தகைமை/தொழில்: BA (Final) கணக்காளர் (தனியார்)<br>தொ.இ: G2408 |
| பிறப்பு: 1983<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>கி.பா: 15, சூரி,செவ். 4ல்<br>உயரம்: 5' 10''<br>தகைமை/தொழில்: (College Diploma) கனடா Citizan கணக்காளர்<br>தொ.இ: B 2406 | பிறப்பு: 1981 இந்து (Sa)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>உயரம்: 5'3''<br>கி.பா: 11.75 செவ் 2ல்<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G 2412 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றவே தமிழ்பேசும் மக்கள் கூட்டமைப்பிற்கு வாக்களித்தனர்

## முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டுமென்பதற்காகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு மக்கள் வாக்களித்திருந்தனர் என்றும் போர் வீரர்கள் இராணுவ வாழ்க்கையிலிருந்து குடிமக்கள் வாழ்க்கைக்கு மாற சர்வதேச உதவிகள் பெறக்கூடுமா என்பதைப் பற்றி அரசு ஆராய்ந்தால் அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவிருப்பதாகவும் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு நேற்றுக் காலை கைதடியிலுள்ள மாகாண சபை கட்டடத்தில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவமானது வடமாகாணத்தில் உடனேயே அதன் முகாம்களுக்குள் முடக்கப்பட வேண்டும். மாகாணத்தின் வயது எய்திய குடிமக்கள் ஐவருக்கு ஒருவர் இராணுவப் போர் வீரராக வலம்வரும்போது முறையான படைத்துறை சாராத குடிமக்கள் சார்ந்த நிர்வாகத்தை நாம் முன்நடத்த முடியாது.

எமது மக்கள் எமது கட்சிக்கு ஏகோபித்த ஆதரவை வழங்கியதில் இருந்து இராணுவத்தைக் கட்டுப்படுத்தி படிப்படியாக வடமாகாணத்திலிருந்து வெளியேற்றவேண்டும் என்ற எங்கள் கொள்கைகளை அவர்கள் மனமார அங்கீகரித்துள்ளமை புலனாகின்றது.

படிப்படியான இராணுவ வெளியேற்றம் பற்றி அரசாங்கமும் கூறிவருவது மனமகிழ்வை ஏற்படுத்துகின்றது. நடைமுறையில் மாற்றங்களை நாம் காணாது விட்டாலும் உரிய பேச்சு வார்த்தையின் பின்னர் திடமான திட்டம் ஒன்றை இது சம்பந்தமாக வடமாகாண சபையினராகிய நாங்களும் அரசாங்கமும் தீட்ட வேண்டி வரும்.

• அப்பொழுது பாதுகாப்பு பற்றிய சீர்திருத்தங்கள் கருத்துக்கெடுப்பாலன. சர்வதேச ரீதியாக கைது செய்யப்பட்டவர்கள், மேலும் சரணடைந்த போராளிகள் ஆகியோர் எவ்வாறு ஆயுத நீக்கத்திற்கும் இராணுவக் கலைப்புக்கும் மீள் சமூக இணைப்புக்கும் உட்படுத்தப்படுகின்றார்களோ அதேபோல் பாதுகாப்பு கோணஞ்சார் சீர்திருத்தங்கள் இராணுவத்தினரைக் குறைத்து பாதுகாப்பு நிறுவனங்களைக்கூடிய தொழிற்றிறனுடன் செயற்பட வழி வகுக்கின்றன.

இது சம்பந்தமாக அரசாங்கமானது ஐக்கிய நாடுகளின் அமைதிப் படைகளில் மேற்படி போர் வீரர்களை சேர்த்துக்கொள்ள முடியுமா என்பது பற்றியும் ஆராயலாம்.

போர் வீரர்கள் இராணுவ வாழ்க்கையில் இருந்து குடிமக்கள் வாழ்க்கைக்கு மாற சர்வதேச உதவிகள் பெறக்கூடுமா? என்பதைப் பற்றியும் அரசு ஆராயலாம். எமது ஒத்துழைப்பு இவையாவிலும் அரசாங்கத்திற்கு முழு அளவில் வழங்கப்படும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

இராணுவத்தினர் உரியவாறு வாபஸ் பெற்றுச் செல்வதை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தினது கடமை ஆகும். அதேபோல் வடமாகாணத்தில் மற்றைய இயக்கங்கள் சார்ந்த துணைப்படைகளும் ஆயுத நீக்கத்திற்கும் படைக்கலைப்புக்கும் மீள் சமூக இணைப்புக்கும் உட்படுத்தப்படவேண்டும்.

தேசியப் பாதுகாப்பு என்ற அடிப்படையில் இராணுவத்தை வடமாகாணத்தில் நிறுத்தி வைக்கவேண்டிய நிலைமையை உருவாக்க எம்மக்கள் இனிமேல் எப்போதும் இடமளிக்க மாட்டார்கள் என்று ஆணித்தரமாக நாங்கள் கூறிவைக்கின்றோம்.

இராணுவத்தினரோ துணை இராணுவத்தினரோ இராணுவத்தை வெளியேறாது தடுக்க நாடகங்கள் இயற்றக்கூடும். அவற்றுக்கு எவரும் ஏமாந்து விடக்கூடாது என்று கோருகின்றோம்.

மக்களின் காணி உரிமைகளை வலியுறுத்தும் முறைமையே ஜனநாயக முறைமை. இராணுவ பாவனைக்காக பொதுமக்களின் காணிகளை அரசாங்கம் சுவீகரிப்பதை நிறுத்த அரசாங்கம் முன்வரவேண்டும். அது மட்டுமல்ல இதுவரையில் இராணுவம் கையேற்ற காணிகளை அதன் உண்மையான உரித்தாளர்களிடம் கூடுமான விரைவில் இராணுவம் திருப்பிக்கொடுக்க கால அட்டவணை ஒன்று தயாரிக்கப்படல் அவசியம் என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

தக்க பாதுகாப்புச்சூழலை மக்களுக்காக அமைப்பதானது ஜனநாயக முறைமைக்கு அத்தியாவசியமானது. இது சம்பந்தமாக சட்டத்தின் ஆட்சி (Rule of Law) நிறுவப்படுவது அத்தியாவசிமானது. இச்சூழலை வடமாகாணத்தில் உருவாக்குவதற்கு மக்களின் மொழி, அவர்களின் கலை, கலாசாரம், வாழ்க்கை முறை ஆகியனவற்றை புரியாத பொலிஸ் படை தொடர்ந்து இருப்பது தடையாக இருக்கின்றது.

எனவே உள்ளூரிலிருந்து தமிழ்ப்பேசும் பொலிஸ் அலுவலர்களை சேர்த்தெடுத்து அவர்களுக்கும் போதிய பயிற்சியளித்து அவர்களைப் பொலிஸ் படையினுள் சேர்த்தெடுத்து பொலிஸ் அதிகாரங்கள் பற்றி 13ஆவது திருத்தச் சட்டம் கூறியிருப்பனவற்றை முற்று முழுதாக நடைமுறைப்படுத்த நாம் ஆவன செய்யவிருக்கின்றோம்.

இது சம்பந்தமாக பிராந்திய பொலிஸ் சீர்திருத்தங்கள் எமது கவனத்தை ஈர்ப்பன என்பதை இத்தருணத்தில் கூறி வைக்கின்றேன்.



ஜனநாயக முறைமையை வலியுறுத்தத் தேவையான மற்றைய அம்சங்கள், வெளிப்பாட்டுத் தன்மை பதிலளிக்கவேண்டிய கடப்பாடு மற்றும் சட்டவாட்சிக் கொள்கை என்பன இவற்றின் அடிப்படையிலேயே வடமாகாண சபை இயங்கும்.

எனவே இலஞ்ச ஊழல்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது. மாகாண சபை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கடமைகளும் கடப்பாடுகளும் கட்டமைத்துக் கொடுக்கப்படுவன.

அவர்களின் முன்னேற்றம் காலத்திற்குக் காலம் மறு ஆய்வு செய்யப்பட்டு மக்கள் மத்தியில் தெரியப்படுத்தப்படும். அலுவலர் நிர்வாகத்தில் அரசியல் குறுக்கீடுகள் அனைத்துக் கொள்ளப்படமாட்டா. மக்களுக்காக மாகாண சபை அலுவலர்களும் உறுப்பினர்களும் கடமையாற்றுகின்றார்களே தவிர எமக்காக மக்கள் என்ற எண்ணத்தை இனிமேல் யாவரும் கைவிடவேண்டும்.

மக்கள் சேவையை மதிக்காது நடக்கும் அலுவலர்கள் அடையாளம் கண்டு சீர்படுத்தப்படுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-4-6)

# புகையிரத பாதையை உரிய முறையில் புனரமைக்குக

(கிளிநொச்சி)

ஏ-9 வீதியில் இருந்து மேற்குப் புறமாக புகையிரத பாதையை ஊடறுத்து செல்லும் கணேசபுரம் வீதியில் புகையிரதப் பாதை உரிய முறையில் புனரமைக்கப்படாதுள்ளது.

இந்த வீதியால் ஜெயந்திநகர், உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு, சிவநகர், நேவில் ஆகிய பகுதிகளுக்கு செல்லும் பயணிகள் கஷ்டமடைய கூடியதாக உள்ளது.

அத்துடன் கணேசபுரம் பகுதியில் அமைந்துள்ள கால்நடை அபிவிருத்தி திணைக்களம், கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் களஞ்சியம் என்பன உள்ள போதிலும் இந்த வீதி புனரமைப்பு செய்யப்படாமையால் பல இடையூறுகளை சந்திக்க வேண்டி உள்ளது.

அத்துடன் கணேசபுரம் வயல் பகுதிக்கு பயிர்ச் செய்கைக்காக செல்லுகின்ற உழவு இயந்திரம், ஏனைய வாகனங்கள் புகையிரத கடவைக்கு அருகாமையில் வெட்டப்பட்டுள்ள பாலத்தின் பள்ளத்துக்குள் குடைசாய்ந்து உள்ளன.

எனவே புகையிரத பாதையின் கருங்கற்கள் செப்பனிடப்பட்டு உரிய முறையில் போக்குவரத்துக்கு உதவ வேண்டுமென பயணிகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-250)

# கால்நடைகளை கட்டுப்படுத்துக



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட புதுமுறிப்பு குளத்தின் கீழ் நெற்பயிர்ச் செய்கை ஆரம்பித்து முடிவடைந்த நிலையில் கட்டக்காலி கால்நடைகள் இதுவரை கட்டுப்படுத்தப்படாமையால் இவற்றை இன்று சனிக்கிழமை தொடக்கம் கட்டுப்படுத்துமாறு சிவநகர் கமக்கார அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

கால்நடைகளை கட்டுப்படுத்தத் தவறும் பட்சத்தில் கால்நடை உரிமையாளர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-254)






பூநகரி பிரதேச கலாசாரவிழா நேற்று முன்தினம் பூநகரி வாடியடி மைதானத்தில் நடைபெற்ற போது அன்று கலை நகரி விருது பெற்ற கலைஞர்கள் மூவரும் விருந்தினர்களுடன் அரங்கில் நிற்பதையும், நெஞ்சு பொறுக்குதில்லை கவி அரங்கில் பங்கு பற்றியோரையும், வெளியிட்டு வைக்கப்பட்ட **பூந்துணர்** நறவம் 3 சஞ்சிகையின் முதற் பிரதியை பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் பிரதம விருந்தினரும் கிளி.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான செ.ஸ்ரீனிவாசனுக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்...
(படங்கள்:- பூநகரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புக்கான நிதியொதுக்கீடு குறித்து அரசாங்கம் மௌனம்

## யோகராஜன் எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டுமக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றங்களை எதிர்பார்க்கவில்லை. தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறு அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் நாட்டின் பாதுகாப்புச் செலவை மேலும் மேலும் அதிகரித்துள்ளது. வருடாந்தம் பாதுகாப்பு அமைச்சுக்காக 250 பில்லியன் ரூபா ஒதுக்கப்படுகிறது. இது நாட்டின் மொத்த செலவில் 5இல் ஒரு வீதமாகும்.

ஆயினும் இது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் பதிலளிக்க அரசாங்கம் விரும்புவதில்லை. நாட்டில் உழைக்கும் மக்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் வரை ஐக்கிய தேசியக் கட்சி காத்திருக்கின்றது.

நாட்டில் செலவுகள் அதிகரிக்கும் போது பணவீக்கம் அதிகரிக்கும். வருடாந்தம் நிறுவனங்களிடம் இருந்து 28 வீத வரியும் சிறு முதலீட்டாளர்களிடம் இருந்து 20 வீத வரியும் அறவிடப்படுகிறது.

எனினும் சாதாரண மக்கள் தமது அன்றாட வாழ்க்கையின் போது 40 வீதத்தை அரசுக்கு வரியாக செலுத்துகின்றனர். தொழிற் சங்கங்கள் சம்பள அதிகரிப்பை கோராது நாட்டில் அறவிடப்படும் வரியை குறைக்குமாறு கோருவது சிறந்தது.

தோட்டங்களின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக அமைச்சொன்று இருந்தது. எனினும் அரசாங்கம் தற்போது அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்வதில்லை.

மலையகத்தைச் சேர்ந்த 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குகின்றனர். அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது பற்றி பேசுவதில்லை என்றார். (அ-2)

# ஆட்கடத்தலை தடுக்க இலங்கை ஒத்துழைப்பு

## ஆஸி.பிரதமர் பாராட்டு

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் குற்றச் செயலை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கும் இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக படகுகளில் அவுஸ்திரேலியா செல்பவர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கும் இலங்கை அரசாங்கம் அளித்துவரும் ஆதரவுக்கும் அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அபோட் நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உயர்ஸ்தானிகர் அட்மிரல் திசர சமரசிங்கவிடம் பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பொதுநலவாய நாடுகளின் அரசாங்கத் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைப்பிதழை வழங்குவதற்கு அங்கு சென்ற சந்தர்ப்பத்திலேயே அவுஸ்திரேலிய பிரதமர் இவ்விதம் நன்றி தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் தங்கள் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத் தலைவர்கள் பலரின் படுகொலைக்கு காரணமாக இருந்த மிலேச்சத்தனமான பயங்கரவாதத்தை அடிபணிய வைப்பதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்த தீர்க்கமான முடிவுகளினால் இன்று இலங்கையில் சமாதானம் நிலவுகின்றது.

வடபகுதி தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடித்த பின்னர் அப்பிரதேசம் பாதுகாப்பு, பொருளாதாரம், அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு, சுகாதாரம், கல்வித்துறை, உட்கட்டமைப்பு, தொடர்பாடல் சேவை, புனர்நிர்மாணம், நல்லிணக்கப்பாடு போன்ற பல்வேறு துறைகளில் இன்று முன்னேற்றம் கண்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிசப் கடந்த 11ஆம் திகதியன்று தம்முடன் பொதுநலவாய நாடுகள் மாநாடு, சட்டவிரோத ஆட்கடத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து தம்முடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடலை நடத்தியதாகவும் இலங்கையின் உயர்ஸ்தானிகர் அவுஸ்திரேலிய பிரதமருக்கு எடுத்துரைத்தார். (அ-2)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(புத்தூர்)

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த சிவஞானம் இதயதீபன் யாழ்ப்பாண நீதி மற்றும் நிர்வாக வலயத்திற்கான சமாதான நீதவானாக மல்லாக நீதிமன்ற நீதவானாக மல்லாக நீதிமன்ற நீதவான் ஜே. கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

இவர் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரியின் பழைய மாணவரும் யாழ்.பல்கலைக் கழக சமூகவியல் இளங்கலைமாணி பட்டதாரியுமாவார். இவர் சமூக மட்ட அமைப்புக்களின் உறுப்பினராக இருந்து சேவையாற்றி வருகின்றார். (அ)

## வரவேற்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையினரால் வடமாகாண சபையினரை வரவேற்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் பிரதேச சபையில் நடைபெறவுள்ளது.

இதில் வடமாகாண சபையின் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன், சபையின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் வரவேற்கப் படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் வசந்தகுமார் தெரிவித்துள்ளார். (அ-9)




புங்குடுதீவு சர்வோதயத்தின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ். சிவா நறுமணப்பூங்கா து.குருநாதசிவம் புங்குடுதீவில் கால்நடை தாகசாந்தி தொட்டியை அமைத்து உதவியுள்ளார். அமைக்கப்பட்ட தாகசாந்தி தொட்டியை படத்தில் காணலாம்.

# மரண அறிவித்தல்



(C5284)

## அமரர் சுப்பிரமணியம் தியாகராஜா

பிறப்பு : 28-07-1928 இறப்பு : 23-10-2013

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், சின்னாலடி, காரைநகரை வசிப்படமாகவும், தற்போது இல. 52A, வஜிர வீதி, கொழும்பு 05ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கம்பஹா பிரபல வர்த்தகர் **சுப்பிரமணியம் தியாகராஜா** 23.10.2013 (புதன் கிழமை) அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற வர்த்தகர் சுப்பிரமணியம் மற்றும் செல்லாச்சிப்பிள்ளை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற மாணிக்கம் அவர்களின் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு மற்றும் வள்ளியம்மை தம்பதியினரின் மருமகனும். **காலஞ்சென்ற மகேஸ்வரன் (முன்னாள் இந்து கலாசார அமைச்சர்)** மற்றும் பரமேஸ்வரன், விக்கினேஸ்வரன், ஞானேஸ்வரன், துவாரகேஸ்வரன் திருமகள் ஆகியோரின் தந்தையாரும், விஜயகலா, சுதர்சினி, ஜெயசங்கரி, நிறைமதி, சிவமலர், சுரேந்திரன் ஆகியோரின் மாமனாரும். பவதாரணி, பிரணவன், பவித்திரா, நிலுக்ஷன், நீபன், நிதுரன், கோகுலன், நேத்திரா, அனோஜன், அஸ்வின், அரவின், சஜீவன், சரன், சேயோன், சயன், சகி ஆகியோரின் பேரனாரும் சிவசோதி, பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், சரஸ்வதி, செல்லம்மா, மீனாட்ச்சிப்பிள்ளை, சின்னாட்ச்சிப்பிள்ளை, இராசநாயகம், மாரிமுத்து, சுப்பிரமணியம் மற்றும் யோகம்மா பரமேஸ்வரி அம்பலவாணர் பூரணம் மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் மற்றும் தாட்சாயினி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சதாசிவம், கணபதிப்பிள்ளை குமாரசுவாமி, வைத்திலிங்கம், பரமசிவம் மற்றும் ஏனாதிநாதன் ஆகியோரின் சகலனும் ஆவார். ஆன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக **52A, வஜிரா வீதி, கொழும்பு 05 இலுள்ள இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் 27.10.2013 (ஞாயிற்றுக் கிழமை) காலை 7.00 மணிக்கு இல்லத்தில் ஆரம்பமாகி தகனக்கிரியைகள் காலை 9.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் இடம்பெறும்.** இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**- தகவல் : பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**தொ.பே. இல.: 0777 306473 (பரமேஸ்வரன்), 0777 306304 (சுரேந்திரன்), 0777 674119 (துவாரகேஸ்வரன்), 075 8054599 (விக்கினேஸ்வரன்), 077 2514988 (ஞானேஸ்வரன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

615

## மகத்தான தீர்ப்பு

"...ஐயா, நீதிபதி அவர்களே! நாங்கள் நான்கு பேர் வெகு தூரத்தில் உள்ள ஊருக்குச் சென்று அரும்பாடுபட்டு பொருள் சம்பாதித்தோம். அந்த செல்வங்களையெல்லாம் ஒரு பானையில் வைத்து மூடி ஊருக்குக் கொண்டு வந்தோம். அங்கு வந்து அதனைப் பகிர்ந்து கொள்ள இருந்தோம். வழியில் குளிக்கச்சென்ற நாங்கள் பாட்டியிடம் நாங்கள் நான்கு பேரும் சேர்ந்து வந்தால்தான் பானையைத் தரவேண்டும் என்று கூறி அதனை ஒப்படைத்தோம். ஆனால், சொன்னதை மீறி ஒருவனிடம் பானையைக் கொடுத்ததாகக் கூறிகிறாள். பாட்டிதான் எங்கள் செல்வத்திற்குப்பொறுப்பு. அவளே எங்களுக்கு எங்கள் பானையைத் தரவேண்டும்" என்று வாதிட்டனர்.

பாட்டி வரவழைக்கப்பட்டாள்.- நடந்ததைக் கூறினாள். இரண்டுபக்க வாதங்ளையும் கேட்ட நீதிபதி "நான்கு பேரும் வந்து கேட்டால்தான் பாட்டி பானையைக் கொடுக்க வேண்டும். ஒருவனிடம் கொடுத்தது தவறு. அதனால் பாட்டிதான் இந்த மூவருக்கும் இழப்பீடு தரவேண்டும்" என்று தீர்ப்பளித்தார். "மறுநாள் அவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் இழப்பீடாக நீதிமன்றத்திற்குச் செலுத்த வேண்டும்" என்று பாட்டிக்கு ஆணையிட்டார்.



நீதிபதியின் தீர்ப்பைக் கேட்டு அதிர்ச்சியடைந்த பாட்டி அழுது புலம்பிக் கொண்டே வீதி வழியாகத் திரும்பிக் கொண்டு இருந்தாள். அப்போது ஊர்ச் சாவடியில் மரியாதை இராமன் உட்கார்ந்திருந்தான். பாட்டி அழுது கொண்டு வருவதைப் பார்த்து "ஏன் அழுதுகொண்டு வருகிறாய்? என்ன நடந்தது?" என்று பரிவோடு விசாரித்தான்

பாட்டி நடந்தவை அனைத்தையும் எடுத்துக்கூறினாள்.

அனைத்தையும் கேட்டறிந்த மரியாதை இராமன் "இது மிகவும் அநியாயமான தீர்ப்பு" என்றான். தான் பாட்டிக்கு நீதி கிடைக்க ஆவன செய்வதாகக் கூறி அனுப்பி வைத்தான் மரியாதை ராமன் நீதிபதியின் தீர்ப்பைக் குறை கூறி விமர்சனம் செய்வதை அறிந்த ஒற்றர்கள் அரசனிடம் சென்று கூறினர்.

அரசன் மரியாதைராமனை வரவழைத்தான். "நீதிமன்றத்தைப் பழித்துப் பேசினாயாமே. அதற்கு என்ன தண்டனை தெரியுமா?" என்று கோபமாகக் கேட்டான் "அரசே! நான் நீதிமன்றத்தை அவமதிக்கவே இல்லை. பாட்டிக்கு அளிக்கப்பட்ட தண்டனைகள் அநீதியானது. முறையற்ற தீர்ப்பு என்னும்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று சொல்வது தவறாகாது" என்றான் மரியாதைராமன்.

"இந்த வழக்கில் வேறெப்படித் தீர்ப்பு கூற முடியும்" என்று அரசன் கேட்டான்.

"மன்னர் பெருமானே! இந்த வழக்கு விசாரணையை என்னிடம் ஒப்படைத்தால் நியாயமாக அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தீர்ப்புக் கூறுவேன்" என்றான் மரியாதை ராமன்.

"சரி... இந்த வழக்கை விசாரிக்கும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன். எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் நியாயமான தீர்ப்பைக் கூறாவிட்டால் உனக்குக் கடுந் தண்டனை கிடைக்கும்" என்றான் மன்னன்.



இந்த இளைஞன் வகையாக மன்னனிடம் மாட்டிக் கொண்டான் என்று பலரும் பேசிக் கொண்டனர்.

மரியாதை ராமன் நீதிபதியாக அமர்ந்து வழக்கை விசாரித்தான். மூன்று பேரையும் பார்த்து "நீங்கள் நான்கு பேரும் சேர்ந்து வந்தால்தானே பானையைப் பாட்டி உங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது நிபந்தனை" என்றான் மரியாதை ராமன்.

மூன்று பேரும் "ஆமாம். ஆமாம்" என்றனர்.

"அந்த நிபந்தனைப்படி பாட்டி பானையை ஒப்படைக்கத் தயார். அதன்படி நீங்கள் நான்கு பேரும் எப்போது சேர்ந்து வந்து பானையைக் கேட்கிறீர்களோ! அப்போது நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்" என்று தீர்ப்பு வழங்கினான். இதற்கு திருடர்கள் மூன்று பேராலும் எதுவும் கூற முடியவில்லை.

நான்காமவனை எங்கே தேடுவது? அவனும் இருந்தால் அல்லவா பானையைக் கேட்க முடியும். மூவரும் தலைகுனிந்து வெளியேறினார்கள். பாட்டிக்கு ஏற்பட்ட சங்கடம் தீர்ந்தது. மதிநுட்பமான தீர்ப்பைக் கேட்டு அனைவரும் மரியாதை ராமனை வெகுவாகப் பாராட்டினர்.

அரசன் மரியாதை ராமனை வரவழைத்தான். "ராமனே! நீ இளைஞனாக இருந்தாலும் மிகுந்த அறிவுக் கூர்மை உடையவனாக இருக்கிறாய்.

உன்னைப் போன்ற புத்திசாலிகளே நீதிபதிகளாக இருக்க வேண்டும். இன்று முதல் இந்த நகருக்கு நீதான் நிரந்தர நீதிபதி" என்றான்.



பாராட்டும் பரிசுகளும் வழங்கி மகிழந்தான். அன்று முதல் நீதிபதியானார் மரியாதைராமன். (முற்றும்)

## 10.2013 26 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1640-ஸ்கொட்லாந்துக்கும் லண்டன் முதலாம் சார்லஸ் மன்னனுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- 1776-அமெரிக்கப் புரட்சிக்கு ஆதரவு திரட்டும் நோக்கில் பெஞ்சமின் பிராங்கிளின் பிரான்ஸ் புறப்பட்டார்.
- 1876-இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே தொடருந்து சேவைய்ய ஆரம்பிப்பதற்கான முடிவு பிரித்தானிய அரசரால் எடுக்கப்பட்டது.
- 1905-நோர்வே, சுவீடனிடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1917-முதலாம் உலகப்போர்: இத்தாலி கபொரேட்டொ என்ற இடத்தில் ஜேர்மனி மற்றும் ஆஸ்திரியா நாடுகளுடன் மோதி கடும் தோல்வியைச் சந்தித்தது.
- 1917-முதலாம் உலகப்போர்: பிரேசில் போரில் குதித்தது.
- 1947-காஷ்மீர் மகாராஜா இந்தியாவுடன் காஷ்மீரை இணைக்கச் சம்மதித்தார்.
- 1947-ஈராக்கிலிருந்து பிரித்தானிய இராணுவம் வெளியேறியது.
- 1955-ஆஸ்திரியாவில் கடைசி கூட்டுப்படைகள் வெளியேறின. ஆஸ்திரியா அணிசேரா நாடாக தன்னை அறிவித்தது.
- 1956-ரஷ்ய இராணுவம் ஹங்கேரியை முற்றுகையிட்டது.
- 1977-பெரியம்மை நோய் தாக்கிய கடைசி நோயாளி சோமாலியாவில் அடையாளம் காண்ப்பட்டது. உலக சுகாதார அமைப்பு இந்நாளை பெரியம்மையின் கடைசி நாளாக அறிவித்தது.
- 1979-தென்கொரியா ஜனாதிபதி பார்க் சோங்-ஹீ இராணுவத் தளபதி கிம் ஜே-கியூ என்பவனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 1984-பேபி ஃபே (baby Fae) பபூன்என்ற மனிதக் குரங்கிலிருந்து இருதய மாற்றைப் பெற்று 21 நாட்கள் உயிர் வாழ்ந்தது.
- 1994-ஜோர்தான் மற்றும் இஸ்ரேல் அமைதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
- 1994-பேர்மாவின் கடைசித் தேற்றம் அண்ட்ரூ வைல்ஸ் என்பரால் நிறுவப்பட்டது என அறிவிக்கப்பட்டது.
- 1995-இஸ்லாமிய ஜிகாத் தலைவர் ஃபாதி ஷிக்காகி என்பவர் மோல்டாவில் உள்ள விடுதி ஒன்றில் மொசாற்ட் அமைப்பினரால் கொல்லப்பட்டார்.
- 2001-ஐக்கிய அமெரிக்கா அமெரிக்க தேசப் பற்று சட்டத்தை நிறைவேற்றியது.
- 2002-மொஸ்கோவில் நாடக மாளிகை ஒன்றில் செச்னியா தீவிரவாதிகள் மூன்று நாட்களாகப் பிடித்து வைத்திருந்த 150 பணயக் கைதிகளும் 50 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர்.

பிறப்புக்கள்

- 1947-கிலாரி கிளின்டன், ஐக்கிய அமெரிக்காவின் செனட் அவை உறுப்பினர்
- 1959-எவோ மொறல்ஸ், பொலிவியாவின் ஜனாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவற்ற அறிதல்




## ஆன்மீகம் 18

ஒருநாளைக்கு பத்து தடவையாவது நாம் மனம் என்கிறோம். மனம் என்றால் என்ன? நரம்பியல் மனம் என்பது மூளையின் செயற்பாடுகளின் ஒட்டுமொத்தம்தான் என்று சொல்கிறது. மூளை என்பது நமது நரம்புகளின் மையமுடிச்சாக நமது கழுத்துக்கு மேலே பரிணாமம் மூலம் உருவர்கி வந்த ஒன்று. நரம்புகள் மூலம் வந்துசேரும் அறிதல்களை பதிவு செய்து வைக்கும் இடம். அப்பதிவுகளை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தி அறிவு ஆக மாற்றும் இடம். அறிவும் அவ்வறிவின் செயற்பாடுகளை ஒட்டி எழும் உணர்ச்சிகளும் அடங்கியதே நாம் மனம் என்று சொல்வது. அதாவது மூளைக்கும் நடக்கும் நியூரான்களின் இயக்கத்தையே மனம் என்கிறோம்.

நரம்பியலின் இக்கூற்றை உளவியல் முழுக்க ஏற்றுக்கொள்ளாது. அந்த நிர்ணயத்தினை அது நரம்பியல் குறைத்தல் வாதம் என்று நிராகரித்துவிடும் என்பது முற்றிலும் மூளைக்குள் நடைபெறும் ஒரு நிகழ்வு அல்ல. அதற்கு மொழி, கலாச்சாரம், சமூக இயக்கம் ஆகிய தளங்கள் சார்ந்து முற்றிலும் புறவயமான ஒரு பின்னணி உள்ளது. கோபம் என்பது ஒரு நரம்பியக்கம்தான் என நரம்பியல் விளக்கிவிடலாம். ஆனால், அமெரிக்கனுக்கு கோபம் வருகிற விடயத்துக்கு இந்தியனுக்கு கோபம் வருவதில்லை.

அப்படியானால் கோபம் என்ற மன உணர்வின் ஊற்றுமூலம் எங்கே உள்ளது? அம்மனிதனின் மூளைக்கும் அவன் வாழும் சமூகக்கலாச்சார சூழலுக் கும் நடுவேயுள்ள ஒரு சந்திப்புப் புள்ளியில் உள்ளது எனலாமா?

இலக்கியம் மனம் என்பதைப் பற்றி மிக விரிவாகவும் மிக சூட்சுமமாகவும் பேசிக் கொண்டிருக்கிறது. ஒரு இலக்கியப் படைப்பின் ஆழம் என்று நாம் சொல்வது பெரும்பாலும் மனிதமன ஆழத்தில் அது எந்த அளவுக்கு பயணம் செய்கிறது என்பதைப் பொறுத்தே



அமைகிறது. இலக்கியம் வரலாற்றின் சிக்கல்கள் குறித்து பேசலாம். தத்துவ முடிச்சுக்கள் பற்றி அலசலாம். அரசியல் கருத்துக்களை ஆய்வு செய்யலாம். ஆனால், அவையெல்லாமே இலக்கிய ஆக்கத்தில் படைப்பு ஊக்கத்துடன் வெளிப்படுகையில் மனிதனின் ஆழ்மனம் சார்ந்த அறிதல்களாவும் வெளிப்பாடுகளாகவும் மாறியிருப்பதைக் காணலாம்.


மனம் என்பது பலவிதமாக விளக்கப்படுகிறது. முழுமையாக ஒருபோதும் வகுக்கப்படுவதில்லை என்பதே உண்மை. ஏனெனில், மனித மனம் என்பதை வகுக்க முயல்வதே மனித மனம் தானே? பிரபஞ்சத்தில் நாம் அறிவதெல்லாம் மனித மனத்தின் அலகுகளால் அறியப்படுவனவே. அவற்றில் எல்லாம் பொதுவாக மனித மனம் என்ற அலகு அடங்கியிருப்பதனால் அது மௌன இருப்பாக உள்ளது அவ்வளவுதான். சாம்ஸ்கிமொழியை அறிவதற்கும் ரோஜர்பென்ரோஸ் பிரபஞ்சத்தை அறிவதற்கும் மிஷேய்ல் ஃபூக்கோ சமூகத்தை ஆராய்வதற்கும் பொதுவாக உள்ளது என்ன? மனித மனம் உண்மையை அறிய முற்படும்முறை, மனித மனத்தின் செயன்முறை அல்லவா?

மானுடப்பொதுமை என்ற ஒன்றை நாம் சொல்லும்போது உண்மையில் பொதுமனம் என்ற ஒன்றை கற்பனை செய்தே அதைச் சொல்கிறோம். அப்படி ஒன்று உண்மையில் உண்டா? சந்தர்ப்பம் சார்ந்தும், சூழல் சார்ந்தும், விடயம் சார்ந்தும்தான் அப்படி ஒன்றை உருவகம் செய்துகொள்ள முடிகிறது. ஆகவேதான் தத்துவவாதிகளில் ஒரு சாரார் புறவயம் என்பதையே நிராகரிப்பவர்களாக உள்ளனர்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# ஈழ மண்ணில் பெருகியோடிய குருதியாற்றின் நினைவுப்பதிவு- “முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்”



தமிழ்ப் பாவை சிற்பம்

இறுதியாக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் வாழ்ந்த புதுக்குடியிருப்பு பதுங்கு குழியையும் குண்டுவைத்துத் தகர்த்துவிட்டு, அந்த இடத்தில் புத்த விகாரை அமைக்கத் திட்டமிடுகிறது இலங்கை அரசு. 30 வருடங்கள் நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தின் அடையாளமாக ஈழ மண்ணில் இப்போது எதுவும் இல்லை.

இந்த நிலையில், ஈழ மண்ணில் பெருகியோடிய குருதியாற்றின் சுவடை, தஞ்சையில் பதித்திருக்கிறது, முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்! ஈழத்தமிழர்கள் அனுபவித்த போர்க் கொடுமைகள், நினைவு முற்றத்தின் சிற்பங்களாகப் பரந்து விரிந்திருக்கின்றன. அந்தத் தமிழர்களின் வலியை, வேதனையை, கதறலை, ஆக்ரோஷத்தை அச்சு அசலாகப் படியெடுத்திருக்கிறது ஒவ்வொரு சிற்பமும்.


தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறனின் நேரடிக் கண்காணிப்பில் நூற்றுக் கணக்கான சிற்பிகள், பல ஓவியங்களின் கூட்டு உழைப்பில் உருவான முற்றத்தின் சிற்பங்களின் பிரமாண்டம் பிரமிப்பூட்டும். அதே சமயம், மனிதன் ஈரத்தைக் கசிய வைக்கின்றன.

முற்றத்தின் நடுவில் 40 டன் எடையுள்ள தமிழ்ப் பாவையின் சிற்பப் பீடம், அதன் இரு பக்கங்களிலும் ஈழத்தின் அவலத்தையும் தமிழர்களின் உயிர்த் தியாகத்தையும் கற்சிற்பங்களாக வடித்திருக்கிறார்கள். தமிழ்ப் பாவை சிற்பத்தின் பீடத்தினுள் எட்டிப்பார்த்தால் நமது முகத்தைப் பிரதிபலிக்கிறது முப்பரிமானக் கண்ணாடி.

வெள்ளையர்களைஎதிர்த்ததமிழ்மன்னர்கள், மொழிப்போர் தியாகிகளின் படங்களோடு விடுதலைப் புலித் தளபதிகளின் படங்களும் அவர்களைப் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. முற்றத்தின் அரங்கில் பிரதான மரியாதை, பார்வதி அம்மாளுக்கும் வேலுப்பிள்ளைக்கும்.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தின் உள்ளேயே தங்கியிருந்து வேலைகளைப் பார்வையிடும் பழ.நெடுமாறனின் கருத்துக்கள்.......

“மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நல்ல கண்ணுவும் வைகோவும் இந்த முற்றத்துக்கான அடிக்கல் நாட்டியபோது ஒரே ஒரு நினைவுத்தூண் அமைப்பதுமட்டும்தான் நோக்கம். ஆனால், தொடர்ந்து பல சந்தர்ப்பங்களில் ஈழத்தில் மாவீரர் துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டதோடு, விடுதலைப்புலிகளின் வெற்றிச் சின்னங்களையும் அழித்து சிங்கள இராணுவத்தின் சின்னங்களை அங்கே நிறுவிவிட்டார்கள். இதன் பிறகே, ஈழத்தில் நிகழ்ந்த அவலம் ஆவணம் இன்றி கடந்துவிடக் கூடாது என்று இந்த முற்றத்தை வடிவமைக்கத் தீர்மானித்தோம். இந்தப் பெருங்கனவை நனவாக்க கல் கொடுத்தவர்கள், மண் கொடுத்தவர்கள், மரம் கொடுத்தவர்கள், புகைப்படங்களைச் சேகரித்துக் கொடுத்தவர்கள்.... என இதுமிகப் பெரும் உழைப்பு.



40 டன் எடையுள்ள தமிழ்பாவை சிற்பத்தை, 15 அடி மேடையில் ஏற்றி வைத்தோம். இந்த முற்றத்தினுள் வடிக்கப்பட்டுள்ள சிற்பங்களுக்கு ஆதாரமாக இருந்தவை ஓவியர் வீரசந்தானம் வரைந்த ஓவியங்கள்தான்” என்றார் பழ.நெடுமாறன்.

“மகாவலிபுரத்தில் இருக்கும் அர்ஜுனன் தபசு போன்ற நீளமான கல்லின் இரண்டு பக்கமும் ஈழ வரலாற்றைப் பதிவு செய்யும் ஓவியங்களை கோட்டோவியமாக வரைந்து கொடுத்தேன். ஈழத்தின் தேசியப் பறவை, தேசிய மரம், அந்த மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள் என்பது முதல், யாழ். நூலகம் எரிப்பு, ஜெகன்- குட்டிமணி- தங்கதுரை படுகொலை, வெலிக்கடை சிறை உடைப்பு... என தமிழர் போராட்ட வரலாற்றின் முக்கியமான நிகழ்வுகளை வரைந்தேன்.

இன்னொரு பக்கம் இறுதிப்போரில் மக்கள் கொல்லப்பட்ட விதம், இராசயணக் குண்டுகள் கொத்துக் கொத்தாக உயிரைப் பறித்த விதம்.... என சிங்கள இராணுவத்தின் வெறியாட்டத்தை ஆவணம் ஆக்கினோம். அந்தக் கோட்டோவியங்களை ஆதாரமாக வைத்து சிற்பங்களை வடிவமைத்தனர். ஈழப்படுகொலைகள் குறித்த உலகம் இன்றுவரை மௌனமாக இருக்கிறது. ஆனால், இந்த முள்ளிவாய்க்கால் முற்றம், ஈழப் படுகொயையின் பின்னணியையும் வேதனைக் காட்சிகளையும் தலைமுறைகள் தாண்டியும் மக்களிடம் கொண்டு சேர்க்கும்” என்கிறார் வீரசந்தானம்.

முற்றத்தில் சிற்பங்களை வடிவமைத்திருப்பது, மாமல்லபுரம் ஸ்தபதி முருகன் குழுவினர். முருகனின் கருத்துக்கள்...

“பொதுவாக, சிற்பம் செய்ய கறுப்புக்கல் தான் சிறந்தது. அதிலும் இறுதிய கல் வேண்டும். தமிழகம் முழுக்க அப்படியான கல் தேடி அலைந்தோம். புதுக்கோட்டையில் அஸ்தி பாரம் அமைக்கப் பயன்படும் வெள்ளைக் கல்லையும் ஊத்துக்குளியில் சிற்பங்களுக்கான கறுப்புக் கல்லையும் தேர்ந்தெடுத்தோம். தமிழ்ப் பாவை சிலையை அமைக்க 55 டன் எடையுள்ள கல்லை ஊத்துக்குளியிலிருந்து கொண்டு வந்து, சீராக்கி, செதுக்கி முடித்த போது அது 40 டன் எடையுடன் நிலை கொண்டது. நூற்றாண்டுகள் பல கடந்தாலும் நிலைத்து நிற்கும் தரத்தோடு உருவாக்கப்பட்டிருக்கின்றன இந்தச் சிற்பங்கள்” என்கிறார் முருகன்.

“நவம்பர் 8,9,10 திகதிகளில் மூன்று நாள் விழாவாக திறப்பு விழா காண இருக்கிறது முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்.

எந்த அரசியல் சார்பும் இல்லாமல், ஒட்டுமொத்தத் தமிழினத்தின் விழாவாக இதை அரங்கேற்ற இருக்கிறோம். பாரபட்சம் இல்லாமல் அனைவருக்கும் அழைப்பு அனுப்புவோம். ஆனால், ஈழப்படுகொலைகளுக்குத் துணைபோன துரோகிகளுக்கு நாங்கள் அழைப்பு அனுப்பவில்லை. ஏனென்றால், இன்னொரு முறை இப்படியான கொலை கள் நடக்காமல் இருக்க, எதிரிகளிடம் மட்டும் அல்ல, துரோகிகளிடமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது” என்கிறார் பழ.நெடுமாறன்.



வீரச்சந்தானம்



முருகன்

அதை ஆமோதிப்பதுபோல் முற்றத்துச் சிற்பங்களில் அறைந்து மோதுகிறது அனல்காற்று!

-டி.அருள் எழிலன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டசபை தீர்மான வரைபுகள் மனநிறைவை தரவில்லை

## ஏமாற்றம் என்கிறார் வைகோ

(சென்னை)

**பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்று தமிழ்நாடு சட்டசபையில் முதலமைச்சர் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து சட்டமன்றம் முழுமனதாக நிறைவேற்றி இருக்கிறது. இது தொடர்பில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.**

அவ்வறிக்கையில் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது என்று நேற்றுமுன்தினம் தமிழ்நாடு முதலமைச்சர் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து சட்டசபை முழுமனதாக நிறைவேற்றி இருக்கிறது.


இதன்போது முதலமைச்சர் உரையையும் தீர்மானத்தையும் மேலோட்டமாகக் கவனித்தால், ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க எடுக்கப்படும் நடவடிக்கை போன்ற தோற்றத்தைத் தருவதால், அதனை வரவேற்கத் தோன்றும்.

ஆனால், தீர்மான வரிகளை ஊடுருவிப் பார்த்தால், 27.03. 2013 அன்று தமிழகச் சட்டப் பேரவையில், தமிழக முதலமைச்சர் கொண்டுவந்து நிறைவேற்றிய தீர்மானத்துக்கு முரண்பாடாக இந்த தீர்மானம் அமைந்து இருப்பது கவலை தருகிறது.

அன்றைய தீர்மானத்தில் இலங்கை இனப் போரின் போது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன் விசாரணை நடத்திடவும் இந்த விசாரணையின் அடிப்படையில் போர்க்குற்றம் நிகழ்த்தியவர்கள் சர்வதேச நீதிமன்றம் முன்பு நிறுத்தப்பட்டு, அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத்தந்திடவும் ஈழத்தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு, தனிஈழம் குறித்து இலங்கை வாழ் தமிழர்களிடமும் இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்து பிறநாடுகளில் வாழ்கின்ற தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்திடவும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானத்தை வரவேற்றுப் பாராட்டியதோடு, அந்தத் தீர்மானத்துக்காக தமிழக அரசுக்கு வரலாறு பொன் மகுடம் சூட்டும் என்று மிகவும் சிலாகித்து வாழ்த்தி இருந்தேன்.

ஆனால், நிறைவேற்றப்பட்ட



இருக்கின்ற தீர்மானத்தில், இலங் கைத் தமிழர்கள் சுதந்திரமாகவும் சிங்களவர்களுக்கு இணையாகவும் வாழ, இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் வரை, பொதுநலவாய கூட்டமைப்பில் இருந்து இலங்கை நாட்டைத் தற்காலிகமாக நீக்கி வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று இந்திய பேரரசை தமிழ்நாடு சட்டப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று தீர்மானம் குறிப்பிடுகிறது.

எனவே, சுதந்திரத் தமிழ் ஈழத்துக்கான பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று மார்ச் மாதம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு முரணாக இந்த தீர்மானம் இருக்கின்றது.

சிங்களவர்களுக்கு இணையாக தமிழர்கள் வாழ, இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் வரை, பொதுநலவாய அமைப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று குறிப்பிடுவது, கொலை செய்தவனிடமே பரிகாரத்தையும் நீதியையும் எதிர்பார்க்கின்ற செயலாகும்.

ஏற்கனவே இலங்கை அரசு எல்.எல்.ஆர்.சி. விசாரணை என்று கூறி, ஒரு போலி நாடகத்தை நடத்தி, உலகத்தை ஏமாற்றி வருகிறது. ஒன்றுபட்ட இலங்கைக்குள் சிங்களவர்களோடு தமிழர்கள் சமமாக வாழ, இலங்கை அரசு வழி செய்ய வேண்டும் என்ற கோரிக்கைதான் இத்தீர்மானத்தில் அடங்கி இருக்கின்றது.

இது புண்ணுக்குப் புனுகு பூசுகிற வேலை மட்டும் அல்ல, இனக் கொலைக் குற்றத்திற்கு சுதந்திரமான சர்வதேச நீதி விசாரணை என்ற கோரிக்கையை நீர்த்துப் போக வைக்கின்ற செயலாகும். பொதுநலவாய அமைப்பில் இருந்து எந்த நாட்டையும் நிரந்தரமாக நீக்கி வைக்க விதிகள் இல்லை. தற்காலிகமாகத்தான் நீக்கி வைக்க முடியும்.

எனவே, இனக் கொலைக் குற்றத்திற்காக, இலங்கையை குறித்த அமைப்பில் இருந்து தற்காலிகமாக நீக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தால், அது தமிழர்களுக்கான நீதிக்குக் குரல்கொடுக்கும் தீர்மானமாக, வெளிச்சத்திற்கு வழிகாட்டும் தீர்மானமாக அமைந்திருக்கும்.

ஆனால், தற்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஈழத்தமிழர்களின் உரிமைப் போரின் நியாயத்தின் கோரிக்கையை நீர்த்துப் போகச் செய்கின்ற விதத்திலும் மகத்தான தியாகங்கள் செய்து காட்டப்பட்ட இலக்கை, திசை மாற்றம் செய்யும் நோக்கிலும் அமைந்து இருப்பதால் இத் தீர்மானம் மன நிறைவைத்தரவில்லை. ஏமாற்றம் அளிக்கிறது. என்று குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இலங்கை-சீன இளைஞர்கள் இடையே பிணைப்பு வேண்டும்

## சீனாவின் இளைஞர் சம்மேளன தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள பொருளாதார, கலாசார மற்றும் கல்வி பிணைப்புகளை வலுப்படுத்துவதற்காக இலங்கை மற்றும் சீன இளைஞர்களுக்கு இடையிலான தொடர்புகளை சக்திமிக்கதாக்க வேண்டும் என சீன அரசாங்கத்தின் இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் ஹீஜுங்கி தெரிவித்தார்.

மகரகமவில் உள்ள இளைஞர் சேவைகள் மன்றத்தில் அண்மையில் நடைபெற்ற இலங்கை இளைஞர் நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் இளைஞர்கள் வலுமிக்க பலமான நபர்கள். இந்த இளைஞர்களின் திறமைகளுக்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இளைஞர் நாடாளுமன்றம் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

தொழிற் கல்வியை கற்பதற்காக இளைஞர்கள் அதிகளவில் ஊக்குவிப்பட வேண்டும். சீன அரசாங்கம், இலங்கை இளைஞர்களுக்கு தொழிற் கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்க சந்தர்ப்பமளிக்கும் என்றார். (அ-2)

# பிரேமதாசவின் மகன் என்ற தகுதியே சஜித்திற்கு உண்டு

## ரவி எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

சஜித் பிரேமதாச ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவராக வருவதற்கு இருக்கும் ஒரே தகுதி அவர் முன்னாள் ஜனாதிபதியின் மகன் என்பது மட்டுமே என அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொருவரின் கொள்கைகளும் நிலைப்பாடுகளும் பற்றி எனக்கு தேவையில்லை. நாட்டு மக்களின் முடிவு என்னவோ அதற்கு நான் தலை வணங்குவேன்.

சஜித் பிரேமதாசவுக்கு இருக்கும் ஒரே தகுதி அவர் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மகன் என்பது மட்டுமே என்பதை மக்கள் அறிவார்கள்.

தனது தந்தையை போல் தன்னால் வறிய மக்களின் மனதையும் அவர்களின் வியர்வை வாசத்தை தன்னாலும் அறிந்து புரிந்து கொள்ள முடியும் என்று சஜித் பிரேமதாச ஊடகம் ஒன்றிற்குத் தெரிவித்திருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிடும் போதே ரவி கருணாநாயக்க மேற்கண்டவாறு கூறினார். (அ-2)



மீசாலை கிழக்கு காட்டு வளவு கந்தசுவாமி கோயிலின் கட்டட நிதிக்காக அதிர்ஷ்டலாப சீட்டு குலுக்கப்பட்டு 9 வெற்றியாளர்களுக்கான பரிசில்களும் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. இதன் போது தர்மலிங்கம் சித்தார்த்தன் முதலாவது பரிசுக்கான வெற்றியாளரை தேர்ந்தெடுத்து பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம்.

# எதிர்க்கட்சிக்கு தலைவராகும் தகுதி ரணிலுக்கே உள்ளது

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

ரணில் விக்ரமசிங்கவிற்கு பின்னர், ஐக்கிய தேசியக்கட்சிக்குள் தேசிய ரீதியில் தலைமை வகிக்க தகுதியான தலைவர்கள் எவரும் இருப்பதாக தெரியவில்லை என இடர்முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை ஆரபெத்த பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தலைவர்கள் இருப்பார்கள் என்றால் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். அடுத்து தென் மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தல் தலைவர்களை கண்டறிய அந்த கட்சிக்கு கிடைத்துள்ள சிறந்த சந்தர்ப்பமாகும். ஒவ்வொரு கதைகளை கூறி அதனை தட்டிக்கழிக்க வேண்டிய தேவையில்லை.

அமைச்சர் தொடங்கொட, நாடாளுமன்றத்தில் இருந்து விலகி மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெறும் வெற்றியை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு பெற்றுக் கொடுத்தார்.

சந்திரிகா குமாரதுங்க மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று அதன் பின்னரே நாட்டின் ஜனாதிபதி பதவி வரைக்கும் சென்றார்.

இதனால் தலைவர்கள் மேல் மட்டத்தில் இருந்து உருவாகுவதில்லை. கட்சிக்காக அர்ப்பணிப்புகளை செய்ய வேண்டும்.

தலைவர்களாக வேண்டும் என எவரும் விரும்புகின்றனர் என்றால், அவர்கள் தேர்தலில் தமது திறமைகளை [illegible]டும் என்றார்.

# ஊனமுற்ற அரசியல் கைதிகளை விடுவிக்க சட்டமா அதிபர் திணைக்களம் தயங்குகின்றது

(யாழ்ப்பாணம்)

ஊனமுற்ற அரசியல் கைதிகளை கூட விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் தயங்குகின்றது என பயங்கரவாத தடைச் சட்ட (பி.ரி.ஏ.) வழங்கறிஞர்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

கை,கால்கள் இயங்காத மற்றும் அவயவங்களை இழந்த அரசியல் கைதிகளை ஏனைய அரசியல் கைதிகள் போன்று சட்ட நடைமுறைக்கு உட்படுத்தாது அவர்களின் விடுதலைக்கு சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கையெடுக்க வேண்டுமெனவும் வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் யாழ்.மேல் நீதிமன்றம், வவுனியா மேல் நீதிமன்றங்களே அரசியல் கைதிகளை விடுதலை செய்கின்றன.

2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்டப் போரின் போது அரச பகுதிக்குள் வந்தவர்களில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களில் அங்கவீனர்களும் அடங்குகின்றனர்.

இவர்கள் பூசா முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்டு நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பின்னர் நீதிமன்றங்களால் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டு சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் விடுவிக்கப்படுகின்றனர்.

இவ் வழக்கு நடைபெறுகின்ற காலத்திலும், கைது செய்யப்பட்ட காலத்திலும் அங்கவீன அரசியல் கைதிகளும் சிறைக் கூடங்களிலேயே இருக்க நேருகின்றது.

இதனால் அங்கவீன அரசியல் கைதிகள் பெரிதும் மனஉளைச்சல்களுக்கும் சங்கடங்களுக்கும் உள்ளாவதாக பயங்கரவாத தடைச் சட்ட வழக்காடும் வழக்கறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் கரிசனையெடுத்துக் கொள்ளவேண்டும் என யாழ். மேல் நீதிமன்றில் பயங்கரவாத தடைச்சட்ட வழக்காடும் சட்டத்தரணி மு.றெமீடியஸ் தெரிவித்தார்.

இதேவேளை, அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்ற கருத்தும் வலுப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுபலசேனாவின் அடாவடிக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு

## முஸ்லிம் காங்கிரஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**முஸ்லிம்களின் மத உரிமையான ஹலாலுக்கு எதிராக பொதுபலசேனா அரங்கேற்றி வரும் அடாவடி நடவடிக்கைகளுக்கு அரசே முழுப்பொறுப்புக் கூறவேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.**

முஸ்லிம்களுக்கு எதிராக பொதுபலசேனா முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளை அரசு பார்த்துக் கொண்டிருப்பது கண்டிக்கப்பட வேண்டிய விடயம் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் சீற்றம் வெளியிட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷவின் கீழ் இயங்கும் சிங்கள தேசிய கடும்போக்கு அமைப்பான பொதுபலசேனா மீண்டும் ஹலால் எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது. ஹலாலுக்கு எதிரான போராட்டம் ஓயாது என்றும் அது தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில், முஸ்லிம் காங்கிரசின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹஸன் அலி கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுபலசேனா அமைப்பு நாட்டில் வாழுகின்ற முஸ்லிம்களுக்கு எதிராக மீண்டும் கிளர்ந்தெழுந்துள்ளமையால் முஸ்லிம் மக்கள் இன்று நிம்மதியை இழந்துள் ளார்கள். ஹலால் என்பது முஸ்லிம் மக்க ளுக்கான ஒரு கட்டுப்பாடு. இதை வேறு இனமோ அல்லது வேறு சமூகங்களோ பயன்படுத்த வேணடும் என்ற கட்டாயம் இல்லை. விரும்பினால் மட்டும் பயன்படுத்திக் கொள்ளட்டும்.

இதை விடுத்து முஸ்லிம் மக்களின் உரிமைகளில் இவர்கள் தலையிடக் கூடாது. நாட்டின் நீதி என்பது அனைவருக்கும் சமமான ஒன்றே. ஆனால், இந்த பொதுபலசேனா செய்கின்ற அத்தனை செயல்களையும் அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது மிகவும் கவலையளிக்கிறது.

இவர்களை அரசினால் கட்டுப்படுத்த முடிந்தும் அதை செய்யாதிருப்பது முஸ்லிம் சமூகத்திற்கே செய்யும் மிகப் பெரிய துரோகமாகும். இது போன்ற செயற்பாட்டை முஸ்லிம் மக்கள் செய்திருந்தால் இன்று நிலைமை எவ்வாறு அமைந்திருக்கும்? நாடே கலவர பூமியாக மாறியிருக்கும்.

இந்நாட்டில் வாழுகின்ற சிறுபான்மையினரே முஸ்லிம் சமூகம். அதனால், இதற்கு எதிராக போராடக் கூடிய சக்தி எம்மிடம் இல்லை என்றே சொல்ல வேண்டும். அப்படி எதிர்த்தாலும் அது அனைத்து முஸ்லிம் மக்களையுமே பாதிக்கும்.

இதனால், இந்த மஹிந்த அரசின் பங்காளிக கட்சி என்ற ரீதியில் இதுசம்பந்தமாக அரசுக்கு நாம் தொடர்ந்தும் அழுத்தங்கள் கொடுப்போம். அரசு இதற்கு ஒரு சிறந்த தீர்வொன்றை முஸ்லிம் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் வரை பொதுபலசேனாவின் அனைத்து செயல்களுக்கும் அரசே முழுப் பொறுப்புக் கூறவேண்டும் என்றார். (அ-2)

# பதவிவிலகல் கடிதம் வழங்கினார் தவிசாளர்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் பதவி விலகுவதாகவும் கட்சியின் பொதுச் செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜெபநேசன் தவிசாளராக பதவியேற்றிருந்தார். இந்நிலையில், ஆளும் தரப்புக்குள் நிலவிய முரண்பாடு காரணமாக பிரதேச சபை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டாலும், தவிசாளர் தன் அதிகாரங்களைப் பயன்படுத்தி இதுவரை காலமும் செயற்பட்டுவந்துள்ளார்.

இது குறித்து கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவிக்கையில், இரு தரப்பினரையும் இணங்கிச் செல்வதற்கான ஆலோசனைகள் இடம் பெற்று வருவதாகவும் இன்னும் முடிவெடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (அ-9-23)

# மாதாந்த பொதுக்கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் ந.கனகலிங்கம் அறிவித்துள்ளார். (அ)

# மனித உரிமை மீறல் கேள்விகளுக்கு இன்னமும் இலங்கை பதிலளிக்கவில்லை

(கொழும்பு)

மனித உரிமை மீறல் கேள்விகளுக்கு இன்னமும் இலங்கை பதிலளிக்கவில்லை என மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

பாலியல் குற்றச் செயல்கள் அதிகளவில் இடம்பெற்று வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

குறிப்பாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் மற்றும் பெண்கள் மீது அதிகளவில் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுவதாகவும், பாலியல் வன்முறைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்கள் தொடர்பில் கருத்து வெளியிட இலங்கை மக்கள் அஞ்சுவதாக சர்வதேச ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் அடக்குமுறைகள் காரணமாக இவ்வாறு மக்கள் கருத்து வெளியிட அஞ்சுவதாக குறித்த சர்வதேச ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை எனவும் சர்வதேச விசாரணைகள் அவசியமில்லை எனவும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (அ-2)

# என்னைக் கொலை செய்ய திட்டம்; சபையில் மங்கள அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

தன்னை கொலை செய்யும் சதித்திட்டம் ஒன்று இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட உரையொன்றை ஆற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


என்னை கொலை செய்வதற்கான ஒப்பந்தம் குற்றவாளி ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக எனக்கு தகவல் கிடைத்துள்ளது. இது பற்றி நான் பொலிஸ்மா அதிபருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெறவுள்ள நிலையில், இந்த கொலை திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய கிடைத்துள்ளது.

இந்த கொலையின் மூலம் பொறுப்புக் கூறவேண்டியவர்களின் தேவை நிறை வேறும் அதேவேளை, உலக நாடுகளின் தலைவர்கள் முன்னிலையில் அரசாங்கத் திற்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதும் நடைபெறும் என அவர் தெரிவித்தார்.

மங்கள சமரவீரவின் இந்த உரை தொடர்பில் பதிலளித்த சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு போதிய பாதுகாப்பில்லை என்று சுட்டிக்காட்டினார்.

இதனால் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சரிசமமான பாதுகாப்பை வழங்குமாறு தான் பொலிஸ்மா அதிபருக்கு அறிவிப்பதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார். (அ-2)



கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரனால் தொகுக்கப்பட்ட கிருஷ்ணாமிர்தம் நூல் வெளியீட்டு நிகழ்வு யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பசுக்களின் பாதுகாவலன் கு.கங்கைவேணியன் சிறப்புப் பிரதி பெறுவதையும் ஆலய பிரதமகுருக்கள், ஆதீன மகாசபைத் தலைவர் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட புலி உறுப்பினருக்கு கடூழிய சிறை

(கொழும்பு)

அநுராதபுரம் கெப்பிட்டுகொல்லாவ யக்காவெவ பிரதேசத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 68 பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட விடுதலைப்புலி உறுப்பினருக்கு 5 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஜூன் 15 ஆம் திகதியே இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. மூதூர் கிளிவெட்டி தங்க நகர் பிரதேசத்தை சேர்ந்த நபருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்றத்தின் நீதிபதி திருமதி சுவர்ணாதிபதி இந்த தீர்ப்பை வழங்கினார்.

சம்பவம் இடம்பெற்ற தினத்தில் மரம் ஒன்றில் ஏறி இருந்தவாறு பேருந்து ஒன்று வருவதாக சைகை காட்டியதாக குறித்த நபரு க்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டிருந்த சந்தேக நபருக்கு எதிராக அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (அ-2)

# ஹலால் எதிர்ப்பு நடவடிக்கையால் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளது

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சில பௌத்த அடிப்படைவாத அமைப்புகள் ஹலால் எதிர்ப்பு எனக் கூறிக்கொண்டு செயற்படுத்தி வரும் நடவடிக்கைகளினால் மேற்குலக நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதி தொழில் வீழ்ச்சியடைந்துள்ளதாக தேசிய ஐக்கியத்திற்கான அனைத்து மதங்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள தர்ம தஷ்மி மன்றத்தின் தலைவர் கலங்கம தம்மரங்சி தேரர்,

இலங்கையின் பௌத்த பிக்குகள் மேற்படி நாடுகளுக்கு செல்ல விசா அனுமதிகளை பெறுவதிலும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

பல்வேறு மதங்களுக்கும், இனங்களுக்கும் அவர்களின் கலாசாரங்களுக்கும் அவமதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் அடிப்படைவாத அமைப்புகளை நாங்கள் எதிர்க்கின்றோம்.


அந்திய மதங்களுக்கு எதிரான தவறான செயற்பாடுகள் காரணமாக வெளிநாடுகளில் இலங்கையர்கள் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர். இலங்கையர்களை வெளிநாட்டவர்கள் இனவாதிகளாக பார்க்கின்றனர்.

நாட்டுக்கு கிடைக்க வேண்டிய அந்நிய செலாவணி கிடைக்காமல் போவதற்கு இப்படியான அடிப்படைவாத அமைப்புகள் காரணமாக இருப்பது கவலைக்குரியது என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை கடந்த ஆபத்து..! பாதிக்கப்பட்ட ஃபுகுசிமா..

"உலக அணுசக்தி வரலாற்றிலேயே இதுவரை செய்யப் படாத ஒரு மீட்புப் பணி... தோற்றுவிட் டாலோ..., ஹிரோ ஷீமா, செர்னோபில் நாசங்களை விடப் பெரும் நாசத்தை உலகத்துக்கு ஏற் படுத்தும் ஆபத்து இருக்கிறது"



இன்னும் சில நாட்கள் தான் இருக்கின் றன, உலக அணுசக்தி வரலாற்றிலேயே இதுவரை செய்யப்படாத ஒரு மீட்புப் பணி- ஜப்பானில், சிதைந்து கிடக்கும் புகுசிமா அணுஉலையில் ஆரம்பிக்கப்படுவதற்கு. இது தோற்றுவிட்டால், ஹிரோஷமா, செர்னோபில் நாசங்களைவிடப் பெரிய நாசத்தை உலகத்துக்கு ஏற்படுத்தும் ஆபத்து இருக்கிறது. தோற்கும் வாய்ப்பே அதிகம் என்பதே நாம் கவலைப்பட வேண்டிய விடயம்.

புகுசிமாவில் இருக்கும் அணு உலை வளாகத்தில், நான்காம் உலையில் இருக் கும் எரிபொருள் குச்சிகள் தான், இப் போதைய பிரச்சினை. எல்லா உலை களின் பாதுகாப்பு கவசங்களும் விபத்தில் முற்றாக சிதைந்துவிட்டன. எரிபொருள் குச்சிகள் இருக்கும் பகுதிக்கு மேற் கூரையே இப் போது இல்லை. கட்டடமே நொறுங்கி விழுந்துகொண்டிருக்கும் நிலையில் இருக் கிறது. அதனுள்ளே, நீர்த் தொட்டியில் குச்சி கள் உள்ளன. குச்சிகளின் கடும் வெப்பத் தையும் கதிரியக்கத்தையும் குளிர்விக்க வேண்டிய நீரே கொதிநிலையில் இருக்கி றது. நீரை விட்டு வெளியே குச்சிகள் வந் தால், உடனே காற்றில் பட்டதும் தீப்பிடிக்கக் கூடியவை. பெரும் கதிர் வீச்சை, சீனா முதல் மேற்கு அமெரிக்கா வரை பரப்பக் கூடி யவை. இந்தக் கதிர்வீச்சின் அளவு ஹிரோ சிமா அணுகுண்டு வெடிப்பில் இருந்த கதிர் வீச்சைப் போல 14 ஆயிரம் மடங்கு அதிகம் இருக்கும்.

எரிகுச்சிகளை உலையிலிருந்து ஒவ் வொன்றாக எடுத்து இன்னொரு பாத்திர மான நீர்த் தொட்டியில் வைத்துப் பாது காக்க வேண்டும். இல்லாவிட்டால், கட்டடம் சிதைந்து இப்போதுள்ள தொட்டியிலிருந்து குச்சிகள் வெளிப்பட்டால், 14 ஆயிரம் ஹிரோசிமாக்கள் நடந்தே தீரவாய்ப் புள்ளது. எரிகுச்சிகளை வெளியே எடுப்பது, இன்னொரு தொட்டியில் வைப்பது எல் லாமே நீருக்குள்ளேயே நடக்க வேண்டும். காற்று வெளியில் குச்சிகள் வந்தால், உடனே பெரும் தீவிபத்தும் கதிரியக்கமும் தான் நடக்கும். ஒவ்வொரு குச்சியும் 300 கிலோ எடை உள்ளது. 15 அடி நீளம் உடையவை. மொத்தம் 1331 குச்சிகள் இருக்கின்றன. எரிபொருள் குச்சியை அணு உலைக்குள் பொருத்துவது, எடுப்பது எல்லாம் சாதாரண சமயத்தில் கம்பியூட்டர் உதவியுடன் இயந்திரங்களால் துல்லியமாக செய்யப்படும் வேலைகள்.

ஆனால் இப்போது, எல்லாம் சிதைந்து கிடக்கும் நிலையில், இதை மனிதர்கள் நேரடியாக ஒரு சில கருவிகளின் உதவியுடன் செய்தாக வேண்டும். குச்சிகள் எதுவும் நேராக இல்லை. எல்லாம் விபத்தினால் வளைந்தும் உடைந்தும் முறுக்கிக் கொண்டும் கிடக்கின் றன.

இந்த பிரமாண்டமான ஆபத்தான வேலையை நவம்பரில் யார் செய்யப் போகிறார்கள்?

உலையின் உரிமையாளரான தனியார் நிறுவனமான டெப்கோ, தானே செய்யப் போவதாக சொல்கிறது. இதுவரை ஃபுகுசிமா அணு உலை விபத்துக்குப் பின்னர், உலையிலிருந்து கதிரியக்கம் பரவாமல் தடுக்கும் வேலையை வேறு யாரிடமும் ஒப்படைக்காமல், டெப்கோ தானேதான் செய்துவருகிறது. ஜப்பான் அரசாங்கம் பணம் மட்டும் கொடுத்தால் போதும் என் கிறது. பணமும் அள்ளி வழங்கப்படுகிறது. ஆனால், டெப்கோவால் திருத்திகரமாக இதுவரை எந்த பாதுகாப்புப் பணியையும் முழுமையாகச் செய்ய முடியவில்லை. ஏற்கனவே, இதே உலை வளாகத்தில் இன்னொரு பகுதியில் கதிரியக்கம் உள்ள நீர் ஒரு பகுதியிலிருந்து கசிந்து இன்னொரு பகுதிக்கு செல்வதை டெப்கோ எத்தனை முயன்றும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இந்த மாதம் 9 ஆம் திகதியன்று கூட கதிரியக்க நீர் தொட்டியில் நடந்த தவறினால், ஆறு தொழிலாளர்கள் கதிரியக்க நீரில் முக்குளித்து கதிர்வீச்சுக்கு ஆளானார்கள். இந்த ஒரு விபத்தியேலயே 10 டன் கதிரியக்க நீர் வெளியே கொட்டிவிட்டதாக அதிகாரபூர்வ மாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இதுதவிர தினசரி 300 டன் கதிரியக்க நீர், ஓடைகள் வழியே கடலில் கலப்பதாக டெப்கோ ஒப்புக்கொண்டிருக்கிறது. அவசர அவசரமாக கட்டப்பட்ட ஆயிரம் கதிரியக்க நீர் தொட்டி களிலும் கசிவுகள் இருந்துகொண்டே இருக் கின்றன. அரசாங்கத்திடம் மில்லியன் கணக்கில் பண உதவி பெற்றுக் கொள்ளும் டெப்கோ, இன்னொரு பக்கம் ஆட்குறைப் பையும் சம்பள வெட்டையும் செய்து கொண்டிருக்கிறது. 2011 விபத்துக்குப்பிறகு தொழிலாளர் சம்பளத்தில் 20 சதவிகிதம் வெட்டப்பட்டது. இரண்டு வருடங்களில் 1800 தொழிலாளர்கள் வேலை இழந்தனர். தொடர்ந்து பணியாற்றுவோரில் 1973 பேருக்கு தைராய்ட் கதிர்வீச்சின் விளைவாக புற்று நோய் தொடங்கும் நிலை ஏற்பட்டிருக் கிறது.

காண்ட்ராக் அடிப்படையில் மீட்புப்பணி யில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் குடியிருக்கும் பகுதிகளில் அடிப்படை வசதி களே சரியாக கிடையாது. தொழிலாளர்கள் ஆபத்தான வேலையில், எந்த வாழ்கை உத்தரவாதமும் இல்லாமல், ஈடுபட்டிருப்பது பற்றி அறிந்திருப்பதால், மனச்சோர்வும் விரக்தியும் அடைந்து, பெரும்பாலோர் பெரும் குடிகாரர்களாக மாறி வருகின்றனர். தினசரி தங்கியிருக்கும் பகுதிக் கடைகளில் குடித்துவிட்டு சண்டையிடுவதும்மறுநாள் வேலைக்கு அரை போதையில் வருவதும் அதிகரித்துவருகிறது என்று ஜப்பான் ஏடுகள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

நவம்பரில் மேற்கொள்ளப்பட வேண்டிய பெரும் ஆபத்தான பணி, மொத்தப்பணியில் ஒரு துளிதான். இந்த அணுஉலை வளா கத்தை முற்றிலுமாக செயலிழக்கச் செய்ய 40 ஆண்டுகளும் 11 பில்லியன் டொலர் களும் தேவை. உலை வளாகத்தில் கசிந்திருக் கும் புளூட்டோனியம் தனிப்பிரச்சினை. உலக அணுசக்தி வரலாற்றில் இதுவரை புளூட்டோனியக் கசிவுகள் சில அவுன்ஸ் கணக்கில் மட்டுமே இருந்துள்ளன. ஆனால், புகுசிமாவில் டன் கணக்கில் புளூட்டோனியக் கசிவு ஏற்பட்டிருக்கிறது.

நவம்பர் சவாலை டெப்கோவாலோ, ஜப்பானாலோ தனிய சந்திக்க இயலாது என்ற கவலையை அமெரிக்க அரசியல்வாதி கள் தம் நாட்டு நா்டாளுமன்றத்தில் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். உலகில் எல்லா நாட்டிலும் இருக்கும் அணு விஞ்ஞானிகள் இணைந்து புகுசிமாவில் இடர் தடுப்புப் பணி களில் ஈடுபட வேண்டும் என்ற கோரிக்கை ஐ.நா. முன்பு வைக்கப்பட்டிருக்கிறது.

புகுசிமா விபத்து இயற்கைப் பேரழிவால் மட்டும் நடந்தது அல்ல. உலை வடிவமைப்பு சரியில்லை என்று பலவருடங்களுக்கு முன்னரே பொறியாளர்கள் எச்சரித்ததை டெப்கோவும் அரசும் மதிக்கவில்லை. விபத்துக்குப் பின்னர் நடந்த ஜப்பானிய அரசின் விசாரணையில் இந்த விபத்து,



மோசமான உலை வடிவமைப்பினாலும், அரசு அதிகாரிகளுக்கும் டெப்கோவுக்கும் இடையே இருந்த களவான பேரங்களினா லும், மனித தவறுகளாலும் நடந்த விபத்து என்றே கூறப்பட்டது.

விபத்துக்குப் பின்னரும் கூட மூன்று உலைகளின் மேற் கவசம் எல்லாம் நொறுங்கிப்போய்விட்டது தெரிந்திருந்தும், அடுத்த இரண்டரை வருடங்களுக்கு அதை மறைத்து டெப்கோ பொய் சொல்லிக்கொண் டிருந்தது. ஜப்பானில் ஊடகங்கள், பத்திரிகை கள் எல்லாம் டெப்கோ மீதான விமர்சனங் களை அடக்கி வாசிப்பதற்குக் காரணம், டெப்கோவிடமிருந்து பெருமளவில் அவற் றுக்கு விளம்பரங்கள் கிடைப்பதுதான் என்று சொல்லப்படுகிறது. அண்மைக்காலமாக புகுசீமா பற்றி ஜப்பான் அரசும் டெப்கோவும் நடத்தக் கூடிய ஊடக சந்திப்புக்களில் பெரும்பாலானவற்றுக்கு வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் அழைக்கப்படுவ தில்லை என்ற புகாரும் எழுந்துள்ளது.

இன்று அணு உலை விபத்து என்பது உரு கம்பனி, ஒரு நாடு சம்பந்தப்பட்ட விடயம் மட்டுமல்ல, அது எல்லை கடந்த பயங்கரம். ***இது எங்க ஏரியா, உள்ளே வராதே*** என்று கதிர் வீச்சிடம் எந்த தேச இராணுவமும் சொல்ல முடியாது. இந்தப் பின்னணியில்தான் நாம் புகுசீமாவை மட்டுமல்ல, கூடங்குளத்தையும் பார்க்க வேண்டும். இரண்டு வருடமாகியும் மின் உற்பத்தியை அங்கே, தொடங்கவே முடியாததற்குப் போராட்டக்காரர்கள் எந்த விதத்திலும் காரணமில்லை. அவர்கள், இருவருடங்களாக கிராமத்தில் திறந்த வெளிச் சிறையில் இருக்கிறார்கள். அணு உலை வடிவமைப்பிலேயே பிரச்சினை. வால்வுகளில் பிரச்சினை, கண்ட்டெய்னரில் பிரச்சினை, கருவிகளை வழங்கிய ரோசாட்டம், ரஷ்ய கம்பனி டெப்கோவுக்கு நிகரான- அதை விட தன் நாட்டிலேயே, அதிகக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான கம்பனி.

மக்களுக்கு ஒரே ஆறுதல், இந்தக் கூடங்குளம் அணுஉலை, நாராயண சாமிக்கு எத்தனை 15 நாள் வாய்தா வழங்கினாலும் இயங்கத் தொடங்காமலே இருப்பதுதான்.

இயங்கத் தொடங்கினால், இன்னொரு புகுசிமா இங்கே நிகழாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

புகுசிமாவைப் போலவே கூடங்குள மும் இடிந்தகரை மக்கள் பிரச்சினை அல்ல; தமிழகத்தின் பிரச்சினை; இந்தியாவின் பிரச்சினை; உலகத்தின் பிரச்சினை. எல்லை கடந்த பயங்கரங்களிலிருந்து நாம் கற்க வேண்டிய பாடம் இதுவே.

கண்கெட்ட பிறகு சூரிய வணக்கம் செய்வோரிடமிருந்து நாம் கற்காவிட்டால், நம் கண்களும் குருடாகிப் போகும்.

**நன்றி; தமிழில் வெளியாகும் இந்து பத்திரிகை**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றமும் அதுபற்றிய ஆராய்ச்சியின் அவசியமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

உலகநாடுகளை ஸ்தம்பிதம் செய்திருக்கும் இயற்கையின் திருவிளையாடலாகவே காலநிலை மாற்றத்தை உணரலாம். விஞ்ஞானம் வளர்ந்து செல்லும் வேகத்தை விட காலநிலை மாற்றம் தீவிரமடைந்து செல்கின்றது என கூறலாம்.

பாமர மக்களிடையே இது இறைவனின் திருவிளையாடலாகவும் மாணவர்கள் படித்தவர் மட்டத்தில் இயற்கையின் திருவிளையாடல்களில் ஒன்றாகவும் கருதப்பட்டாலும் விஞ்ஞானிகள் மட்டத்தில் அவர்களுக்கான இயற்கையின் சவாலாகவும் இருக்கின்றது. இதுவொன்றும் புதிதான விடயமல்ல. பருவத்தே பயிர் செய், காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என நம்முன்னோர்கள் கூறியது நினைவுக்கு வருகின்றது அல்லவா!

அந்த நாட்களில் இவ்வளவுக்கு விபரீதமான நிகழ்வுகள் நடைபெறவில்லையாயினும் அவ்வப் போது காலநிலையில் மாற்றங்களை அவதானித்து வந்ததை பதிவுகளிலிருந்து அறியலாம். ஆனால் தற்போது நிலைமை சற்று விகாரமடைந்துள்ளதை அவதானிக்கலாம். மனிதனது செய்கைகளும் விஞ்ஞான கண்டுபிடிப்புக்களால் ஏற்பட்ட பக்க விளைவுகளும் விபரீதமாகி இவ்வாறான இயற்கை அனர்த்தத்தினை நாம் எதிர்வு கொள்ள வேண்டியிருக்கின்றது. காலநிலை மாற்றத்தின் விளைவுகள் பல. நாமறிந்தவை சிலவே.

முந்தையகாலத்தில் வானத்திலுள்ள நட்சத்திரங்களை வைத்து எமது முன்னோர்கள் எதிர்வு கூறியதை நாம் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளலாம். நட்சத்திரங்களின் ஒழுங்கமைப்பு, வடிவம், தோற்றம் என்பனவற்றை வைத்து படிப்பறிவே இல்லாத நிலையில் ஓரளவுக்கு துல்லியமாக காலநிலையை கணித்ததை நாம் கேட்டும் அனுபவித்தும் வியந்திருக்கின்றோம். ஆனால் தற்போது விஞ்ஞான தொழில்நுட்பம் வளர்ந்துள்ள நிலையில் எம்மால் காலநிலையை துல்லியமாக கணிக்க முடியவில்லை. எமது விவசாய பெருமக்களுக்கு காலநிலை பற்றிய சரியான தகவல் கொடுக்கப்படாமையினால் அவர்களது பயிர் அழிவடைய நாமே காரணமாகியிருக்கிறோம். காலநிலை மாற்றம் பற்றிய கற்றல், ஆராய்ச்சி என்பன எமது பிரதேசத்திலும் முடுக்கிவி டப்பட வேண்டும். இந்த நூற்றாண்டுக்கான விஞ்ஞான வளர்ச்சிக்குள் நாமும் உள்வாங்கப்பட்டு அதன் மூலம் எமது பிரதேசத்தையும் அழிவிலிருந்து காப்பாற்றிக்கொள்ள முடியும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 35-II

காலநிலை மாற்றத்தின் உதாரணமாக இம்மாதத்தில் பருவந்தப்பி பிந்தி இப்போது பெய்த மழையை நாம் உதாரணமாகக் கொள்ளலாம். செப்டெம்பர் மாதத்தில் ஆரம்பிக்க வேண்டிய மழை காலந்தாழ்த்தி ஒக்டோபர் மாதத்தின் இரண்டாம் கிழமையில் பெய்திருக்கின்றது. இந்த சகுனம் இப்போகத்துக்கு நல்லதல்ல. மழை வீழ்ச்சியின் பரம்பலில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவே இது.

வழக்கமாக பெய்ய வேண்டிய மழையின் அளவு இதுவரைக்கும் குறைவாகவே இருந்திருக்கின்றது. அவ்வாறாயின் மிகுதி மழை இன்னும் பெய்ய இருக்கின்றது என கொள்ளலாம். இவ்வாறு பெய்ய இருக்கும் மழை தொடர்ந்து குறுகிய காலத்தில் பெய்யக்கூடிய வாய்ப்பு அதிகமே. அப்படியாயின் அடர்த்தியாக தொடர்ந்து பெய்யும் மழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உண்டு. பாதை அகலிப்பு தொடங்கி அபிவிருத்தி போர்வைக்குள் நாம் சிறைப்பட்டிருக்கும் இந்நேரத்தில் இவ்விடயத்தில் ஆழ்ந்து கவனம் செலுத்துவது நல்லது.

மாறாக இனிபெய்யப் போகும் மழை வழக்கமாக பெய்யாது பொய்த்துவிட்டால் அடுத்த வருடத்தின் தேவைக்கான நீர் எமக்கு கிடைக்காமல் போய்விடும். குளங்கள் மற்றும் நீர்நிலைகள் அனைத்தும் வற்றி வரும் வருடம் வரட்சி தாண்டவமாடும் வருடமாகவும் இருக்கலாம். இவ்வாறான அனுமானங்களை நாம் எழுந்தமானமாக எடுக்க முடியாது.

இதற்கான வசதி வாய்ப்புக்களைப் பெருக்கி ஆராய்ச்சி மூலம் கண்டறிந்து எமது மக்களுக்கும் எம்மினிய விவசாயப் பெருமக்களுக்கும் விரைந்து முன்கூட்டியே வழங்க வேண்டும். வடபுலத்துக்கான காலநிலை மற்றும் மாற்றம் பற்றிய ஆராய்ச்சியை முடுக்கிவிடுவதற்கு சிறந்த அனைத்து வசதிகளையுங் கொண்ட ஆய்வு நிலையம் அவசியம். இதனைக் கருத்திற் கொண்டே வடபுலத்தின் மையப் பகுதியான கிளிநொச்சியில் அமையவிருக்கும் விவசாய பீடத்தில் காலநிலை பற்றிய கற்றலுக்கும் ஆராய்ச்சிக்குமான மையத்தை அமைக்க திட்டம் கொடுக்கப்பட்டுள்ளது.

இங்கே அனைத்து நிலையிலுமான கற்றலுக்கும் வழிசமைத்திட வேண்டும். இங்கு நடைபெறும் ஆய்வில் விவசாய திணைக்களத்தின் பிராந்திய ஆராய்ச்சி நிலையத்தையும் இணைத்துக்கொண்டு வடபுலத்து ஆய்வாளர்களுக்கு தேவையான தகவல்களை பெற்றுக் கொடுத்திட வேண்டும்.

வடபுலத்து விவசாய செய்கையில் பாரிய மாற்றம் செய்யப்பட்டு உற்பத்தியை பெருக்கி விவசாய பெருமக்களுக்கான ஆதாயத்தை பெருக்குவதற்கு வழிசெய்தல் வேண்டும். அதற்கு தடையாக இருக்கின்ற காரணிகளை இனங்கண்டு அவற்றை சரிசெய்ய வழிசெய்தல் வேண்டும். விவசாயசெய்கையில் பீடை பிரச்சினை, அசேதன பசளை பயன்பாடு, சந்தைப்படுத்தல் என்பன பிரச்சினையாக இருப்பினும் அதற்கும் மேலாக இப்போது காலநிலை மாற்றம் உருவாகியிருக்கின்றது. அதற்கு தற்போதைய பிந்திய மழை உதாரணமாகும்.

இவ்வாறான பிரச்சினைகளை முகங்கொடுக்க இவை பற்றிய விரிவான ஆராய்ச்சி தேவைப்படுகின்றது. வளிமண்டலவியல் மற்றும் காலநிலை பற்றிய ஆய்வு மையத்தை அமைத்து தனித்துவமான உயர் ஆராய்ச்சிகளை நாம் செய்வதற்கு வழி செய்தால் எதிர்காலத்தில் நாம் எதிர்கொள்ளவுள்ள எவ்வகையான சவால்களுக்கும் இயன்றவரை முகங்கொடுக்க முடியும். இயற்கையின் சீற்றம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டும் பல உயிர்களைக் காவுகொடுப்பதையும் பலநாடுகளில் நடக்கும் நிகழ்வுகளிலிருந்து அறியமுடிகின்றது.

எமது நாட்டிலும் சுனாமியின் தாக்கத்தால் இழந்த உயிர்கள் கணக்கிலடங்காது. இவ்வாறாக உயிரிழப்புகள் இனியும் எமது நாட்டில் நடைபெற்றால் எவ்வாறு முன்கூட்டியே தடுப்பது என்பதற்கும் இவ்வாய்வுகள் கைகொடுக்கும்.

எமது நாட்டின் விவசாயஞ் சார்ந்த கைத்தொழிலின் அபிவிருத்திக்கு காலநிலை மாற்றத்தின் பங்களிப்பு கணிசமானது. இழப்புக்களைத் தவிர்ப்பதற்காக நாம் இனியும் முன்னின்று பாடுபட வேண்டும். இப்பூமிப்பந்தில், நிகழவிருக்கும் அனைத்து அனர்த்தங்களையும் முன்கூட்டியே துல்லியமாக கணித்து மக்களுக்கு வழங்கி அவர்களையும் விவசாயத்தையும் பாதுகாக்க வேண்டும். விவசாயம், கால்நடை, மீன்பிடி என்பனவற்றிற்கு காலநிலை கைகொடுக்க வேண்டும். காலநிலை மாற்றத்தை முன்கூடியே தீர்மானிக்க முடிந்தால் அது எமது வெற்றியாகும்.

பயிர்களில் வருகின்ற நோய்கள், பீடைபெருக்கம், வரட்சி, கடுங்குளிர், பகல்நேர வளிமண்டல வெப்பநிலையில் மாற்றம், இரவு வெப்பநிலையில் மாற்றம், காற்றின் வேகம், இயற்கையின் ஏனைய அனர்த்தங்கள் என்பன இங்கே கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். இவ்வனர்த்தங்களை கையாள அனைவரையும் தயார்ப்படுத்துதல் அவசியமாகும்.

அபிவிருத்தியின் பாதையில் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் முன்னால் பிரச்சினைகள் மேகக்கூட்டமாக வந்து கொண்டேயிருக்கும். அனைத்தையும் தாண்டி அபிவிருத்தியின் சில்லுகளை முன்னகர்த்த வேண்டும். இதற்கு அனைவரினதும் பங்களிப்பு மிக மிக அவசியமாகும்.



உயரப்புலம் மெதடிஸ்த மிசன் அ.த.க.பாடசாலையில் கல்வி சுற்றுலா அதிபர் கு.திலீபன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது கண்டி, நுவரேலியா பிரதேச சபையை குழுவினர் பார்வையிட்ட போது.. (படம்:- என்.குமார்)

# முஸ்லிம்களுடனான பிரச்சினையை பேச்சுக்கள் மூலமே தீர்க்க வேண்டும்

## பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான சில வன்முறைகளை கண்டிக்கும் அதேவேளையில் இவற்றை சகல மதத் தலைவர்களின் ஒத்துழைப்புடன் சமாதானமாக தீர்த்து வைப்பதன் மூலமே பிரச்சினைக்கு தீர்க்கமான முடிபு எடுக்க முடியும் என்று பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல நாடுகளிலும் மத ரீதியிலான மோதல்கள் இடம்பெறுகின்றன. அமெரிக்காவின் தென் பகுதியில் கறுப்பின மக்கள் வாழும் பகுதியில் உள்ள பெப்ரிஸ்ட் கிறிஸ்தவ தேவாலயங்களை அங்குள்ள வெள்ளையின மதவாதிகள் சேதப்படுத்தி வருகின்றார்கள்.

அது போல் இந்தியாவிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் ஆபிரிக்காவிலும் இத்தகைய மதவாத வன்முறைகள் இடம்பெறுகின்றன.

முஸ்லிம்களுக்கு எதிராக சில பௌத்த அமைப்புக்கள் அச்சுறுத்தல்களை புரிகின்றனவே இதைப்பற்றி உங்கள் கருத்து என்னவென்று பத்திரிகை ஆசிரியர் ஒருவர் கேள்வி எழுப்பியதற்கமைவாகவே பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேற்கண்டவாறு பதிலை அளித்தார்.

கொழும்பு கிராண்ட்பாஸில் சமீபத்தில் இந்த வன்முறை ஆரம்பித்த தென்று கூற முடியாது. 1980,1990 களிலும் இவை இடம் பெற்றுள்ளன.

இத்தகைய பிரச்சினைக்கு இருபக்கங்கள் உள்ளன. அவற்றை நாம் ஆராய்ந்து பார்த்து பிரச்சினைகளை சமரசமாக தீர்த்து வைக்க வேண்டும். காரணமின்றி பிரச்சினைகள் ஏற்படாது என்பதையும் சுட்டிக்காட்டினார். (அ-2)

# தூதுவர்களுக்கு நியமன கடிதங்கள் வழங்கப்பட்டன

இலங்கைக்கான மூன்று நாடுகளின் புதிய உயர்ஸ்தானிகர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தமது நியமனக் கடிதங்களை கையளித்துள்ளதாக ஜனாதிப தியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இந் நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்றது.

சூடானிய உயர்ஸ்தானிகராக கலாநிதி ஈ.எல்.தாலிப், மொசம்பிக் உயர்ஸ்தானிகராக போசோ மரியா டி சில்வா வெய்ரா, உகண்டா உயர்ஸ்தானிகராக எலிசபத் போலா ஆகியோர் தமது நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா நூலகம் சிறந்த நூலகமாக தெரிவு

(குருமன்காடு)

தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையால் நடத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்புமாத நிகழ்விற்கான விருதும், 2013 ஆம் ஆண்டில் சிறந்த நூலகத்திற்கான விருதும் வவுனியா நகரசபையின் பொதுநூலகத்திற்கு கிடைத்துள்ளது.

இதற்கான பரிசில்களை எதிர்வரும் 29 ஆம் திகதி கல்வி சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்கா முன்னிலையில் இலங்கை அறக்கட்டளை நிறுவனம், கொழும்பு 7 இல் வழங்கப்படவுள்ளது என சபையின் செயலாளர் க.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (ம-250)

## பரிசளிப்பு விழா

(கிளிநொச்சி)

கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்புவிழா எதிர வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை முதல்வர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர்களான சு.கனகசபாபதி , திருமதி.பு.ஆறுமுகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-254)

## கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்துக

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கசிப்பு உற்ப்த்தி அதிகரித்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த இடத்தில் நாளுக்கு நாள் கசிப்பு உற்ப்த்தி அதிகரித்து வருவதால் கலாசார சீரழிவு இடம் பெறுவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உற்பத்தி செய்யப்படும் கசிப்பு பெட்டிகளில் எ்டுத்துச் செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் முன்வர வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-263)





### பொருத்தமான இடத்தில்

# தனியார் பேருந்து நிலையம் இயங்க நடவடிக்கை எடுங்கள்

(முல்லைத்தீவு)

**தற்காலிகமாக இடத்துக்கிடம் மாறி இயங்கும் முல்லை. மாவட்ட தனியார் பேருந்து நிலையத்தினால் பயணிகள் பெரும் இடர்பாடுகளை எதிர் கொள்வதாக கவலை தெரிவித்துள்ளனர்.**

கடந்த 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மேற்குறித்த மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டிலிருந்து இயங்கிவரும் தனியார் பேருந்து நிலையம் தற்காலிக இடங்களில் இடம் மாறி இயங்குவதால் பயணிகள் அவஸ்தையுறுகின்றனர்.



முன்னர் பொதுச்சந்தை அருகில் இயங்கி வந்த இத்தனியார் பேருந்து நிலையம் மாவட்ட செயலகத்திற்கு முன்னால் இயங்கிய பின்னர் செல்வபுரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள கொல்லுப்பிட்டியிலும் பின்னர் முல்லைத்தீவு நகர மைதானத்திலும் முல்லை. மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவும் இயங்கி தற்போதுமுல்லைமாவட்ட செயலகத்திற்கு சொந்தமான தேநீர் வளாகத்திற்கு முன்னால் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

தற்போது இயங்கும் பேருந்து நிலையத்தால் விபத்துக்களையும் மற்றும் இட நெருக்கடிகளையும் எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

முல்லைத்தீவு தெற்கு, மணற்குடியிருப்பு, கோவிற்குடியிருப்பு, செல்வபுரம், வண்ணாங்குளம், உப்புமாவெளி, சிலாவத்தை, சிலாவத்தை தெற்கு, கள்ளப்பாடு தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, முள்ளிவாய்க்கால் கிழக்கு (வட்டுவாகல்) ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 3ஆயிரத்து 372 குடும்பங்கள் தனியார் பேருந்து நிலையத்தை பயன் படுத்துகின்றனர்.

தற்காலிகமாக இயங்கும் இத்தனியார் பேருந்து நிலையத்தை தினமும் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட பயணிகள் பயன்படுத்துகின்றனர்.

எனவே தற்காலிகமாக இயங்கும் இத்தனியார் பேருந்து நிலையத்தை முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் உள்ள 2ஏக்கர் அரச காணியில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமானால் முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மாங்குளம், திருகோணமலை ஆகிய இடங்களிற்கு செல்வதற்கு இலகுவாக இருக்கும் என்பதே பயணிகளின் வேண்டுகோளாகும். (ம-267)

## குளக்கட்டு பாதைகளை புனரமைத்து தாருங்கள்

(குருமன்காடு)

மழை காலத்திற்கு முன்னர் குளக்கட்டு பாதைகளை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, வவுனியாவில் பல குளக்கட்டு பாதைகள் புனரமைக்காது காணப்படுகின்றன . அவற்றை புனரமைத்து தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



கடந்த வருடம் பெய்த மழையினால் பல குளங்கள் பள்ளமாகி இருப்பதோடு பயணம் செய்யமுடியாது காணப்படுகின்றது.

இவ்வாறு குளக்கட்டு பாதைகள் பல இதுவரையும் திருத்த வேலைகள் இடம் பெறாது காணப்படுகின்றன. இதனால் மழை காலங்களில் பயணம் செய்கின்ற மாணவர்கள் பல சிரமங்களை நோக்குவதாக மக்கள் சுட்டி காட்டுகின்றனர்.

குறிப்பாக பண்டாரிக்குளம், தட்சனாங்குளம், முதலான குளக்கட்டு வீதிகள் மிக மோசமாக காணப்படுகின்றன. இதனால் பாடசாலை மாணவர்கள், தொழில் புரிபவர்கள் , நோயாளிகள் என பலர் மழைகாலங்களில் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர். ஆகவே மாரி மழைக்கு முன்னர் குளக்காடு பாதைகளை திருத்தி தருமாறு மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-250)


## சட்டவிரோத மீன்பிடி; இருவருக்கு அபராதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் பதிவு இல்லாமல் ,அனுமதிப பத்திரம் இல்லாமல் டைனமைற் பாவித்து மீன்பிடியில் ஈடுபட்ட இரண்டு மீனவர்களுக்கு தலா 15ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் படகு எஞ்சின்களை அரசுடைமையாக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்

கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அதிரடி சோதனை நடவடிக்கையின் போதே மேற்படி வள்ளங்கள், வலைகள் என்பன கைப்பற்றப்பட்டிருந்தன.வலைகளை அழித்து விடுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ம)




சிவநகர் முதியோர் தினவிழா நேற்று முன்தினம் சங்கத் தலைவர் அ.ரகுபதி தலைமையில் நடைபெற்ற போது...

(படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணோடு மண்ணாகி எம்முடன் இரண்டற கலந்த மாவீரர்களை எங்ஙனம் மறப்பது

## வடக்கு மாகாண உறுப்பினர் து.ரவிகரன் உருக்கம்

**(யாழ்ப்பாணம்)**

**எமது மாவீரர்களின் மூச்சுக்காற்று எம்முடன் கலந்தே இருக்கிறது. அவர்களின் மூச்சுக்காற்றையே எம் மக்கள் சுவாசிக்கின்றனர். மறவர்கள் சிந்திய இரத்தம் எங்கள் கடல் நீரில் கலந்தே இருக்கின்றது. அந்த நீரைப் பருகும் மீனையே எமது மக்கள் உண்கின்றனர். எம் மண்ணோடு இரண்டறக் கலந்தவர்களை எம்மிடமிருந்து எப்படி பிரித்து விடமுடியும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார். வடக்கு மாகாண சபை முதலாவது அமர்வின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் தமிழ்த் தேசிய இனத்தின் பிள்ளைகள். ஒருங்கிணைந்த வடகிழக்கே எமது தாயகமாகும். இத்தாயகத்தில் முழுமையான சுதந்திரத்துடன் வாழவேண்டுமென்கின்ற தமது ஆழமான அபிலாஷையையே மக்கள் தமது வாக்குகள் மூலம் மீண்டுமொரு முறை உணர்த்தியிருக்கின்றனர்.

மீளக்குடியேறச் சென்ற கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி மக்கள், தமது 2ஆயிரத்து 568 ஏக்கர் ற்கும் மேற்பட்ட விளை நிலங்கள் அபகரிக்கப்பட்டிருப்பதால் தமது வாழ்வாதாரம் இழந்ததை அழுகுரலோடு என்னிடம் கூறுகிறார்கள்.

அதுமட்டுமல்ல நாயாறு மற்றும் கொக்கிளாய் ஆறுகளில் என்றுமில்லாதவாறு தென்னிலங்கை மீனவர்களின் தடைசெய்யப்பட்ட தொழில்களின் ஆதிக்கம், அதிகாரங்களின் ஆசீர்வாதத்தோடு அதிகரித்துள்ளது.

முல்லை. மக்கள் இன்னும் ஆற்றாமையில் அழுதுகொண்டே இருக்கிறார்கள். முன்னாள் போராளிகள், கணவனை இழந்த பெண்கள், விசேட தேவையுடையோர், தாய், தந்தை இழந்தோர், ஆதரவற்றோர் என்று எம் மக்களின் சோகங்களின் அடையாளங்கள் ஏராளம். எம் மக்களில் பலர் இன்னமும் உடலினுள் குண்டுகளின் சிதறல்களுடன் தான் நடமாடுகின்றனர்.

எங்கள் மாணவர்களின் கல்வி நிலை மிக மோசமாகவுள்ளது. இவ்வாறான நிலையில், முல்லை.கல்வி வலயத்துடன் இரு சிங்களப் பாடசாலைகள் இணைக்கப்பட்டு, தொழில்நுட்பப் பிரிவு ஆரம்பிப்பதற்கான அனுமதியும் வலயக் கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்டிருக்கின்றது. குடியேற்றப்பட்ட 460 சம்பத்நுவர மாணவர்களுக்கு கொடுத்த முக்கியத்துவம் எம் மண்ணின் மைந்தர்களான தமிழ் மாணவர்கள் 17ஆயிரத்து 739பேருக்கு ஏன் வழங்கப்படவில்லை? காணாமற்போனோர் பற்றிய பிரச்சினை எம் மண்ணின் இன்னோர் சோகமாகும். உறவுகளைத் தொலைத்தவர்கள். கதறிய குரல்கள் இன்னமும் என் காதில் கேட்டுக்கொண்டிருக்கின்றது.

எம் தேசிய இனத்தின் விடுதலைக்காக உயர்த்தியாகம் செய்த எங்கள் பிள்ளைகளான மாவீரர்களின் நினைவிடங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன. எதற்காக அழிக்கப்படுகின்றன? எம்மிடமிருந்தும் எம் நினைவுகளில் இருந்தும் அவர்களைப் பிரிப்பதற்கா? அது ஒருபோதும் நடைபெறாது.

அவர்களின் மூச்சுக்காற்று இன்னமும் எம்முடன் கலந்தே இருக்கின்றது. அக்காற்றைத் தான் எம் மக்கள் சுவாசிக்கின்றார்கள்.

அவர்களின் உடல்கள் எம் மண்ணுடன் கலந்து விதையாயிருக்கின்றன. அங்கே முளைக்கும் தாவரங்களைத்தான் நாம் உட்கொள்கிறோம். அவர்களின் எண்ண அலைகள் இன்றும் எம் பிரபஞ்சத்தில் நிறைந்தே இருக்கின்றன.

அவற்றைத்தான் எம் மக்களின் எண்ண அலைகள் ஈர்க்கின்றன. இப்படி காற்றிலும் கடலிலும் விண்ணிலும் நிறைந்து, உணவிலும் நீரிலும் எண்ணத்திலும் எம் மக்களோடும் எம் மண்ணோடும் இரண்டறக்கலந்தவர்களை எம்மிடமிருந்து எப்படி பிரிந்து விடமுடியும்?

எம் நினைவுகளில் நீங்காத காவிய நாயகர்கள் உறங்குவதற்கு துயிலும் இல்லங்களை மீள அமைப்பது எப்போது? சத்திய வேள்வியில் தம்மை அர்ப்பணித்து சரித்திரமாகிவிட்ட மறவர்களைப் பூசிப்பது எப்போது? அவர்களுக்கான கோயில்களை மீள எழுப்புகிற பணியை எங்கிருந்து ஆரம்பிக்கப் போகிறோம்?

இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது அடிப்படை மனித நாகரிகம். இந்த நாகரிகத்தை நிலை நிறுத்தக் கூட உலகம் முன்வராதா என்ன? உலகின் மனச்சாட்சியை தட்டி எழுப்பி கேள்வி கேட்பது எப்போது?

இறுதிப் போர் நடந்த முள்ளிவாய்க்கால் மண்ணை சிந்தித்துப் பாருங்கள். பல்லாயிரக் கணக்கான போராளிகள், பொது மக்கள் உயிர்த்தியாகம் செய்த அம்மண்ணின் இறுதி நாட்களைச் சற்றுத் திரும்பிப் பாருங்கள். அம்மண்ணில் ஒரு நினைவுச் சின்னத்தை நாம் அமைக்க வேண்டாமா? நாம் அனைவரும் ஒன்றாக சேர்ந்து ஒரு நிமிட அக வணக்கத்தை அம் மண்ணில் நின்று ஆற்றிட வேண்டாமா? உடனடியாக அதைச் செய்வோமே. தமிழ்த் தேசிய இனத்தின் வலியின் அடையாளமான முள்ளி வாய்க்காலில் நாம் அனைவரும் எங்கள் உறவுகளுக்காக ஒரு நிமிடம் மௌனமாக வணக்கம் செலுத்துவது, நாம் அனைவரும் ஒற்றுமையில், சரியான திசையில் செல்கிறோம் என்பதை அந்த ஆத்மாக்களுக்கும் எம் மக்களுக்கும் எடுத்தியம்பும் அல்லவா?

எம் மக்களின் நல்வாழ்விற்காக குரல் கொடுக்கின்ற தமிழக மக்கள் பிரதிநிதிகள், புலம்பெயர் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரை ஒன்றிணைத்து வலுவான உலக சக்தியாக எம்முடைய பிரச்சினை பற்றி விவாதிக்கலாமே? எம் மக்களின் தேவை பற்றிப் பேசலாமே... இது எம் தீர்வை விரைவுபடுத்துமல்லா? இலங்கைத் தீவின் நீண்ட கால சமாதானத்தையும் இது உறுதிப்படுத்துமல்லவா? நான் இங்கே கோரி நிற்பது எமது இனத்தின் விடுதலை ஒன்றே. களம், புலம், தமிழகமென நாம் அனைவரும் ஒற்றுமையுடன் சேர்ந்து எம் உரிமையை வென்றெடுப்போம் என்று கேட்டு நிற்கிறேன். எங்களின் தாகம் எங்களின் தாயகம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4-6)


எங்கும் இல்லாதவாறு சிறப்புத் தள்ளுபடிகள் !!!

TCT MULTI TRADE CENTRE

இனிய தீபாவளி திருநாளை முன்னிட்டு
ரி சி ரி பல்பொருள் விற்பனை நிலையத்தில்

சிந்தியுங்கள் செயற்படுங்கள் சேமியுங்கள்




❖ ரி சி ரி புடைவையகம்

**ரிசிரி புடைவையகத்தில் தெரிவு செய்யப்பட்ட புடைவை வகைகளுக்கு 5% - 10% வரை விலைக்கழிவுடன், சிறப்பு விற்பனைப்பகுதியும் செயற்படும்.**

☞ ஆண்களுக்கான - சேட் .ரீ-சேட் .சோட்ஸ் வகைகளுக்கு - 10% விலைக்கழிவு
பெண்களுக்கான - ஸ்கேட், ரீ-சேட், பிளவுஸ், சல்வார் துணிகள், கவுஸ்கோட் வகைகளுக்கு - 5% விலைக்கழிவு

☞ தெரிவு செய்யப்பட்ட சிறுவர்களுக்கான, குழந்தைகளுக்கான ஆடைகள் என்பனவற்றுக்கும் விசேட வில்லக்கழிவுகள் அத்துடன் எமெரல் சேட் (Emerald Shirt) வகைகளுக்கு - 5% விலைக்கழிவு

☞ வெனிவீல்ட் (VENFIELD) சேட் ஒன்றினை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு 5% விலைக்கழிவுடன் தீபாவளி அன்று வெளியாகும் "ஆரம்பம்" திரைப்படத்தினை பார்வையிடுவதற்கான ரிக்கெட் ஒன்று இலவசமாக வழங்கப்படும் இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

*உங்கள் தீபாவளியினை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட இன்றே விரையுங்கள்*
*உங்கள் அபிமானத்திற்குரிய ரிசிரி புடைவையகத்திற்கு.*
*உங்கள் திருப்தி எங்கள் நிறைவு*

❖ ரி சி ரி பான்சியகம்

வாடிக்கையாளர் எங்கும் இல்லாதவாறு தமது சுயதெரிவுகளுக்கமைய ஒழுங்கமைக்கப்பட்ட எமது அழகு சாதனப் பகுதி வழங்கும் தள்ளுபடிகள்!

☞ தெரிவு செய்யப்பட்ட மின்சாதனப் பொருட்களுக்கு 5%.
☞ ரெயின்கோட், குடைகளுக்கு 10%.
☞ அலுமினிய, சில்வர் பாத்திரங்களுக்கு 5%,
☞ DSI ,பாட்டா பாதணி வகைகளுக்கு 5%,
☞ Kevilton CFL Bulbs வகைகளுக்கு 15% விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளுங்கள்

❖ ரி சி ரி பல்பொருள் விற்பனை நிலையம்

உங்கள் பெருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சொக்லேட், இனிப்பு, பிஸ்கட் வகைகள் எம்மிடம் உள்ளன. மேலும் தள்ளுபடிகள் பல....

☞ Ritz bury கேக் வகைகளுக்கு 5% விலைக்கழிவு
☞ தெரிவு செய்யப்பட்ட Washing powder, சோப் வகைகளுக்கு விலைக்கழிவும், இலவச இணைப்புகளும்
☞ தெரிவு செய்யப்பட்ட பிஸ்கட் வகைகளுக்கு இலவச பிஸ்கட் இணைப்புக்கள்
☞ கார்பிக், மோட்டீன் வகைகளுக்கு இலவச அன்பளிப்புக்கள்
☞ கிளீனர் வகைகளுக்கு விலைக்கழிவும், இலவச இணைப்புகளும்
☞ தெரிவு செய்யப்பட்ட Cologne வகைகளுக்கு விலைக்கழிவு
☞ தெரிவு செய்யப்பட்ட நூடில்ஸ், சோயா வகைகளுக்கு இலவச இணைப்புக்கள்
☞ தீபாவளி தினத்தன்று Prima Chicken வகைகளுக்கு 8% விலைக்கழிவு

அத்துடன் எமது வாடிக்கையாளர்களின் நலன் கருதி எம்மால் 120க்கு மேற்பட்ட பொருட்கள் (பால்மா, எண்ணெய் வகைகள் உட்பட) குறித்த விலையிலிருந்து விலை குறைப்பு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமையை வாடிக்கையாளர்களுக்கு ஞாபகமூட்டுகின்றோம்

*உங்கள் தீபாவளி பெருநாள் சிறப்புற எங்கள் வாழ்த்துக்கள்*

**TCT பல்பொருள் விற்பனை நிலையம்**

527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P . No - 021 745 1895 / 021 222 8025 / 077 751 1285

C/5286


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் தாகம் தமிழீழ தாயகம்

**முதலமைச்சரின் முதலாவது உரை**

அமைதியாக ஒதுங்கிய வாழ்க்கை வாழ்ந்து வந்த என்னை சிறிய கால இடைவெளிக்குள் ஒரு நாடறிந்த, உலகறிந்த அரசியல் வாதியாக மாற்றப் பாடுபட்ட என் அன்பார்ந்த உள்நாட்டு, வெளிநாட்டு நண்பர்களுக்கும் மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் அபிமானிகளுக்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

நடந்து முடிந்த தேர்தலில் எனக்கு அமோக வாக்குகளை வழங்கி என்னை முன்னணி வேட்பாளர் ஆக்கியமைக்கு யாழ். மாவட்ட வாக்காளர்களுக்கும் மற்றும் பல சிரமங்களுக்கு மத்தியில் வருகை தந்து வாக்களித்த பிற மாவட்டங்களில் வசித்து வரும் யாழ். மாவட்ட வாக்காளர்களுக்கும் என் உள்ளம் கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

இவர்கள் யாவருக்கும் என் மேல் இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை என்னைப் பிரமிக்க வைக்கின்றது. அதே நேரத்தில் சாதாரண தமிழ் மக்களின், எனதருமைச் சகோதர சகோதரிகளின் எதிர்பார்ப்பு என்னைச் சில்லிட வைக்கின்றது. இறைவா! இவர்கள் யாவரையும் காப்பாற்று என்று உளமாற இறைஞ்சுவதை விட என்னால் வேறொன்றும் கூற முடியாமல் இருக்கின்றது. எனினும் எங்கள் யாவர் மனத்திலும் நம்பிக்கை திரும்பி உள்ளது என்பதை உணர்கின்றேன். அது தொடர வேண்டும். அந்த நம்பிக்கை தான் எம்மை எதிர்காலத்தில் காட்டமுடன் வழிநடத்தும்.

இன்று உதயமாவது வடமாகாணத்தின் முதல் மாகாண சபை. ஆனால் அதனை வழிநடத்துவதற்குரிய உட்கட்டமைப்புக்கள் கூட இதுவரையில் முறையாகப் பொருத்தப் படவில்லை. எம்மை எதிர்நோக்கும் பாரிய சவால்களை எதிர் நோக்கக்கூடிய மனித வளங்களையோ, பொருள் வளங்களையோ நாம் இன்னும் பெறவில்லை. முறையற்ற முன்னைய ஆட்சிமுறை முடிவுற்றுத் தொடர்கின்றது.

நாம் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலேயே தேர்தலில் வெற்றி பெற்று வந்துள்ளோம். ஆனால், பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் ஓட்டைகள் உள்ள ஒரு பாத்திரம் போன்று ஒன்றுக்கும் உதவாதது போல் காட்சி அளிக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையை எமதருமை மக்கள் தொடர்ந்து வந்து தேர்தல்களில் ஏற்றதன் காரணத்தினால் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் குறைபாடுடையது என்பதும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தன்மை அதற்கு இல்லை என்பதும் தெட்டத் தெளிவாக விளங்குகின்றது.

சுதந்திரமான மாகாண சபை ஒன்று திறம்பட செயற்பட பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் வழி அமைத்துக் கொடுக்கவில்லை என்பது கவலைக்கிடமாகவே இருக்கின்றது. எனினும் அரசாங்கமானது தமிழ்பேசும் மக் கள் எமக்கு அளித்துள்ள ஆணையை கவனத்திற்கு எடுத்து புனர்நிர்மாணம், புனரமைப்பு மேலும் அபிவிருத்தி ஆகியவற்றில் சிரத்தை காட்டி உரியவாறு அவற்றைத் திறம்பட செயலாற்ற உதவி அளிக்கும் என்று எதிர்பார்க்கின்றேன்.

சர்வதேச நாடுகள் இருதரப்பாரின் ஒத்துழைப்புடன் எமக்கு தொழில்சார் அறிவுரைகளை வழங்கி நிதி வழங்கி மேற்கண்டனவற்றை வெற்றிகரமாக நடத்தி முடிக்க எமக்கு பக்க துணையாகவும் பலமாகவும் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

இருந்தும் நாம் சட்டத்திற்கு அமைவாகவே நடக்க முன்வந்துள்ளோம். இருக்கும் பொறிகளையும் வழிமுறைகளையும் முடியுமான அளவு அனுசரித்து முன்னேற திடசங்கற்பம் பூண்டுள்ளோம். இதன் பொருட்டு குறுகிய கால, நீண்ட கால நோக்குகளை முன்வைத்து முன்னேற உத்தேசித்துள்ளோம்.

குறுகிய இலக்குகளை நாம் ஆராய்ந்தோமானால் முதல் மூன்று மாதங்களுள்

1. ஜனநாயக முறையையொட்டி குடிமக்கள் நிர்வாகம் நடைபெற ஆவன செய்தலையும்

2. எமது கடமைகளை செவ்வனே தொடர்ந்தியற்ற அதற்குரிய மனித, பொருள் வளங்களைப் பெற முயற்சித்தலையும்

3. எமது மக்களுக்கு தேவையானவற்றை முந்துரிமை (Priorities) தந்திரோபாயங்கள் (Strategies) ஆகியவற்றின் அடிப்படையில் தெரிந்து கொள்ள வழி அமைத்தலையும் அவை உள்ளடக்குவதாக அமைவன என்றார்.

**எதிர்க்கட்சித் தலைவர் (க.கமலேந்திரன்)**

தமிழர் துயர் துடைப்பதற்கு நாம் நம்மிடையே உள்ள அனைத்து வகையான பேதங்களையும் மறந்து அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம் என வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் க.கமலேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம் பல மாற்றங்களையும் பின்னடைவுகளையும் சந்தித்தே வந்துள்ளது.

நெருக்கடிகள் மிகுந்த கால கட்டங்களை தன்னம்பிக்கையுடன் எதிர்கொண்டு வெற்றிகரமாக அவற்றை மாற்றி அமைத்து வரும் எமது தலைவர் தோழர் டக்ளஸ் தேவானந்தாவின் உறுதிமிக்க கொள்கைகளுக்காகவும் எமது மக்களின் விடிவுக்காகவும் சுதந்திரமானதும் நீதியானதுமான அரசியல் உரிமைகளை வென்றெடுக்கவும் இறுதிவரை போராடி







வீழ்ந்த எமதருமைத் தோழர்களின் கனவுகள் நனவாகிய இந் நாளில் நான் அவர்களையும் தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் அரசியல் உரிமையுடனான வாழ்வுக்காகவும் தமது உயிர்களை தியாகம் செய்த அத்தனை போராளிகளையும் தமிழ் இன விடுதலைப் பயணத்தில் பலியாகிப்போன எமது மக்களையும் நினைவில் கொண்டு எனது கன்னியுரையை நிகழ்த்துவதில் பெருமையும் புளகாங்கிதமும் அடைகின்றேன்.

இதுவரை நலிந்து போயுள்ள எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் எமது எதிர்கால இளைய சந்ததிகளின் நலன் காக்கவும் அவர்களுக்கான முன்னேற்றப் பாதையினை வழிகாட்டிச் செல்லவும், சமூகத்தில் எதிர்காலம் குறித்த கேள்விகளோடு தனித்து விடப்பட்டிருக்கும் தமிழ் இயக்கங்களின் முன்னாள் போராளிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தவும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்குமான நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு எமது தோள்கள் மீது சுமைகளாக பாரப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான பொறுப்புக்களை நிறைவே ற்ற வேண்டிய நிலையில் நாம் நம்மிடையே உள்ள அனைத்து வகையான பேதங்களையும் மறந்து நமது மக்களின் நலனுக்காக அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்ற வேண்டுகோளை உங்கள் முன்வைக்கின்றேன்.

இறுதி யுத்தத்தில் நாம் இழந்து போன எம் உறவுகளை கண்ணீருடன் நினைவுகூரும் இந்த வேளையில் யுத்தத்தினால் உடல் மற்றும் உள ரீதியான பாதிப்புக்களுக்கு உட்பட்டுள்ளார்கள். அவர்களுக்கான உடல், உள நலன் சார்ந்த வழிகாட்டுதல்கள், சிகிச்சை முறைகள், நலனோம்பும் செயற்பாடுகளை எமது சுகாதாரத்துறையினர் விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

கல்வியை மீண்டும் எமது இளைய சமுதாயத்தினர் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக அவர்களுக்குரிய வழிகாட்டல்களையும் அதற்கான மூல வளங்களையும் வடமாகாண கல்வியமைச்சு வழங்குவதற்கான ஆயத்த நிலைகளை முதலமைச்சர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

எமது நாளைய சந்ததியினர் அரசியல் உரிமையுடனும் பாதுகாப்புடனும் கூடிய எதிர்காலத்தை பெற்றுக் கொடுப்பதுதான் கைமாறாக இருக்க முடியும். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சத்தியப்பிரமாணமும் நம்பிக்கையுடனான வெளிப்பாடும் எமக்கு நம்பிக்கையை தந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்ட ஆணையை தமிழ் மக்கள் வழங்கியிருக்கின்றார்கள். எனவே தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறைவேற்ற வேண்டும் என்றும் தமிழ் மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கின்றேன் என்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

**வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்**

மாவீரர்கள் கண்ட கனவுகளை நிச்சயம் வென்றெடுப்போம். இது எம் மறவர்கள் மேல் சத்தியம். தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம் என்றார் மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம்.

அடக்கு முறைகளுக்கு எதிராக எமது தலைவர்கள் போராடியும் பேசியும் வந்திருக்கின்றார்கள். ஆனால், பிரச்சினைகள் தரவில்லை. எமது தமிழ்த் தலைவர் அமரர் செல்வநாயகம் பண்டாவுடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுக் கொண்டாலும் அதன் பின்னர் ஒத்துழைப்பு நல்கினாலும் இறுதியில் குழப்பங்களே மிஞ்சியது. இணக்க அரசியலை ஏற்றுக் கொண்ட வர்கள் என்ன சாதித்தார்கள். அதற்கான சரியான பதிலையே வடக்கு மக்கள் இத்தேர் தலில் வழங்கியுள்ளனர். வடக்கு கிழக்கிலே ஒரு நடைமுறை அரசாங்கத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் எட்டியிருந்தனர். அது சர்வதேசத்தின் உதவியுடன் அடித்து நொருக் கப்பட்டதுடன் எமது நிலையை மாற்றிய மைத்தது.

உள்ளக சுயநிர்ணய சர்வதேச நீதி விசாரணையையும் தான் நாங்கள் கேட்டு நிற்கின்றோம். இவற்றினை தராவிட்டால் தென் சூடானிலே கிழக்குத் தீமோர் போன்ற நாடுகளில் நடைபெற்ற வரலாற்றை இலங்கை அரசிற்கு சுட்டிக்காட்டவிரும்புகின்றோம்.

ஒரே நாட்டிற்குள் தீர்வுத் திட்டத்தை நாம் ஏற்று நிற்கின்றோம். இதனை சர்வதேசமும் இந்தியாவும் பெற்றுத் தர வேண்டும்.

எமது மக்கள் கொல்லப்பட்ட போது காப்பாற்ற முன்வராத சர்வதேசம் எமது ஆயுதப் போராட்டத்தின் விளைவாக எமது பிரச்சினை சர்வதேச ஆதரவாக உருவெடுத்து நிற்கின்றது.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் பெறப்பட்ட சர்வதேச ஆதரவை இராஜதந்திர ரீதியில் வென்றெடுப்போம் என உறுதி கூறுகின்றோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக போராட்டத்தில் கொல்லப்பட்ட ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள், தலைவர்கள், 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்கள் ஏனைய தமிழ்த் தேசிய வீரர்கள் உட்பட அத்தனை பேரையும் நெஞ்சிலே நிறுத்தி அவர்களின் மரணங்கள் மீது சத்தியம் கூறுகின்றோம். நிச்சயமாக அவர்கள் கண்ட கனவு தமிழ் மக்கள் தங்களை தாங்களே ஆளக் கூடிய தீர்வினை வென்றெடுத்தே தீரும்.

தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்க முதலமைச்சர் தலைமையில் நாம் உழைப்போம். தமிழர்களின் தாகம் தமிழீழ தாயகம் என்றார்.

**வடக்கு மாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின்**

இலங்கை எனது நாடு. நானும் இலங்கையன். தமிழ் என் தாய் மொழி. இஸ்லாம் என் வாழ்க்கை நெறி. முஸ்லிம் என் அடையாளம். தமிழரும் சிங்களவரும் என் சகோதரர்கள். இந்தத் தேசத்தில் நான் மிகச்சுதந்திரமானவன், என் தேவைகளை, என் அபிலாசைகளை பொது நலனின் அடிப்படையில் ஒழுங்கமைக்கும் முழுமையான உரிமை எனக்கு இருக்கின்றது.

இப்படி நான் என்னை அடையாளப்படுத்தவும் அதன் அடிப்படையில் வாழ்வதற்கும் எனக்கு இருக்கும் உரிமையே சம உரிமை, சுதந்திரம் என நான் விளங்கியிருக்கின்றேன்.

ஓர் இனம் இன்னொரு இனத்தை அடக்கியாள நினைக்கின்ற போது, அடிமைப்படுத்த நினைக்கின்ற போது, தனியுரிமை கோர நினைக்கின்ற போது, யாரோ தீர்மானித்தவற்றை எம்மீது திணிக்கின்றபோது சுயநிர்ணயம் என்பது பறிக்கப்படுகின்றது.

அவ்வாறு சுயநிர்ணயம் பறிக்கப்படுகின்ற பல இனத்துவங்கள் வாழ்கின்ற ஒரு தேசத்தில் நல்லிணக்கம் எப்படி ஏற்படும். அமைதி எப்படி ஏற்படும். நிலையான அபிவிருத்தி எப்படி சாத்தியப்படும்.

எல்லா வகையான அடக்குமுறைகளும் மிகக் கொடியன. அதே அளவிற்கு ஆயுத ரீதியான வன்முறைப் போராட்டங்களும் மிகவுமே ஆபத்தானவை. ஆயுதப் போராட்டங்கள் இந்த நாட்டில் எல்லா இனங்களையும் பாதிப்புக்குள்ளாக்கியது.

வடக்கில் கொடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது உரிமைப் போராட்டத்திலிருந்து வெருண்டோடிவிடவில்லை. இதற்குச் சாட்சியாக அறுதிப் பெரும்பான்மையோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் வட மாகாண சபையின் ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்கள்.

இந்த வெற்றி மக்களின் வெற்றி. மக்கள் ஜனநாயக வழிமுறையை மீண்டும் ஒரு தடவை உறுதி செய்திருக்கிறார்கள். இதனை இந்த தேசமும் சர்வதேசமும் மிகச்சாதகமாகப் புரிந்து கொள்ளவேண்டும். இன்னுமொரு அழிவுக்குள் இந்தத் தேசத்தை திருப்பி விடக்கூடாது. மக்களின் அபிலாஷைகள் வெற்றிபெறவேண்டும் என்றார்.

**தொகுப்பு:-**
**எஸ்.ஆர்.கரன், உ.சாளீன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு செயல், அது செய்யத்தகுதி உள்ளதாக இருப்பின், அதை நன்றாகச் செய்து முடியுங்கள்.

*– ஆங்கிலப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மின்சார எரிமேடைகளை தடுத்து நிறுத்த வேண்டும்

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல. கால வகையாலே என்ற நன்னூலின் பொருள் அற்புதமானது.

கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றங்கள் அவசியம். அந்த மாற்றங்களை ஏற்றுக் கொள்ளப் பழகிக் கொள்வது இயைபுடைய வாழ்க்கைக்கு அவசியமானதாகும் என்பதை மேற்போந்த நன்னூல் பாடல் நமக்கு சொல்லித் தந்துள்ளது.

அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி ஒபாமாவின் அடிப்படையே மாற்றம் என்பதுதான்.

எனவே மாற்றம் என்பது கால அசைவில் தேவையானது.

அதற்காக மனித வாழ்வின் அடிப்படைக ளையே மாற்றிவிட்டால் வாழ்வின் அர்த்தம் தொலைந்து விடும்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதில் மாற்றம் செய்ய முடியுமா? இல்லவே இல்லை. எனவே அனைத்தையும் மாற்றுதல் என்ற பொருளில் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற பாடல் வரிகள் அமையவில்லை.

மாறாக மாற்ற வேண்டிய–மாற வேண்டிய இடங்களில் மாற்றத்தை ஏற்றுக் கொள்ளப் பழகுதல் என்பதையே நன்னூல் எடுத்தியம்புகிறது.

அவ்வகையில் தமிழர்களாகிய எமக்கு சில பண்பாட்டு அடையாளங்கள் உண்டு. அதே போல சமயம் சார்ந்த அடையாளங்களும் எங்கள் வாழ்வை ஒழுங்குபடுத்துகின்றன.

குறிப்பாக சைவ சமயம் சார்ந்த ஒருவரின் வாழ்வில் அவரின் பிறப்பு முதல் அந்திமம் வரையிலான அனைத்து அங்கங்களிலும் சமயச் சடங்குகளும் கிரியை முறைகளும் அடங்கியுள்ளன.

இதில் சைவ சமயி ஒருவர் இறந்துவிட்டால், அபரக் கிரியை மூலம் இறந்தவரை இறையுலகிற்கு அனுப்புவதற்கான சடங்குகள் நடைபெறும்.

அதற்காக இறந்தவருக்கு அபிஷேகம் செய்து உடலை மயானத்திற்கு எடுத்துச் சென்று அக்கினி குண்டத்தில் இட்டு, அவரை புனிதமாக இறையுலகிற்கு அனுப்புவதென்பதே நடைமுறையும் மரபும் ஆகும்.

இறந்தவரின் உடலை எரிப்பதற்காக பசுச் சாணத்திலான விறாட்டி பயன்படுத்தப்படும். இவ்வாறு எரியூட்டப்பட்ட விறாட்டி திருநீறு எனும் சிவசின்னமாகுவதால் அதனைக் கூத்தபிரான் தன்னுடலில் பூசி திருநடனம் புரிகிறார் என்கிறது புராணங்கள்.

இதன் காரணமாகவே "…காடுடைய சுடலை பொடி பூசி என்…" என்று அடையாளப்படுத்தினார் சம்பந்தர்.

எனினும் சமகாலத்தில் விறாட்டியில் உடலைத் தகனம் செய்யும் நடைமுறை இல்லாது போயிற்று.

பரவாயில்லை அக்கினியில் உடல் ஏற்றப்படுகிறது என்பதில் ஆறுதல்.

ஆனால் இப்போது மின்சாரத்தில் உடலை எரிக்கும் நடைமுறை கொண்டுவரப்படுவது தான் வேதனையிலும் வேதனை.

சைவசமய அனுட்டான நடைமுறையில் மின் எரி மேடையில் உடலை வைத்து கருக்குவது மகா பாவத்தனம்.

இது எங்கள் சைவ சமய நடைமுறைக்கு ஒவ்வாதது.

இத்தகைய நடைமுறைகளை சைவ சமயத் தலைவர்களும் சைவ சமய அமைப்புகளும் கண்டிக்க வேண்டும்.

அதேநேரம் உடலை எரிப்பதற்காக மரங்கள் தறிக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுக்கள் இருக்குமாயின் அதற்கான மாற்று வழி, சாணத்திலான விறாட்டியை தகனத்திற்குப் பயன்படுத்தும் நடைமுறையை மீண்டும் கொண்டு வருவதாகும்.

இதன் மூலம் மாடு வளர்ப்போர் நல்ல வருமானம் பெற முடியும். விறகும் மீதப்படுத்தப்படும். சைவ சமய அடிப்படைத் தத்துவங்களும் பாதுகாக்கப்படும்.

எனவே மின்சார எரி மேடைகள் அமைக்கப்படுவதை தடுப்பது சைவ சமயிகளின் தலையாய கடமை.

# அவுஸ்திரேலியா சென்ற 79 பேர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்

## அவுஸ். உயர்ஸ்தானிகராலயம் அறிக்கை

படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு சென்று புகலிடம் கோரிய 79 இலங்கை பிரஜைகளை அந்நாடு இலங்கைக்கு திருப்பி அனுப்பியுள்ளதாக கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் இதுவரை சுமார் ஆயிரத்து 400 பேர் அங்கிருந்து திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஆயிரத்து 100 பேர் தமது சுயவிருப்பத்தின் பேரில் இலங்கை திரும்பியதாக உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு வருபவர்கள் விசா அனுமதியின்றி வரும்போது அவர்கள் எந்த காரணத்திற்காக அங்கு வந்தனர் என்பது குறித்து மதிப்பீடு செய்யப்படும் என அவுஸ்திரேலிய குடிவரவு மற்றும் குடியுரிமை திணைக்களம் தனது உத்தியோகபூர்வ அறிக்கையில் கூறியுள்ளது.

அவர்களின் கூற்றுக்கள் சர்வதேச கடப்பாடுகளுக்கு அமைவாக இல்லாது போனால் அவர்கள் தமது சொந்த நாடுகளுக்கு திரும்ப வேண்டியது கட்டாயமானது.

இலங்கை உட்பட வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் செல்லுபடியான விசா இன்றி படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு வந்தால் அவர்களுக்கு அங்கு நீண்டகாலம் தங்க இடமளிக்கப்பட மாட்டாது என்ற புதிய சட்டத்தை அந்நாடு கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி வெளியிட்டது.

அவர்கள் உடனடியாக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படமாட்டார்கள். அவர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் வரை அவர்கள் பப்புவா நியூகினியா அல்லது நாவுறு ஆகிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் மூன்று தசாப்த கால போர் 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டபோதும் இலங்கையில் இருந்து செல்லும் புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இதனால் கடுமையாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அழுத்தங்களை அவுஸ்திரேலிய அரசாங்கம் எதிர் நோக்கியது.

அதேவேளை இலங்கையில் இருந்து படகுகள் மூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சித்த சுமார் ஆயிரத்து 500 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோத குடியேற்ற வாசிகளை தடுக்கும் நோக்கிலான கண்காணிப்பு பணிகளில் அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கை கடற்படையுடன் நெருக்கமாக செயற்பட்டு வருகிறது.

அத்துடன் இலங்கை மக்கள் படகுகள் மூலம் அவுஸ்திரேலியா செல்வதை தவிர்ப்பதற்கான விழிப்புணர்வுத் திட்டங்களையும் அந்த நாடு செயற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# கௌரி விரத கால சொற்பொழிவுகள்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் கௌரி விரத கால விசேட சிறப்பு சொற்பொழிவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படவுள்ளது.

இதன்பிரகாரம் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சொற்பொழிவுகள் இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கயிலநாயகி பரந்தாமன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய சுதுமலை சிவன் கோவிலில் முற்பகல் 11 மணிக்கு சைவப் புலவர் நித்திய தசிதரன் வழங்கும் சிவலிங்க வழிபாடு எனும் தொனிப் பொருளில் சிறப்பு சொற்பொழிவு இடம்பெறும்.

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நண்பகல் 12 மணிக்கு சைவப்புலவர் கந்த சத்தியதாசன் வழங்கும் **கௌரி விரத மகிமை** எனும் தொனிப்பொருளில் சிறப்பு சொற்பொழிவு நடைபெறும்.

மாகியப்பிட்டி ஸ்ரீ தெட்சணா கைலாய சிவன் தேவஸ்தானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு சைவப்புலவர் நித்திய தசிதரன் வழங்கும் **11 அர்த்த நாதீஸ்வர வடிவம்** எனும் தொனிப் பொருளில் சிறப்பு சொற்பொழிவு இடம்பெறும். (அ-2)

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



## ஞானத்திலிருந்து விடுதலை

ஞானத்திலிருந்து விடுதலை என்பது சிந்தனையளவில் மட்டுமே உள்ள, அனுபவபூர்வமாகக் கிடைக்காத ஞானத்திலிருந்து வெளிவருதல் என்பதாகும். குவிந்துள்ள ஞானத்தின் அனுபவமே நம்மிடம் இல்லை. இது நமது சொந்த அனுபவமாக ஆகும்வரை, இத்தகைய ஞானத்தின் குவியல் என்பது நமது ஆன்மீக வளர்ச்சிக்குத் தடையாகவே ஆகிவிடும். ஆகவே அனைத்து கற்றலுமே, கல்லாதது ஆகிவிடுகின்றது. நாம் ஞானத்திலேயே அடைபட்டு விடக்கூடாது; ஆனால் அதனை அனுபவிப்பது நோக்கியே நமது குறிக்கோள் இருக்கவேண்டும். இதுவே உண்மையான கண்டுபிடித்தல் ஆகும். நமது ஆன்மீகப் பயணத்திற்கு நமக்குத்தேவை பகவானின் அருள். நமக்குத் துணை செய்யத் திறந்த மனதுடன் இருப்பதே நமது ஞானம். அனுபவமாக ஆகாவிட்டால் அது நமது அகம்பாவம் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்கு உரமாக அமைந்தது. நமது ஆன்மீக வளர்ச்சியைத் தாமதப்படுத்தும். ஒரு நல்ல ஞானியென்பவர், அனைத்து மக்களைக் காட்டிலும் மிகவும் பணிவானவராக இருப்பவர்.

# 55 குடும்பங்களுக்கு முதல்வர் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தீவிர நோயினால் பாதிக்கப்பட்ட 55 பேரின் குடும்பங்களுக்கு வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நிதியுதவி வழங்கியுள்ளார்.

இந்நிதியுதவி வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் வடக்கு மாகாண சபையில் இடம்பெற்றுள்ளது.

மாகாண சபையின் அமர்விற்கு முன்னதாக முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனாலும் ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியினாலும் இந்நிதி உதவித் தொகை வழங்கப்பட்டது.

இவ் உதவித் தொகை வழங்கப்பட்டதன் பின்னரே மாகாண சபை அமர்வு இடம்பெற்றது. (அ-4)

# விசாரணைகள் பிற்போடப்பட்டுள்ளன

(பருத்தித்துறை)

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த மத்தியஸ்தர் சபை விசாரணைகள் பிற்போடப்பட்டுள்ளன.

அவ் விசாரணைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக வடமராட்சி மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் எஸ். நற்குணலிங்கம் அறிவித்துள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை மேற்படி கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர் களுக்கு பரீட்சை நடைபெறவிருப்பதனாலேயே இவ் விசாரணைகள் மேற்குறித்த திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளன. (அ-9-10)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மனதில் உறுதி வேண்டும்



❖ பிறருக்காகச் செய்யும் சிறுமுயற்சி கூட, நமக்குள் இருக்கும் சக்தியை எழுப்பி விடும். பிறருக்காக சிறு நன்மையை மனதில் நினைத்தாலும், சிங்கத்தின் பலம் நமக்கு உண்டாகும்.

❖ செல்வமும், புகழ்வாழ்வும், உலக போகமும் சில நாட்களுக்கே. எனவே ஆசையில் மூழ்கிக் கிடக்க வேண்டாம். கடமையைச் செய்து களத்தில் உயிரை விடுவது தான் நன்மை.


❖ ஒருவரிடமும் பொறாமைப்படக் கூடாது. நன்மை செய்ய விரும்புவோருக்கு கை கொடுக்கத் தயாராகுங்கள். உலக உயிர்களை நேசித்து சகோதர உணர்வுடன் வாழுங்கள்.

❖ ஏழைகள், பலமற்றவர்கள், நோயுற்றவர்கள் ஆகியோரிடம் சிவனைக் காண்பவனே உண்மையில் கடவுளை வழிபடும் பேறு பெற்றவன். கோயிலில் சிவனைக் கண்டு வணங்குபவனை விட, சேவை செய்பவனையே சிவன் நேசிக்கிறார்.

❖ உள்ளத்தில் உறுதி, பேச்சில் இனிமை, இதழில் புன்னகையோடு எப்போதும் இருங்கள். மனத்தளர்வு தரும் விடயங்களில் மனதைச் செலுத்துவது கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெனிஸ் சம்பியன்சிப் போட்டியில் செரீனா அரையிறுதிக்கு தகுதி



டபிள்யூ.டி.ஏ., சம்பியன்ஷிப் டெனிஸ் தொடரின் அரையிறுதிக்கு, அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் முன்னேறினார்.

டபிள்யு.டி.ஏ., தரவரிசையில் 'ரொப்-8' இடத்தில் உள்ள வீராங்கனைகள் பங்கேற்கும், சம்பியன்ஷிப் டெனிஸ் தொடர், துருக்கியில் உள்ள இஸ்தான்புல் நகரில் நடைபெற்று வருகிறது. எட்டு வீராங்கனைகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, லீக் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

'ரெட்' குரூப்பில் இடம்பெற்றுள்ள உலகின் முதல்நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், முதலிரண்டு போட்டியில் ஜேர்மனியின் கெர்பர், போலந்தின் அக்னிஸ்கா ரத்வன்ஸ்கா ஆகியோர் வீழ்த்தினார். மூன்றாவது மற்றும் கடைசி போட்டியில் செரீனா, செக்குடியரசின் பெட்ரா கிவிட்டோவாவை எதிர்கொண்டார். அபாரமாக ஆடிய நடப்பு சம்பியன் செரீனா 6-2, 6-3 என்ற நேர் செற் கணக்கில் 'ஹெட்ரிக்' வெற்றியை பதிவு செய்து, 'ரெட்' குரூப்பில் இருந்து முதல் நபராக அரையிறு திக்கு முன்னேறினார்.

மற்றொரு 'ரெட்' குரூப் போட்டியில் ஜேர்மனியின் கெர்பர் 6-2, 6-2 என்ற நேர் செட் கணக்கில், போலந்தின் அக்னிஸ்கா ரத்வன்ஸ்காவை வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்தார். மூன்று போட்டியில் தோல்வி அடைந்த ரத்வன்ஸ்கா, அரையிறுதி வாய்ப்பை இழந்தார். தலா ஒரு வெற்றி, தோல்வியுடன் கெர்பர், கிவிட்டோவா உள்ளனர். இவர்கள் மோதும் கடைசி போட்டியில் வெற்றி பெறும் வீராங்கனை, அரையிறுதிக்கு தகுதி பெறுவார்.

'வையிட்' குரூப்பில் நடைபெற்ற போட்டியில், சீனாவின் லி நா 6-3, 2-6, 6-3 என்ற செற் கணக்கில், சேர்பியாவின் ஜெலினா ஜான்கோவிச்சை தோற்கடித்தார். ஏற்கனவே இத்தாலியின் சாரா இரானியை வீழ்த்திய லி நா, தொடர்ந்து இரண்டாவது வெற்றியை பதிவு செய்து, அரையிறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்திக் கொண்டார். இரண்டு போட்டியில் தோல்வி கண்ட இரானியின் அரையிறுதி வாய்ப்பு முடிவுக்கு வந்தது. தலா ஒரு வெற்றி, தோல்வியுடன் பெலாரசின் விக்டோரியா அசரன்கா, சேர்பியாவின் ஜான்கோவிச், அரையிறுதிக்கு தகுதி பெற போராடுகின்றனர்.

# சுவிஸ் டெனிஸ்; காலிறுதிக்கு பெடரர் தகுதி

சுவிட்சர்லாந்தில் நடைபெற்றும் வரும் டெனிஸ் போட்டியின் காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார் ரோஜர் பெடரர். சுவிட்சர்லாந்தின் பசல் நகரில் டென்னிஸ் போட்டிகள் நடைபெறுகிறது. உஸ்பெஸ்கிஸ்தானை சேர்ந்த டேனிஸ் இஸ்டோமினுடன்- ரோஜர் பெடரர் மோதினார.

நீண்ட போராட்டத்துக்குப் பின்னர் 4-6, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் பெடரர் வெற்றி பெற்று காலிறுதியை எட்டினார். இந்த சீசனில் நடைபெற்ற டெனிஸ் தொடர்களின் லீக் சுற்றுகளில் தரவரிசையில் பெடரர், தன்னைவிடக் கீழ் உள்ளவர்களிடம் தோற்று போட்டியிலிருந்து வெளியேறுவது தொடர்ந்து வருகிறது. எனவே நடைபெறும் போட்டியிலாவது பட்டம் வெல்ல வேண்டும் என ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து உள்ளனர்.

# லாரா பொன்டிங்கை விட சச்சின் சிறந்த வீரர் – டெய்ட்

கிரிக்கெட்டில் இருந்து சச்சின் டெண்டுல்கர் 200ஆவது டெஸ்ட் போட்டியோடு ஓய்வு பெறுகிறார். சொந்த மைதானமான மும்பையில் டெண்டுல்கர் தனது கடைசி போட்டியில் விளையாடுகிறார். இந்நிலையில் சச்சினின் ஓய்வு குறித்து பல வீரர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

லாரா, ரிக்கி பாண்டிங்கை விட சச்சின் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று அவுஸ்திரேலியா வேகப்பந்து வீரர் ஷான் டெய்ட் கூறியுள்ளார்.



மும்பையில் நடைபெற்ற தனியார் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஷான் டெய்ட் இவ்வாறு தெரிவித்தார்.

எனது கிரிக்கெட் வாழ்க்கையில் நான் பார்த்த வரையில் பிரையன் லாரா, ரிக்கி பொண்டிங்கை விட சச்சின் டெண்டுல்கரே சிறந்த துடுப்பாட்ட வீரர். அவர் எல்லா சூழ் நிலையிலும் சிறப்பாக ஆட கூடியவர். அவருக்கு எதிராக பந்து வீச்சியது பெருமை யான விடயம். அவரது விக்கெட் மிகப்பெரி யது. எதிர்வரும் ஆசஷ் தொடரில் அவுஸ்தி ரேலிய அணி வெல்லும்.

இவ்வாறு அவர் கூறினார்.

வேகப்பந்து வீச்சாளரான ஷான் டெய்ட் 160.7 கிலோ மீற்றர் வேகத்தில் பந்து வீசி அதிவேக பந்துவீச்சாளர் என்ற சிறப்பை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கென்யா – இலங்கை ருவென்ரி-20 ஆட்டங்கள்

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள கென்ய அணி, இலங்கை 'ஏ' அணிக்கெதிராக 7ருவென்ரி ருவென்ரி போட்டிகளில் பங்குபற்றவுள்ளது. இதற்கான அறிவிப்பை இலங்கை கிரிக்கெட் சபை விடுத்துள்ளது.

கென்ய அணி உலக ருவென்ரி ருவென்ரி தொடரின் தகுதிகாண் போட்டிகளில் பங்கு பற்றவுள்ள நிலையில் அவ்வணிக்கான பயிற்சிகளாகவும், இலங்கை வீரர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்காகவும் இந்தத் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கவுள்ள இத்தொடரில் இலங்கை 'ஏ' அணியின் தலைவராக டினேஷ் சந்திமால் செயற்படவுள்ளார்.

கென்ய அணி சார்பாக 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தோடு ஓய்வுபெற்ற அவ்வணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் ரிக்கலோ தனது ஓய்விலிருந்து வெளியே வந்து, இத்தொடரிலும், உலக ருவென்ரி ருவென்ரி தகுதிகாண் போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளார்.

### போட்டி அட்டவணை:

முதலாவது போட்டி: ஒக்டோபர் 27 - பிற்பகல் 2.15 - என்.சி.சி மைதானம்

இரண்டாவது போட்டி: ஒக்டோபர் 29: காலை 9.45 - என்.சி.சி மைதானம்

மூன்றாவது போட்டி: ஒக்டோபர் 29: பிற்பகல் 2.15 - என்.சி.சி மைகானம்

நான்காவது போட்டி: ஒக்டோபர் 31: காலை 9.45 - சி.சி.சி மைதானம்

ஐந்தாவது போட்டி: ஒக்டோபர் 31: பிற்பகல் 2.15 - சி.சி.சி மைதானம்

ஆறாவது போட்டி: நவம்பர் 2: காலை 9.45 - என்.சி.சி மைதானம்

ஏழாவது போட்டி: நவம்பர் 2: பிற்பகல் 2.15 - என்.சி.சி மைதானம்

தொடருக்கான குழாம்கள்:

கென்யா: கொலின் ஒபுயா, றாகெப் பட்டேல், மொறிஸ் ஒனுமா, நஹேமியா ஒடியம்போ, ஹிரேன் வரய்யா, ஷெம் கோச்சே, ஸ்டீவ் ரிக்கலோ, றாகெப் அகா, நெல்வன் ஒடியம்போ, எலியா ஒட்டினோ, திரேன் கோன்டாரியா, தோமஸ் ஒடோயோ, குர்தீப் சிங், எமானுவேல் புண்டி, டங்கன் அலன், இர்பான் கரிம்

இலங்கை "ஏ": டினேஷ் சந்திமால், லஹிரு திரிமன்ன, குசால் ஜனித் பெரேரா, மஹேல உடவத்த, ஷெஹான் ஜெயசூரிய, உபுல் தரங்க, அஷன் பிரியஞ்சன, கித்துருவன் விதானகே, அஞ்சலோ பெரேரா, தனுஷ்க குணதிலக, யசோதா லங்கா, நிரோஷன் டிக்வெல்ல, றமிம் றம்புக்வெல்ல, சத்துரங்க டீ சில்வா, அகில தனஞ்சய, சீக்குகே பிரசன்ன, மிலிந்த சிரிவர்தன, இசுரு உதான, இஷான் ஜெயரத்ன, கோசல குலசேகர, லஹிரு ஜெயரத்ன, டில்ஹார லொகுஹெட்டிகே, ஜீவன் மெண்டிஸ், ஷமிந்த எரங்க

# இரண்டாம் இன்னிங்சில் சிறப்பாக ஆடுகிறது பங்களாதேஷ்



பங்களாதேஷிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், பங்களாதேஷ் அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2ஆவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் முடிவில் பங்களாதேஷ் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் பங்களாதேஷ் அணி ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

39 ஓட்டங்களுக்கு முதலாவது விக்கெட்டையும், 2ஆவது விக்கெட்டை 55 ஓட்டங்களுக்கு இரண்டாவது விக்கெட்டையும் இழந்த அவ்வணி, 3ஆவது விக்கெட்டுக்காக 157 ஓட்டங்களைப் பகிர்ந்தது. அதன் காரணமாக அவ்வணி முன்னிலையைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக மொமினுல் ஹக் ஆட்டமிழக்காமல் 126 ஓட்டங்களையும், தமிம் இக்பால் 70 ஓட்டங்களையும், ஷகிப் அல் ஹசன் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக நீல் வக்னர் 2 விக்கெட்டுக்களையும், கேன் வில்லியம்சன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடியிருந்த பங்களாதேஷ் அணி 282 ஓட்டங்களைப் பெற்றதோடு, நியூசிலாந்து அணி தனது முதலாவது இனிங்ஸில் 437 ஓட்டங்களையும் பெற்றிருந்தது.

இதன்படி, 7 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் பங்களாதேஷ் அணி 114 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவினைவாதிகள்...

வடக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு நேற்று கைதடியிலுள்ள மாகாண சபைக் கட்டிடத்தில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் பிரிவினையை ஏற்கவில்லை என்பதை சிங்கள மக்கள் உணர வேண்டும். உள்ளக சுயநிர்ணயம ஒரு நாட்டைப் பிரிவுபடுத்தாமல் ஒற்றுமைப் பாதையில் கொண்டு செல்லக்கூடும் என்பதை அரசாங்கமுமசிங்கள மக்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

நாங்கள் ஒன்றுபட்ட நாட்டின் இறைமையை ஏற்கும் அதே நேரத்தல் தேசிய பாதுகாப்பு, சர்வதேச உறவுகள் போன்றவை மத்திய அரசாங்கத்தின் நெறிப்படுத்தலில் நடைபெற வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் அரசியலயாப்பில் எதேச்சாதிகாரத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அந்தஸ்தை நாம் எதிர்கின்றோம்.

எமது எதிர்ப்பு ஜனநாயக ரீதியானது. வன்முறையை நாங்கள் வன்மையாக எதிர்க்கின்றோம். இராணுவத் துணையுடன் நடத்தப்படும் அரச சார்பு குடியமர்த்தல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மீள்குடியேற்றம் என்ற போர்வையில் வடமாகாணத்தில் என்றுமே குடியிருக்காத மக்களைக் கொண்டு வந்து குடியேற்றுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். வடகிழக்கு மாகாணங்களில் திட்டமிட்டு கட்டாயமாக மக்கள் பரம்பலை மாற்றி அமைக்கும் அரசுசார் நடவடிக்கைகளை நாம் எதிர்க்கின்றோம்.

இலங்கை நாட்டின் குடிமக்கள் என்பதில் சிங்கள மக்கள் பெருமை கொள்வதற்கு ஒப்பாக நாங்களும் பெருமை அடைகின்றோம் என்பதைச் சிங்கள மக்கள் தங்கள் மனதிற்கு எடுப்பார்களாக!

ஆனால் நாங்கள் கூட்டுப் பங்காளிகள் என்ற முறையிலேயே அவ்வாறு பெருமை கொள்கின்றோமே தவிர குத்தகைக்காரர்களாக அல்ல என்பதையும் அவர்கள் மனதில் நிலைநிறுத்திக் கொள்வார்களாக!

இதுசம்பந்தமாக 23 மே 2009 அன்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அவர்களுக்கும் தற்போதைய ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற சம்பாசனையில் ஜனாதிபதி தமிழர் பிரச்சினையைத தீர்க்க பதின் மூன்றாவது திருத்தச் சடடத்திற்கு அப்பால் செல்ல முடிவெடுத்துள்ளதாக கூறியதை இத்தருணத்தில் நினைவுறுத்துகிறேன்.

இன்னொரு முக்கியமான விடயததை இங்கு குறிப்பிட வேண்டும். அதாவது வடமாகாணத்தில் இருந்து 1990ஆம் ஆண்டில் பலவந்தமாக அகற்றப்பட்டதால் மற்றைய மாகாணங்களில் குடியேறிய முஸ்லிம் மக்களை மீண்டும் குடியமர்த்துவதற்கான நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளில் நாம் ஈடுபடுவோம்.

போரானது எம்மையும் சிங்கள மக்களையும் வெகுவாகப் பாதித்துள்ளமை எல்லோராலும் மனத்திற்கு எடுக்கப்பட வேண்டும். அதேநேரம்தமிழ்பேசும்மக்கள்முகம் கொடுத்து வரும் மிகக் கொடூரமான பாதிப்புக்களை சிங்கள மக்களும் உலக மக்களும் புரிந்து கொள்ள வேண்டும். மேலும்மேற்படி அவலங்களைப் பெருக்கி, சினங்களை வளர்த்துக் கொண்டு போவதில் அர்த்தமில்லை.

பிரபாகரன் பற்றி தேர்தல் காலத்திலநான்கூறிய ஒரேயொரு வார்த்தை எவ்வாறு சில மக்கள் மனதில் உற்சாகத்தையும் வேறு சில மக்கள் மத்தியில் கொடுஞ்சினத்தையும் வெளிப்படுத்தியதென்பதை யாவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இதை அறிந்துதான் நான் கெப்பிட்டிபொல திசாவையைப் பற்றி அதே நேரத்தில் கூறி வைத்தேன். எம் ஒவ்வொருவரினதும் காட்சிக் கோணமே இப்பேறபட்ட மனோநிலைகள் என்பதை உணரும் காலம் இப்பொழுது உதயமாகியுள்ளது.

கெப்பட்டிபொல திசாவே என்ற ஒரே மனிதன் எவ்வாறு ஆங்கிலேயர் மத்தியில் வெறுப்பையும் தற்கால சிங்கள மக்கள் மத்தியில் உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளார் என்பதை உணர்ந்து எமது சினங்களைத் தணிய வைக்க நாம் பழகிக் கொள்ள வேணடும்.

போர், போட்டி போன்றவை எம்மை எதிரும் புதிருமாக நிற்க வைப்பன. ஆனால் புரிந்துணர்வும் அன்பும் எம்முள் ஒற்றுமையை வளர்ப்பன.

அரசாங்கத்திற்கும் வட மாகாண சபைக்கும் இடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்த முடியுமானால் ஜனநாயகத்தை எமது வட மண்ணில் நிலை பெறச் செய்யலாம். மக்களின் அவலங்களைப் போக்க ஒருமித்துச் செயலாற்றலாம். நாங்கள் ஒத்துழைப்புக கரத்தை நீட்ட ஆயத்தமாக உள்ளோம்.

உயரிய இராஜதந்திரத்தைக் காட்ட அரசாங்கத்திற்கு இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. நேசகரம் நீட்டுவார்கள் என்று எண்ணுகின்றேன்.

எமது எதிர்த்தரப்பு சகோதரர்களுக்கும் எமது நேசக்கரத்தை நீட்டுகிறோம். அவர்கள் வட மாகாணத்தை முனனேற்ற சர்வதேச ரீதியில் போருககுப் பின் வெற்றிகரமாக கைக்கொள்ளப்பட்ட கொள்கைகளையும் நடைமுறைகளையும் கவனத்தில் எடுத்து தேசிய மற்றும் பிராந்திய கொள்கைகளை உருவாக்க நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். இது சம்பந்தமாக கொள்கைக் கூற்றொன்றை சில வாரங்களில் நாங்கள் முன்வைப்போம்.

எம்மைப் பொறுத்தவரையில் நாம் நாட்டவிருக்கும் அஸ்திவாரக் கற்கள் நீதி, நல்லாட்சி, நம்பிக்கை, சமத்துவம், சுதந்திரம் என்பன வாகும்.

எமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு பாதுகாப்பு, கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றை நோககியே நாம் அமைக்கப் போகும் பாதைகள் செல்வன.

சிங்களப் பொதுமக்களுடனே தான் எமது பாலங்கள் கட்டப்படுவன. நாம் அமைக்கப் போகும் துறைமுகங்கள் எமது தூர தேசத்து உறவுகளையும் நலன் விரும்பிகளையும் எம் அண்டை கொண்டு வருவன.

கலாசாரத்தையும் பண்பாட்டையும் நோக்கியே எமது அழகுசார் செயற்பாடுகள் வளர்க்கப்படுவன. எமது கண்காட்சிகள் எமது அறிவை, எமது மொழியை, எமது புதுமை காணும் இயல்பை நோக்கியே ஆற்றுப்படுத்தப்படுவன.

சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் காலனித்துவப் பிடிக்குள் அமிழ்ந்திருந்த எம் நாட்டு மக்களைக் கரையேற்ற நாம்தான் தலைமைத்துவம் அளித்தோம். வழ்ந்திருக்கும் எம் மக்களைக் கரையேற்ற மீண்டும் நாமே சவால்களை ஏற்றுமுன்னேற உள்ளோம்என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4,6)

# உதைபந்தாட்ட இன்றைய போட்டி

(கரவெட்டி)

வடமராட்சி மாலுசந்தி மைக்கல விளையட்டுக் கழகத்தின் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொற்றாவற்றை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியும் பிற்பகல் 4.30 மணிக்கு ஊரெழு றோயல் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் அணி மோதவுள்ளது. (24)

# இராணுவம் அல்லாத ஒரு...

றது. இதில் முதலமைச்சரின் உரை முதலில் இடம்பெற்றது. இந்த உரையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்திடம் இருந்து பிரிவுபடாத ஒருவர் ஆளுநராக இருக்கும் போது முறையான குடிமக்கள் நிர்வாகம் நடைபெற முடியாது.

இன்றைய ஆளுநர் எவ்வாறு வெளிப்படையாக வட மாகாண தேர்தல் விடயங்களில் பக்கச் சார்பாக நடந்து கொண்டார் என்பது நாடறிந்த விடயம்.

குடிமக்கள் நிர்வாகத்தை உண்மையில் ஜனாதிபதி வரவேற்கின்றார் என்றால் வடமாகாண ஆளுநர்பதவிக்கு தகைமையுடைய இராணுவத்தினர் அல்லாத ஒருவரை நியமிக்க கோருகின்றோம்.

போருக்குப் பின்னரான சூழலில் புனர்நிர்மாணம், புனருத்தாரணம், புனரமைப்பு, அபிவிருத்தி ஆகியவை சம்பந்தமான அனுபவத்தையும் பெண்கள், குழந்தைகள், முதியோர்கள், இளைஞர்கள், முன்னைநாள் போராளிகள் ஆகியோரின் நல்வாழ்வில் கரிசனையையும் கொண்ட ஒருவரையே ஆளுநராக நியமிக்க வேண்டும என வடக்கு மாகாண மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

ஜனாதிபதியின் தற்துணிபு அதிகாரத்தில் உள்நுழைவது எமது நோக்கமல்ல. ஆனால் அபிவிருத்தி வேலைகளில்அனுபவமும் பெண்கள், குழந்தைகள் போன்றோரின் நல்வாழ்வில் கரிசனையுமுடைய ஒருவரையே ஆளுநராக நியமிக்க வேண்டும் என்று இந்த மாகாண மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்பதையும் சொல்லி வைக்க வேண்டியுள்ளது.

ஜனநாயக முறைமையை எம் நிர்வாகத்தினுள் வரவேற்க மேற்கண்ட விடயங்கள் அத்தியாவசியமானவை என்று நாம் கருதுகின்றோம். அதேநேரத்தில் வடமாகாண சபை எப்பேறபட்ட திட்டமிடப்பட்ட மனித, பொருள், வளம் சம்பந்தமானதும், அபிவிருத்தி சம்பந்தமானதுமான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்பதை அடையாளம் காண வேண்டிய அவசிய தேவையும் எமக்குள்ளது.

புலம்பெயர்ந்த எமது உறவுகள் மனித வளம், பொருள் வளம் சம்பந்தமாக எமக்கு அனுசரணைகள் ஈவர் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு.

எமது அறிவு முதிர்ந்த உடன் பிறப்புக்கள் பலர் வெளிநாடுகளை நாடிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு சென்ற காலங்களில் ஆளாக்கப்பட்டனர் என்பது ஊரறிந்த விடயம்.

அவர்களில் பலர் வெளிநாடுகளில் நற்பெயரையும் நற்கீர்த்தியையும் பெற்று வருவது எமக்கு பலத்தையும் மகிழ்வையும் ஊட்டியுள்ளது.

உங்கள் யாவரதும் ஒத்துழைப்பும் உதவியும் எமக்கு அவசரமாகத் தேவையாக உள்ளது. நாம் இழந்த எமது பெருமைகளைத் திருப்பிப் பெற வேண்டும் என்றால் இந்தகைய ஒத்துழைப்பும் உதவியும் அவசியம் என்பதில் எந்தவித மயக்கமும் இருக்கத் தேவையில்லை.

அவர்கள் போரினால் பாதிக்கப்பட்ட எம்மக்களுக்கு உதவி வழங்குவதற்கு ஏதுவாக நடைமுறைச் சாத்திய பொறிமுறை அமைப்பொன்றை ஏற்படுத்த அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

நாம் கேட்பது எம்மை எமது கால்களில் நிற்க வைத்து முன்னேற்ற வேண்டிய உதவிகளையே. வருமானங்களைப் பெருக்கும் வழிமுறைகளை எமக்கு அடையாளம் காட்ட வேண்டுகிறோம். எங்கள் உடன் பிறப்புக்கள் எம்முடன் சொற்ப காலத்திற்கேனும் இங்கு வந்திருந்து முறையாக அபிவிருத்திப் பணிகளில் எம்மை ஈடுபட வைத்துவிட்டுத் திரும்ப வேணடுகினறோம். தொழில்நுட்ப உதவிகளையும் நிதி உதவிகளையும் இது சம்பந்தமாக எமக்கு வழங்கக் கோருகின்றோம்.

இது சம்பந்தமாக தென்னிந்தியத் தமிழர்களின் பங்கை நாங்கள் குறைத்து எடை போடவில்லை. என்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

எம்முடன் இணைந்து எம்மை வழிநடத்த அவர்களின் உதவி தேவையாக இருக்கின்றது.

தென்னிந்திய இளைஞர், யுவதிகளின அரசியல் சார்பற்ற உணர்ச்சி வேகம் எமக்கு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை நான் கூறியே தீரவேண்டும்.

வருங்காலத்தில் தமிழகமும் வட மாகாணமும் பல விதங்களில் ஒத்துழைக்க வேண்டியிருக்கும் என்பதை இங்கு [illegible] என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4,6)

# தனியார் பேருந்து...

கோளாறு காரணமாக பளைப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்துள்ளது. இவ்வாறு நிறுத்தி வைக்கப் பட்ட பேருந்துடன் வேகமாக வந்த ஹீரோ ரக மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி விபத்திற்குள்ளாகி நொருங்கியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரில், ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன், மற்றையவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்படட நிலையில் மரணமடைந்துள்ளார்.

வவுனியா மணிப்புரத்தை சேர்ந்த 37 வயதான ராமச்சந்திரன் விக்னேஸ்வரன் மற்றும் 17 வயதான ரவிச்சந்திரன் விக்னேஸ்வரன் ஆகியோரே இவ்விபத்தில் உயிரிழந்தவராவர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இவ் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பளை பொலிஸார் குறிப்பிட்டனர். (செ-4,85,259)

# அவைத் தலைவரா...

றது. இதன்போது அவைத்தலைவராக சீ.வீ.கந்தையா சிவஞானத்தை கல்வி அமைச்சர் த.குருகுலராஜா முன்மொழிய சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் வழிமொழிந்தார்.

இதனையடுத்து எதிர்ப்பின்றி ஏனைய மாகாண சபை உறுப்பினர்களின் ஏகமனதான தெரிவாக வடக்கு மாகாண சபையின் பேரவைத் தலைவராக ஆளும்கட்சி உறுப்பினர் சிவஞானம் தெரிவு செய்யப்பட்டார்.

அத்தோடு பிரதித் தலைவராக ஆளும் கட்சி உறுப்பினர் அன்ரனி ஜெகநாதனை விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் முன்மொழிய கடற்றொழில் அமைச்சர் ப.டெனீஸ்வரன் வழிமொழிந்தார்.

இதனையடுத்து பிரதித்விசாளராக உறுப்பினர் ஜெகநாதன் போட்டியின்றி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். (செ-4,6)

# வடமாகாண சபை...

க.சிவஞானத்தை முன்மொழிந்தார்.

இதனையடுத்து அமைச்சர் ப.சத்தியலிங்கம் வழிமொழிந்ததையடுத்து ஏகமனதாக தெரிவு இடம்பெற்றது.

அவைத் தலைவராக தெரிவு செய்யப்பட்ட க.சிவஞானம், உத்தியோகபூர்வ ஆடை அணிந்து வந்து முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து தனது பணியை ஆரம்பித்தார்.

இதன்பின்பு அவைத்தலைவர் க.சிவஞானத்தின் உத்தரவின் பேரில் பிரதித் தலைவர் தெரிவு இடம்பெற்றது.

வடக்கு மாகாண சபையின் பிரதித் தலைவராக மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் அனரனி ஜெகநாதனை அமைச்சர் பொ.ஐங்ரநேசன் முன்மொழிய அமைச்சர் ப.டெனீஸ்வரன் வழிமொழிந்தார்.

பிரதித் தலைவரும் ஏனைய மாகாண சபை உறுப்பினர்களால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டதையடுத்து தலைவர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதனையடுத்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் வடக்கு மாகாண சபையின் முதலாவது உரை இடம்பெற்றது. (செ-4,6)

# பொதுநலவாய...

சுக கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட், ரெலோ ஆகிய கட்சிகள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டன. தமிழர் விடுதலைக் கூட்டனி இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவில்லை.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் பொதுநலவாய மாநாட்டில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உரை இடம்பெறலாம் என முன்னதாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இவ் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இக் கலந்துரையாடலில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், புளொட் தலைவா சித்தார்த்தன் உட்பட வடமாகாண சபை உறுப்பினர்களென பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை தமிழக சட்ட சபையில் பொதுநலவாய மாநாட்டை இந்தியா முற்று முழுதாக புறக்கணிக்க வேண்டும்என தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் தீமானம் நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை தனிமைப்படுத்திவிட எவராலும் முடியாது– பா.ஜ.க

இந்தியாவை யாரும் தனிமைப்படுத்தி விட முடியாது என தமிழக பாரதிய ஜனதா கட்சித் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய் நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டை இந்தியா புறக்கணிக்குமானால் இந்தியா தனிமைப்பட்டுவிடும் என இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசம் தெரிவித்திருந்தார்.

இக்கருத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாகவே பா.ஜ.க அறிக்கை வெளியிட்டுள்ள்து. அவ் அறிக்கையில் கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடத்தப்படக் கூடாது. மீறி நடத்தப்பட்டால் இலங்கை தலைமை ஏற்று 2 ஆண்டுகள் செயல்பட வேண்டி வரும். எனவே இந்தியா இலங்கையில் நடை பெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள கூடாது என்று பா.ஜ.க வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில் தமிழக சட்டசபையில் அனைத்து கட்சிகளின் ஆதரவோடு இலங்கையில் நடைபெறும் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றியதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் தீர்மானம் நிறைவேற உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நிலையில் தலைநகர் டெல்லியில் இருந்து இலங்கை தூதர் காரியவாசம் வெளியிட்டுள்ள கருத்து கண்டனத்துக்குரியது. எல்லா முனையிலும் தோற்றுப் போன மத்திய அரசால் எதுவும் செய்ய முடியாது என்ற தைரியத்தில்தான் அவர் பேசி இருக்கிறார்.

எந்த விசயத்திலும் யாராலும் இந்தியாவை தனிமைப் படுத்த முடியாது. பொருளாதாரம், மனித வளம், அறிவியல் வளர்ச்சி என அனைத்து துறைகளிலும் நம்மை சுற்றியே மற்ற நாடுகள் உள்ளன.

சீனா, பாகிஸ்தானை நினைத்து மத்திய அரசு பயப்படுகிறது. இதனால் இலங்கை சீனாவின் தளமாக மாறி வருவதை மத்திய அரசு உணர வேண்டும் வெளிநாட்டு கொள்கையில் துணிச்சலும், சாதுர்யமும்வர வேண்டும் என்றார். (செ-11)




Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(சி-5300)

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062



திருமணத் தேவைக்கான கார் வாடகைக்கு விடப்படும்



தொடர்புகளுக்கு:
0771950228,
021 222 8984
0776152992

இல.44, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (C-5052)



அவுஸ்ரேலியா, பிரித்தானியா, கனடா, அமெரிக்கா
விரும்பிய நாடு சென்று பல இலட்சங்களைச் சம்பாதிக்க!

உல்லாசப் பயணக் கப்பல்கள் & 3ஸ்டார், 5ஸ்டார் ஹொட்டேல்களில்

வேலைவாய்ப்புக்கள்

Work Permit - ஒரு இலட்சம் வரையான வருமானம்
ரி.வி., ஃபிறிட்ஜ், வொஷிங் மெஷின், ஜிம், நீச்சல் தடாகத்துடன் இலவச தங்குமிடம்

IELTS வங்கி வைப்புக்கள் இன்றி யாழ்ப்பாணத்திலேயே விசா



விசேட கடன் வசதிகள்

இலவச விளக்கமும், உடனடி அனுமதியும்
திங்கள் - சனி, காலை 9 - மாலை 5 மணி வரை
சிகரம் அலுவலகம்
27-10-2013 ஞாயிறு - காலை 9மணி வவுனியா நெல்லிஸ்ரார் ஹொட்டேல்
27-10-2013 ஞாயிறு - பி.ப. 2 மணி கிளிநொச்சி சோலைவனம் விடுதி

சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(DAMRO வுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11
நேரடி: 0773 616 798 (சி-5298)


# மரண அறிவித்தல்



பருத்தித்துறை ஊரியவத்தையை பிறப்பிடமாகவும் வராத்துப்பளையையும் உத்திரா்வத்தையையும் வசிப்பிடமாகக் கொண்ட

## விநாசித்தம்பி வேலுப்பிள்ளை

அவர்கள் 24.10.2013 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி பொன்னம்மா அவர்களின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற கந்தையா, அன்னம் அவர்களின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லம்மா, தங்கம்மா, பாக்கியம் அவர்களின் அன்புச் சகோதரனும், கமலாகரன், கமலேந்திரராணி, காலஞ்சென்ற வசந்தராணி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் புஸ்பராணி, செல்வராசா, விவேகானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீபன், பிரியா, தாரணி, சாரங்கன், வஸ்னிதா, அர்ச்சனா, பிரகாஸ், பிரதீபன், வாகிசன், ராகுல் ஆகியோரின் பேரனும் சாதித்தியா, சயின், கபின், அஸ்வின், அபிநாத், கிசான், அப்கரன் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 27.10.2013 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புலோலி வடகிழக்கு,
உத்திராவத்தை, பருத்தித்துறை.

(4355)

தகவல் : குடும்பத்தினர்
021 226 0042


City&Guilds (UK) English Diploma

CITY & GUILDS APPROVED CENTRE

கடந்த 6 மாதங்களில் 35 மாணவர்களிற்குமேல் City&Guilds(UK) English Diploma (A1,B1) பரீட்சையில் சிறந்த, அதிசிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொண்டுசென்றுள்ளனர்

City&Guilds நிறுவனத்தில் (Colombo) ஆசிரிய பயிற்சிபெற்ற ஆசிரியரின் வழிகாட்டலில் வகுப்புக்கள் நடைபெறுகின்றது....

பரீட்சையின் பின்னர் லண்டன் நாட்டின் Diploma சான்றிதழை பெற்று, லண்டன் கல்லூரிகளில் உயர் கல்வியை தொடரமுடியும்.

ஏன் நீங்கள் City&Guilds English இனை தெரிவுசெய்யவேண்டும்???

தனியார் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், வங்கிகள், அரசாங்க உத்தியோகத்தில் பணிபுரிபவர்கள் City&Guilds ஆங்கிலத்தினை படிப்பதனூடாக உலகம் முழுவதிலும் அங்கீகாரத்தை பெற்ற DIPLOMA(UK) சான்றிதழை பெற்றுக்கொள்ளமுடியும்.

எமது நிறுவனம் UK நாட்டின் அங்கீகாரத்தினைப்பெற்று தென்மராட்சி மண்ணில் இயங்கிவரும் தனித்துவமான கல்லூரியாகும்.

Gov.Reg No: TN/DS/UC/0324



WORLD EDUCATION CONSULTANCY
No:377,Sangaththanai, Chavakachcheri
T.P: 0779 265447,021 7200 989

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகமையில்....



மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் மண் விற்பனைக்குண்டு.
4½ ரக்டர் 17500

தொடர்புகளுக்கு:- தீபன்
077 676 6499, 077 759 0792

(சி-5297)



FLC FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH

FRENCH CLASSES

France, Canada, Belgium செல்வோர், சிறுவர்கள்(8-13வயது) French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்..

ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற்கொள்பவரும்.

வடக்கில் இருந்து எம் மாணவர்கள் மட்டுமே கடந்த DELF A1 Exam இல் சித்தி... நேரம்,பணம் வீணாகாது 8 மாதத்தில் DELF Exam எழுதலாம்....

ஆரம்பம் : 09.11.13 Sat at 8am.
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ Hospital க்கு அண்மையில்).

11.11.13 Mon at 4.30pm.
No. 181, 1st Floor, Main Street,
Nelliady. (சோதி வீதி முன்பாக)

0779 789 456

Deutsch, IELTS, B1, Sinhala Classes உம் நடைபெறுகிறது...



நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவிற்கு. PAVING STONES.

உங்கள் இல்லங்கள் நிறுவனங்களை அழகுபடுத்துவதற்கு தேவையான பல்வேறுவடிவமைப்புக்களை கொண்ட நிலப்பதிப்புக்கற்களை யாழ்., வவுனியா, முள்ளியவளை, திருமலை, கிளிநொச்சி போன்ற இடங்களில் உள்ள எமது காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.



(சி-5280)

பிரணவன் என்ரபிறைசஸ். தொடர்பு : 0773818799.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.